# குன்றக்குடித் தலவரலாறு

பிரான்மலைவகை ஐந்துகோவில்
குன்றக்குடி

T10549
R003G05

உ

திருச்சிற்றம்பலம்

# குன்றக்குடித் தலவரலாறு

திருக்கயிலாயபரம்பரை
குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம்
45-ஆவது மகா சந்நிதானம்

திருவருள் திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிக
பரமாசாரிய சுவாமிகள் அவர்களின்
(இத்திருக்கோவில் பரம்பரை அறங்காவலர்)
திருவுளப்பாங்கின் வண்ணம் எழுதப்பெற்று

இந்து அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர் (மதுரை)
திரு. கு. கே. சிதம்பரம் பி.ஏ., பி.எல்., அவர்களால்

I.A.S.
அவர்களின் நினைவாக அன்பளிப்பு.

அருள் தரு. சண்முகநாதப் பெருமான் திருக்கோவில்
...ட்டு விழாவை யொட்டி
...வெளியிடப்பெற்றது.

...ளியீடு :
பிரான்மலை வகை ஐந்து கோவில்கள் - குன்றக்குடி

திருச்சிற்றம்பலம்.

முதற்பதிப்பு: 1-5-1979

எழுதியவர்: மரு. பரமகுரு.

விலை ரூ. 2-50

# பதிப்புரை

குன்றக்குடித் திருத்தலம் "குலகிரி, துங்கக்கிரி, உயர் குன்றக்குடி" என்று அருணகிரிநாத சுவாமிகளால் போற்றிப் புகழப்பெற்றது; குறிஞ்சிக் கிழவனாகிய முருகன் எழுந்தருளி யுள்ள குன்றுதோறாடல் தலங்களில் 'குன்று' என்ற சொல்லையே, முதலாகக்கொண்டு வழங்கப்பெறும் திருத்தலம். ஆதலால் "குன்றுதோறாடலில் முந்தியதாகிய குன்றக்குடி" என்று போற்றுவார் மகான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். மேலும் தமிழகத்தில் உள்ள பழமையான ஆதீனங்களில் ஒன்றாகிய திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணாமலை ஆதீனத்தைத் தன்னகத்தேகொண்டு விளங்கும் திருத்தலம் இது.

இந்த ஆதீனத்தின் 45-ஆவது குருமகா சந்நிதானம் (அருள்தரு. சண்முகநாதன் திருக்கோயில் பரம்பரை அறங்காவலர்) அவர்கள் இத்தலவரலாறு சற்று விரிவாக வெளிவர வேண்டுமெனத் திருவுளம் கொண்டார்கள். அவர்களின் திருவுளப் பாங்கின் வண்ணம் குருவருள் துணைக் கொண்டு இவ்வரலாறு எழுதப்பெற்று வெளி வருகிறது.

இத்தலத்திலுள்ள கல்வெட்டுக்களை, நேர்படி எடுத்து உதவியவர் கரந்தைத் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் திரு. சி. கோவிந்தராசனார் அவர்கள். அந்தக் கல்வெட்டுக்களின் திரண்டசெய்திகள் இதனுள் தரப்பெற்றுள்ளன. அப்பெருமகனார்க்கு உளம்நிறைந்த நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கின்றோம். மேலும் மெய்யன்பர்கள் பாடிப்பரவுதற்கேற்றவாறு திருப்புகழ், திருக்குன்றக்குடிப் பதிகம், மாதப்பதிகம், வாரப் பதிகம் முதலியனவும் இதில் சேர்க்கப்பெற்றுள்ளன.

இந்நூல் வெளிவர உதவிபுரிந்த அனைவருக்கும் விரைவில் அச்சிட்டு உதவிய குன்றக்குடி சண்முகநாதன் அச்சகத்தார்க்கும் உளம் நிறைந்த நன்றி.

இந்நூல் இவ்வகையில் உருவாகத் திருவுள்ளம் பற்றி. வழிகாட்டியருளிய குருவருளைப் போற்றுவோமாக.

ஆதீன அடியவன்

மரு. பரமகுரு

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| தலமும் இருப்பிடமும் | 1 |
| தலப் பெயர்கள் | 2 |
| திருக்கோயில் அமைப்பு | 3 |
| மூர்த்திகள் | 7 |
| தலப்பெருமை | 7 |
| புராண வரலாறு | 8 |
| தீர்த்தங்கள் | 12 |
| அருளிச் செயல்களில் சில | 13 |
| புகழ் நூல்கள் | 18 |
| திருப்பணிகள் | 25 |
| சிற்பங்கள் | 32 |
| அறச்செல்வர்கள் | 33 |
| நாள் வழிபாடு | 38 |
| திருவிழாக்கள் | 38 |
| விரதங்கள் | 46 |
| வேண்டுதல்கள் | 47 |
| சமயப்பணிகள் | 49 |
| பொதுப்பணிகள் | 51 |
| நிர்வாகம் | 53 |
| சொத்துக்களும் வருமானமும் | 56 |
| கல்வெட்டுச் செய்திகள் | 56 |
| வழிபாட்டுப் பாடல்கள் | 65 |
| 1978—79 திருப்பணி | 75 |
| தொகுப்புரை | |



குன்றக்குடி அருள்தரு சண்முகநாதன்

உ

வேலும் மயிலும் துணை

# குன்றக்குடித் தல வரலாறு

## 1. தலமும் இருப்பிடமும்

*முத்திக்த வித்தே! முடிவிலா இன்பே! மும் மூர்த்திகட்கும்*
*தித்திக்கும் தேனே! தெவிட்டாக் கனியே! என் சிற்றறிவாம்*
*புத்திக்கும் ஏற்ற புதுவிருந்தே! தன்னைப் போற்றுவர்க்குச்*
*சித்திக்கும் தோகை யடிவாழ் விநாயக தேசிகனே!*

உலகம் உவப்ப, அழகே உருவாய் இளமையே கோலமாய் அருளே வடிவாய் வான்பழித்து இம்மண் புகுந்து மனிதரை ஆட்கொள்ளும் வள்ளலாக அறுமுகச்செவ்வேள் எழுந்தருளியிருக்கும் தலங்கள் பல. குறிஞ்சிக் கிழவனுக விளங்கும் குமரன் குன்று தோறும் ஆடி அருள் வழங்குகிருன். விண்ணளந்து காட்டி வினை மறைக்கும் திருக்கோயில்கள் நிறைந்தது தெய்வத் தமிழ்நாடு. இத்திருநாட்டகத்தே தண்ணூர் தமிழளிக்கும் தன்பாண்டி நாட்டில் இராமநாதபுரம் மாவட்டம் திருப்புத்தூர் வட்டத்தில் தேவாரப் பதிகம் பெற்ற பாண்டிப்பதிகள் பதினுன்கில் ஒன்ருகச் சிறப்புற்று விளங்கும் திருப்புத்தூருக்குக் கிழக்கே 12. கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது குன்றக்குடி. அருவமும்உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்ருய்ப் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக் கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு அருள்மிகு சண்முகநாதன், கண்கண்ட தெய்வமாய்க் கலியுக வரதனுய் எழுந்தருளியிருக்கும் திருத்தலம் இது.

திருச்சிராப்பள்ளி – இராமேச்சுரம் தென் மண்டல இருப்புப் பாதையில் காரைக்குடிச்சந்திப்புஇருக்கிறது. காரைக்குடிச்சந்திப்பிலிருந்து மேற்கே 10 கி.மீ. தொலைவிலும் காரைக்குடிப் பேருந்து நிலையத்திலிருந்து மேற்கே 8. கி.மீ. தொலைவிலும் காரைக்குடி- திருப்புத்தூர் பேருந்துச் சாலையில் உள்ளது குன்றக்குடி. தமிழ் நாட்டின் எந்தப்பகுதியிலிருந்தும் பேருந்தில், காரைக்குடி வந்தோ, திருப்புத்தூர் வந்தோ இங்கு வரலாம். அடிக்கடி பேருந்து போக்கு வரத்து உள்ள சாலையில் இத்திருத்தலம் அமைந்திருக்கிறது பயணம் செய்வோரின் வசதிக்காகக் குன்றக்குடியில் பேருந்து நிலையம் ஒன்றும் அமைக்கப்பெற்றுள்ளது.

# 2. தலப்பெயர்கள்

மயூர நகரம், அரசவனம். கண்ணபுரம். (கிருஷ்ண நகரம்) மயில் மலை, (மயூரகிரி, சிகண்டிமலை, சிகிமலை, தோகைமலை) குன்றக்குடி, (குன்ருக்குடி, குன்றைநகர், குன்றை) எனப்பல பெயர்கள் இத்தலத்துக்கு வழங்கப்பெறுகின்றன.

## 1. மயூரநகரம்

முருகப் பெருமானது ஊர்தியாகிய மயிலுக்கு இங்குச் சாப விமோசனம் ஏற்பட்டதாலும் அந்தமயில் வழிபட்டுப் பேறுபெற்ற தாலும் மயூரநகரம் என்று பெயர் வந்தது.

## 2. அரசவனம்

அரசமரங்கள் மிகுதியின் காரணமாக இப்பெயர் பெற்றது.

## 3. கண்ணபுரம்

கண்ணபிரான் இங்கு எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீதுபேரன்புகொண்டவராகி வழிபட்டுப் பேறடைந்ததாலும் இங்கு உள்ள முருகப்பெருமானை வழிபடுமாறு பாண்டவர்களை வழிநடத் தியதாலும் இப்பெயர் வந்தது; கிருஷ்ணநகரம் என்றும் குறிக்கப் பெறுகிறது.

## 4. மயில் மலை

முருகனது ஊர்தியாகிய மயில், அப்பெருமானது சாபத்தால் மயிலுருவத்தில் மலையாக இருந்து சாபவிமோசனம் பெற்றதனல் மயில்மலை என்று பெயர் வந்தது. இதனல் மயூரகிரி, சிகண்டிமலை, சிகிமலை, தோகைமலை என்றும் வழங்கப் பெறுகிறது. மலையின் தோற்றம் மயில் வடிவத்திலேயே அமைந்துள்ளது.

## 5. குன்றக்குடி

குன்றினை இடமாகக் கொண்டு குடி அமைந்திருப்பதால் இப்பெயர் பெற்றது குன்றக்குடி, குன்றை, குன்றைநகர் என்ற பெயர்களும் உண்டு.

# திருக்கோயில் அமைப்பு

ஊருக்கு நடுவே வடபால் முகமும், தென்பால் தோகையும் கொண்டு நிற்பதொரு மயிலின் வடிவாக அமைந்து வானுற நிமிர்ந்து நிற்கும் மலையின் மேல் தென்முகம் நோக்கிய இராச கோபுரத்துடன் கம்பீரமாகத் திருக்கோயில் அமைந்துள்ளது. மலையின்மேல் தென் கிழக்கு முகமாக "ஆறுமுக அப்பா!" என்ற மந்திரமொழி எழுத்துக்கள், ஒளியெழுத்துக்களாக (நியான் விளக்கு) மிகப்பெரிய அளவில் ஒளிர்ந்து அன்பர்கள் நெஞ்சங் களிலெல்லாம் ஒளிபாய்ச்சி ஈர்க்குமாறு அமைந்துள்ளது மலை மண்டப மேல் தளத்தில் 14 மீட்டர் உயரத்தில் ஒளிபரப்பிக் கொண்டிருக்கும் பெரிய மெர்க்குரி விளக்கு அமைந்துள்ளது. மலையின் உயரம் அடிவாரத்திலிருந்து 40 மீட்டர்; மலை மீதுள்ள இராச கோபுரத்தின் உயரம் 16. 15 மீட்டர் ஆக, மலைக்கோயிலின் உயரம் 56. 15 மீட்டர். கோயில் அமைந்துள்ள மலையின் பரப்பளவு ஆறேமுக்கால் ஏக்கர். இந்தத் திருக்கோயில் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பெற்றுள்ளது. ஒன்று, மலைக்கோயில் என்றும், மற்றொன்று கீழக்கோயிலென்றும் அழைக்கப்பெறு கின்றது.

மலைக்கோயிலின் மூலவர், அருள்மிகு சண்முகநாதப் பெருமான் சந்நிதிக்கு நேர்கிழக்கே மலையடிவாரத்தில் சந்நிதி விநாயகர் கோயில் உள்ளது. சந்நிதி விநாயகர் கோயிலுக்கு நேர்கிழக்கே அழகிய ஒற்றைக்கால் மண்டபம் காட்சியளிக்கிறது. அதற்கு நேர்கிழக்கே சண்முக நதி என்ற அழகிய திருக்குளம் அமைந்துள்ளது. அருகில் கீழரத வீதியில் பங்குனி உத்தரத்தேர் நிலை கொண்டுள்ளது. அடுத்து வெள்ளி ரதம் நிலைகொண்டுள்ள கட்டடம் உள்ளது. அடுத்து தைப்பூசத்தேர் நிலைகொண்டுள்ளது. தைப்பூசத் தேருக்குப் பக்கத்தில் தங்க ரதம் நிலை கொண்டுள்ள கற்கட்டுக் கட்டடம் உள்ளது. அடுத்துத் திருக்கோயில் முகப்பு பெருவாயில் அலங்கார வளைவு (ஆர்ச்) மிக அழகாக காட்சியளிக் கிறது. தெற்குரதவீதியில் வடபால் திருக்கோயிலின் வழிவழி அறங் காவல் திருக்கயிலாய பரம்பரை திருவண்ணாமலை ஆதீனத்திருமடம் ஓங்கி உயர்ந்து பொலிவுடன் விளங்குகிறது. இந்த ஆதீனம் 500 ஆண்டுகளுக்கு முன்பு திருவண்ணாமலையில் அனுபூதிச் செல்வராக விளங்கி அருட்செங்கோலோச்சிய திருவருள்திரு தெய்வசிகாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகளை ஆதி குருமூர்த்தியாகக் கொண்டு திகழ்வது. ஆதீனத் திருமடத்தின் உள்ளே அருள்பொலிவுடன்

காளத்திநாதர் எழுந்தருளியிருக்கிருர். ஆதீனத் திருமடத்திற்கு நேர் தெற்கே மருதாபுரித் திருக்குளம் உள்ளது. இதன் நான்கு கரைகளிலும் பசுமையான தென்னந்தோப்பு அமைந்துள்ளது. மருதாபுரியின் வடக்குக் கரையில் அரசமரத்தடியில் விநாயகர் எழுந்தருளியுள்ளார். தெற்குரதவீதியும் மேலரதவீதியும் கூடுமிடத்தில் மேற்கே வேத பாடசாலே உள்ளது. மேல வேத பாடசாலே என்று இதனே அழைப்பர். அதற்கு மேற்கே பிள்ளேயார் மண்டபமும், நந்தவனமும், ஆறுகால் மண்டபமும் தெப்பக்குளமும் அழகுற அமைந்துள்ளன. மேலரத வீதியின் கீழ்பால் திருநீலகண்டநாயனுர் கோயில் உள்ளது. மேலரத வீதியும் வடக்கு ரத வீதியும் கூடுமிடத்தில் விநாயகர் கோயில் ஒன்று உள்ளது. இந்தக் கோயிலுக்கு வடக்கே பாறையின் மீது அருட் பொலிவுடன் கிராம தேவதையாகிய வீரமாகாளியம்மன் கோயில் உள்ளது. இந்த வீரமாகாளியம்மன் கோயிலுக்கு ஆண்டுதோறும் பூச்சொரிதல் விழா (பங்குனி உத்தர விழாத் தொடங்குமுன்) சிறப்பாக நடைபெற்று வருகிறது. வடக்கு ரத வீதியிலிருந்து நேர் வடக்கே செல்லும் சாலேயின் மேல்புறம் விநாயகர் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயில் சந்நிதிக்கு கிழக்கே சுரும்பு முரலும் செந்தாமரையடர்ந்துள்ள வையாபுரித்திருக்குளம் அமைந்துள்ளது. இந்தத் திருக்குளத்தில் தான் பங்குனி உத்தரத் தெப்பத் திருவிழா நிகழ்கிறது.

தொடக்கத்தில் கண்ட சந்நிதி விநாயகர் கோயிலேக் மீண்டும் காணலாம். அடுத்துத் திருக்கோயில் முகப்புப் பெருவாயில் அலங்கார வளேவை அடையலாம். இந்த வளேவின் மேலே வள்ளி, தெய்வயானே உடனுய அருள்மிகு சண்முகநாதன் திருவுருவம் அன்பர்களே வரவேற்பதுபோல் அமைந்திருக்கிறது. முகப்புப் பெருவாயில் அலங்கார வளேவுள்ள பெரிய தகரக் கொட்டகையின் வடமேற்கு மூலேயில் மலேயடிவாரத்தில் தோகையடி விநாயகர் கோயில் உள்ளது. மலேயின் நுழைவாயில் தோகைவடிவமாதலால் அதனருகில் வீற்றிருக்கும் விநாயகருக்குத் ''தோகையடி விநாயகர்'' என்று பெயர் வழங்குகிறது. அதற்குத் தென்பால் திட்டி சுற்றி மண்டபமும் மேற்கே யானே மகாலும் உள்ளன. அவற்றிற்கு மேற்கே நகரத்தார்களால் அமைக்கப்பெற்ற தண்டபாணி சுவாமி கோயில் உள்ளது. இக் கோயிலுக்கு மேற்கே தெய்வத்தன்மை பொருந்திய சரவணப் பொய்கைத் தீர்த்தம் உள்ளது.

முதலில் தோகையடி விநாயகரை வழிபட்டு மலைமேல் ஏற வேண்டும். மலையின் நுழை வாயில் மண்டபத்தின் முகப்பில் அழகிய சுதை வேலைப்பாடுள்ள திருவுருங்கள் வரிசையாக அமைந்துள்ளன. அடுத்து கார்த்திகைப் பிள்ளையார் மண்டபம் இருக்கிறது. அந்த மண்டபத்தின் மேற்புறம் கார்த்திகைப் பிள்ளையார் வீற்றிருக்கிறார். அதற்கு மேலே ஒரு மண்டபம் உள்ளது. அதற்கு அடுத்து இருப்பது தண்ணீர்ப் பந்தல் மண்டபம். அதற்கும் மேலே இடும்பன் கோயில் உள்ளது. இடும்பன் கோயிலுக்கு மேலே உள்ள படிக்கட்டுக்கு மேல்புறம் வல்லப கணபதி வீற்றிருக்கிறார். அதற்கு மேலே உள்ளது துரைராஜு மண்டபம். இந்த மண்டபத்திற்கு வந்துசேரும்போது 149 திருப்படிகளைக் கடந்து, மலையின்மேல் சமதளத்துக்கு வந்து விடுகிறோம். இந்த மண்டபத்தின் மேற்குப்பக்கத்தில் கிழக்கு முகமாக இருக்கும் அருணகிரிநாத சுவாமி சந்நிதியையும் வீரபாகு சந்நிதியையும்,நால்வர் சந்நிதியையும் காணலாம். அடுத்திருப்பது இராச கோபுர வாயில். இவ்வாயிலின் இருபக்கங்களிலும் துவார பாலகர் உள்ளனர். வாயிலைக் கடந்து மூலவர் கோயிலுக்குச் செல்லலாம் மூலவர் கோயில் மண்டபங்கள் விரிந்து பரந்து நூற்றுக் கணக்கான தூண்களையுடையவை. இந்த மண்டபங் களின் உயரம் 6 மீட்டர். மூலவர் கோயிலும் அதைச் சுற்றியுள்ள மண்டபங்களும் சேர்ந்து மொத்தப் பரப்பளவு 1118 சதுரமீட்டர். மூலவர்கோயில் திருச்சுற்றில் சொர்ணகணபதி, தென்முகப்பரமன், குழந்தை வடிவேலர், சுமித்திர சண்டேசர், ஆடல் வல்லான் பைரவர், ஆகிய மூர்த்திகளும், நவக்கிரகங்கள் (ஒன்பான் கோள்கள்) கொடிமரம், பலிபீடம், மயிலூர்தி, சூரியன், சந்திரன் ஆகியனவும் உள்ளன சலவைக் கற்களால் அழகுற அமைக்கப் பெற்ற அலங்கார மண்டபத்தில் திருவுலாமூர்த்தி ஆறுமுக நயினர் ஆறுமுகங்களோடும், பன்னிரு கரங்களோடும் மயிலவாகனத்தில் எழுந்தருளி யிருப்பதையும் முத்துக் கந்தரும் சோமாஸ் கந்தரும் எழுந்தருளியிருப்பதையும் கண்டு மகிழலாம். அடுத்து. விசுவநாதர், விசாலாட்சி சந்நிதி இருக்கிறது. மலையின்மேல் அமைந்திருக்கும் மூலவர் திருக்கோயிலில் முருகப்பெருமான் ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் கொண்டு, வடபால் முகமும் தென்பால் தோகையும் கொண்ட மயில் வாகனத்தில் "என்று வந்தாய்" என்னும் திருக்குறிப்போடு, இறங்கி வந்தருளும் ஆயத்த நிலையில், வேண்டுவோர் வேண்டுவதே ஈயும் அருள் வள்ளலாகக் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறார். இப் பெருமானின் வலப்பக்கத்தில் தனிமயில் வாகனத்தில் வள்ளியம் மையாரும், இடப்பக்கத்தில் தனிமயில்வாகனத்தில் தெய்வயானை

அம்மையாரும் எழுந்தருளியிருக்கின்றனர் கருவறையில் இவ்வாறு இறைவனுக்குப் பக்கத்தில் தனித் தனி வாகனத்தில் தேவிமார் வீற்றிருக்கும் காட்சி காணற்கரியது. மயில் வாகனமும், திருவாசி யும் மூலமூர்த்தியின் திருவுருவமும் ஒரேசிலையாக அமைந்துள்ளன. மயில் வாகனத்தின் இரண்டு கால்கள் இந்தத் திருவுருவச்சிலை முழுவதையும் தாங்கி நிற்கின்ற அழகே, அழகு!

மூலவர் திருக்கோயில் மண்டப மேல்தளத்திற்குச் செல்ல மலைக்கோயிலின் தென்புறத்தில் படிவாயில் உள்ளது அதன் வழியாக மேல் தளத்திற்குச் செல்லலாம். இராச கோபுரத்தை அருகில் நின்று கண்டுகளிக்கலாம். மூர்த்திகள் எழுந்தருளியிருக் கும் விமானங்களைக் காணலாம். 'ஆறுமுக அப்பா!' விளக்கு, தளத்தின்மேல் ஓங்கி நிற்கும் மெர்க்குரி விளக்கு ஆகியவற்றையும் அருகில் காணலாம் இந்தமேல்தளத்திலிருந்து தெற்குத்திசையைப் பார்த்தால் காளையார்கோவில் கோபுரவிளக்கு (இரவில்) தெரியும். நாலாபுரமும் பசுமையான வயல்களும், பொழில்களும் நீர் நிலை களும் கைபுனைந்து இயற்ருக்கவின்பெறு வனப்பாக விளங்கும். எம்பெருமான் முருகன் இயற்கை எழிலாக இருப்பவனல்லவா!

## கீழக்கோயில்

மலையடிவாரத்தில் தென் மேற்குத் திசையில் கீழக்கோயில் அமைந்துள்ளது. இங்கு தேனுற்றுநாதரும், அழகம்மையும் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளனர். கிழக்கு மேற்காக நான்கு குடை வரைக் கோயில்கள் உள்ளன. மேற்கேயிருந்து கிழக்கே வரிசை யாக சுந்தரேசுவரர் கோயிலும், அண்ணாமலையார் (மாசிலீச்சுரம்) கோயிலும், மலைக்கொழுந்தீசர் கோயிலும், அடுத்து சண்டேசுவரர் கோயிலும் அமைந்துள்ளன. இங்கு அருமையான புடைப்புச்சிற் பங்கள் நிறைந்துள்ளன. இக்கோயிலுக்குத் தெற்கில் மடைப் பள்ளியும் மேற்கில் பெரிய திருநாள் மண்டபமும் உள்ளன. மேற்கே மலையின்மேல்ஞானியார்மலை என்று வழங்கப்பெறும் இடம் உள்ளது. இங்கு பல்லவர் காலத்துச் சமணப்பாழிகளும் பிராமிக் கல்வெட்டுக்களும் உள்ளன.

# 4. மூர்த்திகள்

## 1. மூலவர்

மலைக் கோயிலில் உள்ள சண்முகநாதன் ஆறுதிருமுகங் களோடும் பன்னிரு திருக்கரங்களோடும் எழுந்தருளியிருக்கிறார், ஆறுமுகக்கடவுள் என்றும், சண்முகநாதன் என்று பெயர் பெற்றுள்ளார். செட்டிமுருகன், குன்றையூருடையான், மயூரகிரி நாதன், மயில்மலைக்கந்தன், குன்றை முருகன், தேனாறுடையான், நேம நாடுடைய வள்ளல் முதலானபல திருபெயர்களைப் உடையவர்,

## 2. தேனாற்றுநாதர்

கீழக் கோயிலின் எழுந்தருளியிருப்பவர்; சுயம்புமூர்த்தி; அகத்தியரால் வழிபாடு செய்யப்பெற்றவர். தேனாற்றங்கரையில் இருப்பதால் தேனாற்றுநாதர் என்று பெயர் பெற்றுள்ளார்.

## 3. அம்மை

அழகம்மை.

# 5. தலப்பெருமை

முருகப்பெருமானது ஊர்தியாகிய மயிலே வடிவமாக அமைந்ததும் அந்த மயிலே வழிபட்டுச் சாரூபம் பெற்றதும் இத்திருத்தலமாகும். கண்ணபிரான், நான்முகன். இந்திரன். வசிட்டர், விசுவாமித்திரர், நாரதர், கருடன், சூரியன், மன்மதன் முதலியோர் வழிபட்டுப் பேறடைந்ததும், அகத்தியர் வழி பட்டதும் பாண்டவர்கள் வழிபட்டதும், கலிங்கநாட்டு இடும்பன் காவடிஎடுத்துவந்து, வழிபட்டு வயிற்றுவலி நீங்கப்பெற்றதும் இத் திருத்தலமாகும்.

இத்தலம் தமிழ் நாட்டிலுள்ள பிரார்த்தனைத் தலங்களில் மேன்மை வாய்ந்தது; நோய் நீக்கம், துன்பநீக்கம், மகப்பேறு முதலியபேறுகளை வழங்கிவருவது; செட்டிநாட்டின் நடுநாயகமாக

விளங்குவது. அதனால் இத்தலத்திற்கு கிழக்கே, மேற்கே, தெற்கே உள்ள நகரத்தார்களின் ஊர்கள் முறையே கீழவட்டகை, மேல வட்டகை, தெற்கு வட்டகை என்று வழங்கப்பெறுகின்றன

அருணகிரிநாத சுவாமிகள் இத்தலத்தைப் பாடும்போது, "வயலிநகர் முருக; செருமுயல் பனிருகர குமர! துன்றட்ட சிட்ட குண குன்றக்குடிக்கு அதிப! என்றும்" "வயலிநகர் குன்றைமா நகர் உறைவோனே!" என்றும் பாடுகிறார்; மேலும் "குலகிரி, துங்கக்கிரி, உயர் குன்றக்குடி" என்றும் போற்றிப் பாராட்டுகிறார்.

*"வீறு சேர்படை வீட்டினில் அதிகம்இவ் வீடாம்!*
*கூறும் முன்பதிக்த அதிகம் ஈது என்னெனக் தறிக்கின்*
*மாறுஇல் தன்பெரும் பதிதறித்து ஏதம் ஓர் வள்ளற்த*
*ஆறு தங்கிய பதியெலாம் உயர்வு எனல் ஆமோ!"*

என்று வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை (மயூரகிரி புராணம்) போற்றுகிறார். "குன்றுதோறாடலில் முந்திய குன்றக்குடி" என்று வண்ணச்சரபம் மகான் தண்டபாணி சுவாமிகள் போற்றுகிறார் "வேதம் கைகூப்பும் குன்றக்குடி" என்பார் குன்றக்குடி மாலை ஆசிரியர் இத்தகைய நிகரற்ற பெருமையுடையது இத்திருத்தலம்.

## 6. புராணவரலாறு
### (மயூரகிரி புராணச்சுருக்கம்)

### மயில் பேறு பெற்றது

சிவபெருமான் தன் சக்தியை இரு பாகமாக்கினார். ஒரு பாகத்தைப் போக சக்தியாகவும் மற்றொரு பாகத்தை முருகக் கடவுளாகவும் ஆக்கினார்; ஞானசக்தியை முருகக் கடவுளுடைய இதயத்தில் பதித்து, இச்சா சக்தியையும் கிரியா சக்தியையும் தந்தார்; ஞானசக்திதரன், குகன், விசாகன் என்னும் திருநாமங்களை முருகனுக்குச் சூட்டினார்; கயிலைமலையின் இடப்பாகத்தில் கோயில் உண்டாக்கி அங்கிருந்து கொண்டு ஐந்தொழிலையும் செய்து வருக என்று முருகனுக்கு அருளிச்செய்தார். மேலும் அழகிய ஒரு மயிலை முருகனுக்கு ஊர்தியாகத்தந்தார்; சயந்தன், அக்கினிமுகன், கிருத்திகாபுத்திரன், பூதபதி, சேனானி, குகன், கேமசூலன், விசாலாட்சன் முதலான அட்டவித்தியேசுவரர்களை முருகனுக்குத்

துணையாக அளித்தார். இங்ஙனம் முருகன் கயிலையின் இடப்பாகத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருந்தார். அந்தக் காலத்தில் முருகப்பெருமானை வழிபடுவதற்காக நான்முகன் முதலிய தேவர்கள் வந்தனர். அவர்கள், கோயில் வாசலில் நின்ற மயிலைக்கண்டனர்; முருகனது ஊர்தியாகும்பேறு அடைவதற்காகச் சூரன், தன்தம்பியரான பதுமன், சிங்கன், தாரகன் ஆகியோருடன் காஞ்சிபுரத்தில் தவம் செய்து கொண்டிருக்கிறான் என்று மயிலிடம் கூறினர். இதனைக்கேட்ட மயில் மனம் வருந்தியது; முருகப்பெருமானைத் தியானித்தது. முருகப்பெருமான் மயிலின் தியானத்துக்குஇரங்கித் தவத்திலிருந்த சூரன் முதலிய நால்வரையும் கணங்களாக்கித் தம் அருகில் வைத்துக்கொண்டார்.

பின்னொரு சமயம் நான்முகன், திருமால் முதலியவர்கள் முருகப்பெருமானை வழிபட அங்கு வந்தனர். அதுபோது கணங்களாக இருந்த சூரனாதியோர், தம் தவத்துக்கு ஊறுசெய்த அத்தேவர்களைப் பழிவாங்கும் எண்ணங் கொண்டனர்; மயிலினிடம் சென்றனர்; நான்முகனின் ஊர்தியாகிய அன்னமும், திருமாலின் ஊர்தியாகிய கருடனும் வேகமாய்ப் பறந்துசெல்வதில் தங்களைக் காட்டிலும் மயிலுக்குத் திறனில்லை என்று குறைவுபடப் பேசியதாகப்பொய் கூறினர். மயில் சினங்கொண்டு அன்னத்தையும் கருடனையும் விழுங்கிவிட்டது. முருகப்பெருமானைவழிபட்டுத் திரும்பிய நான்முகனும் திருமாலும் தங்கள் ஊர்திகளைக்காணாது முருகப் பெருமானிடம் முறையிட்டனர். முருகப் பெருமான் நடந்ததை உணர்ந்தார்; அன்னத்தையும் கருடனையும் கக்கும்படி மயிலுக்கு ஆணையிட்டார். அவ்வாறே மயில் கக்கியது நான்முகனும், திருமாலும் தத்தம் வாகனத்தில் ஏறித்தம் இருப்பிடம் சென்றனர், அடியவர்களுக்கு இடையூறு செய்ததன் காரணமாக மயிலை மலையாகும்படி முருகப்பெருமான் சபித்தார். மயில், குறையிரந்து வருந்தியது முருகப்பெருமான், பாண்டியநாட்டில் திருப்புத்தூருக்குக் கிழக்கே உள்ள அரசவனத்திற்கு (குன்றக்குடிக்கு) ப்போய் அங்கே மலையாக இருக்கும்படியும் அங்கு வந்து தாம் சாப விமோசனம் செய்வதாகவும் அருளிச் செய்தார். பெருமானின் திருவருட் குறிப்பின் வண்ணம் மயில் அரசவனத்துக்கு (குன்றக்குடிக்கு) வந்து, முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் கயிலையை நோக்கியதாக வடபால் முகமும் தென்பால் தோகையுமாகவுள்ள மலைவடிவமாயிற்று.

அதன்பின், கோள் சொன்ன சூரனாதிய நால்வரையும் அசுரர்களாகும்படி முருகப்பெருமான் சாபமிட்டார். அவர்கள்

அசுரர்களாகப் பிறந்து, அறமல்லாதன செய்தனர்; தேவர்களைத் துன்புறுத்தினர். சிவபெருமான் திருவுள்ளப்படி அவர்களை அழிக்க முருகப்பெருமான் ஆறுதிருமுகங்களோடு எழுந்தருளினர் சூரபதுமன் முதலிய அசுரர்களை அழித்தார். பின்னர் முருகப் பெருமான் குன்றக்குடிக்கு எழுந்தருளி மயிலின் சாபத்தை நீக்கி மயிலை இருபாக மாக்கினர்; ஒரு பாகத்திற்குச் சாரூப பதவி அளித்தார்; மற்றொரு பாகத்தை மலையாக இருக்குமாறு அருள் புரிந்தார்; மயில், ஆறுமுகப்பெருமானை வணங்கி இந்த மலையில் எழுந்தருளியிருக்க வேண்டு மென்று வேண்டிக் கொண்டது. மயிலின் வேண்டுகோளுக்கு இணங்கி, மயில் வடிவத்தில் அமைந்த இந்தமலையில் ஆறுமுகப்பெருமான் எழுந்தருளியிருந்து உயிர்களுக்கு வற்றாத, முற்றாத இன்ப வாழ்வை வழங்கி வருகின்றார்.

## (வழிபட்டோர்)

### 1. கண்ணபிரான்

தன் மனைவி சாம்பவதிக்கு மகப்பேறின்மையால் கண்ண பிரான் வருந்தினர். உபமன்னியு முனிவர் கூறியவாறு இத்திருத் தலத்திற்குச் சாம்பவதியுடன் வந்து சண்முகநாதனை வழிபட்டுச் சாம்பன் என்னும் மகனைப் பெற்றார்.

### 2. அகத்தியர்

சிவபெருமான் ஆணைப்படி அகத்திய முனிவர் சண்முக நாதனை வழிபட்டுத் திருவருளுக்கு உரியவரானர்.

### 3. வசிட்டர்

விசுவாமித்திர முனிவரது சாபத்தால் வசிட்டரின் புதல்வர் கள் நீசத்தன்மை யடைந்தனர். வசிட்டமுனிவர் இங்கு வந்து சண்முகநாதனை வழிபட்டுத் தம் புதல்வர்களுக்கு ஏற்பட்டிருந்த சாபத்தை நீக்கிக்கொண்டார்.

### 4. விசுவாமித்திரர்

இங்கு வந்து சண்முகநாதனை வழிபட்டு வசிட்ட முனிவரின் புதல்வர்களுக்குக் கொடிய சாபமிட்ட பாவத்தை நீக்கிக்கொண்டு ஞானத்தையும் பெற்று விளங்கினர்.

## 5. நான்முகன்

சிவபெருமான் திருமுடியைத் தேடிக் கண்டதாகப் பொய் சொன்ன பாவத்தை, இங்கு வந்து சண்முகநாதனை வழிபட்டு நீக்கிக் கொண்டார்.

## 6. கருடன்

சண்முகநாதனை வழிபட்டு, அவர்தம் திருவருளைத் துணையாகக்கொண்டு அமுதத்தைப் பெற்றுக் "கத்துரு', என்பவளின் புதல்வர்களாகிய நாகர்களிடம் அந்த அமுதத்தைத் தந்து, அடிமைப் பட்டிருந்த தனது தாய் விநதையை விடுவித்தான்.

## 7. இந்திரன்

சண்முகநாதனை வழிபட்டு, அவரது திருவருள் கொண்டு மூசி என்னும் அசுரனை வென்றான்.

## 8. சூரியன்

தன் மனைவி உஷாதேவி தன்னை விட்டுப் பிரிந்து குதிரை வடிவத்தோடு குருகண்டத்திலிருந்து வந்தாள். சண்முகநாதனை வழிபட்டு அவரது திருவருளால் உஷாதேவியை அடைந்து இன்புற்று வாழ்ந்தான்.

## 9. மன்மதன்

சண்முகநாதனை வழிபட்டு, அவரது திருவருளால் உலகம் அனைத்தையும வெற்றிகொள்ளும் பேறு பெற்றான்.

## 10. பாண்டவர்

கண்ணபிரானின் ஆணைப்படி: பாண்டவர்கள் இத்திருத் தலம் வந்து சண்முகநாதனை வழிபட்டனர்; பெருமான் திருவருளால் துரியோதனாதியர்களைப் போரில் வென்றனர்.

## 11. நாரதர்

சண்முகநாதனை விதிமுறைப்படி வணங்கி வழிபட்டு இன்பப் பெருவாழ்வு எய்தினர்.

## 12. இடும்பன்

கலிங்க நாட்டைச்சேர்ந்தவர் இடும்பன் இவர் அசுரர் மரபில் பிறந்தவர்; வயிற்று வலியால் மிகவும் வருந்தினர்; வயிற்று

வலியை எவராலும் தீர்க்க முடியவில்லை. குன்றக்குடி (மயூரகிரி)த் தலத்தின் மகிமையை அறிந்தார்; பெருமானைப் பிரார்த்தனை செய்து, கிரவுஞ்ச மலையைக் காவடியாகக் கொண்டு வந்து தம் பிரார்த்தனையைக் நிறைவேற்றினர்; வயிற்றுவலி நீங்கப் பெற்றார்; அதன்பின் இங்கேயே தங்கி மெய்யடியார்களில் ஒருவராய்க் கோயில் கொண்டிருக்கிறார்.

# 7. தீர்த்தங்கள்

சரவணப் பொய்கை, தேனாறு, மயில் தீர்த்தம், சக்தி தீர்த்தம், பாண்டவர் தீர்த்தம், சண்முக நதி முதலிய தீர்த்தங்கள் உள்ளன.

## 1. சரவணப்பொய்கை

இது மலையடிவாரத்தில் தென் மேற்கே உள்ளது. மயிலின் வேண்டுகோளின்படி சண்முகநாதன் இத்தீர்த்தத்தைத் தோற்றுவித்தார். இத் தீர்த்தத்தில் மூழ்கி சண்முகநாதப் பெருமானை உள்ளன்போடு வழிபடுகின்றவர்கள் முன்வினை நீங்குவர்; இம்மைப் பயன்களாகிய நோய் நீக்கம், துன்ப நீக்கம், பிள்ளைப் பேறு, கல்வி, அறிவு, செல்வம், நீடிய வாழ்நாள் முதலிய எல்லாப் பேறுகளும் பெற்று இன்புறுகின்றனர்.

## 2. பாண்டவர் தீர்த்தம்

இந்தத் தீர்த்தம் மலையின் மேற்குப் பக்கத்தில் ஞானியார் மலையில் சுனையாக உள்ளது. பாண்டவர்கள் தம்வழிபாட்டுக்காக அமைத்த தீர்த்தம் இது. ஆதலால் பாண்டவர் தீர்த்தம் என்று வழங்கப்பெறுகிறது.

## 3. தேனாறு

ஊருக்கு வெளியே வடகிழக்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அகத்தியர் தாம் பதிட்டை செய்த சிவலிங்கத்திற்குத் திருமுழுக்காட்டிய தேன், ஆறாகப் பெருகியது. அதனால் தேனாறு என்று பெயர்பெற்றது. "வானாடு ஏழ் நாடும் புகழ் பெற்றிடு தேனாறு" என்று அருணகிரிநாதர் இதைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்,

# 8. அருளிச் செயல்களில் சில

## (வரலாறு)

### 1. மருதுபாண்டியர்

விடுதலைப் போராட்ட மாவீரர்களாக வரலாற்றுப் பெருமை பெற்றவர் மருதுபாண்டியர். இவர் கி. பி. 1780 முதல் 1801 வரை சிவகங்கைச் சீமையை ஆட்சி புரிந்தவர். அந்தக் காலத்தில் மருதுபாண்டியர்க்கு இராச பிளவை ஏற்பட்டு நோயின் கொடுமை அதிகமாகியது. உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். மிகச் சிறந்த மருத்துவங்களாலும் நோயின் கொடுமை மாறவில்லை. அதனல் மிகவும் வருந்தினர். அப்போது முதியவர் ஒருவர் ''அரசே கலியுக வரதராகிய முருகப்பெருமானின் மெய்யன்பர் களால் திருநீறு போடப்பெறின் இந்த நோய் குணமாகும்'' என்று கூறினர். பாண்டியர், ''அப்படியாயின் அத்தகையவர் யார்?'' என்று வினவினர். அந்த முதியவர், ''நாட்டுக் கோட்டைச் செட்டிப்பிள்ளைகளின் கண்கண்ட தெய்வமாக விளங்குபவர் குமரக்கடவுள். அவர்களுள் எவரேனும்ஒருவர் திருநீறு போடுவது நல்லது'' என்ருர், உடனே பாண்டியர் அத்தகைய செட்டியார் ஒருவரை அழைத்து வரும்படி தம் ஏவலாளரைப் பணித்தார். ஆணைப்படி சென்ற ஏவலாளர், எருத்து மாட்டில் ஏற்றிய உப்பு வணிகராக எதிர்ப்பட்ட காடன் செட்டியார் என்பவரை அழைத்து வந்து பாண்டியர் முன் விட்டனர். காடன் செட்டியார் ''என்ன ஆகுமோ?'' என்று அச்சம் கொண்டு சோர்ந்தார். செட்டியார் நிலையறிந்த பாண்டியர் அவருக்குமுகமன் கூறி, ''உமது குலதெய்வமாகிய முருகக்கடவுளை எண்ணி வழி பட்டு நான் இந்தப் பிளவையால் வருந்தாமல் பிழைக்கும் வண்ணம் விபூதி வழங்குவீராக!'' என்று வேண்டினர். செட்டியார் சிறிது மனம்தெளிந்து, ''இந்த மருதுபாண்டியருக்கு அருள்செய்து, என்னை இவ்விபத்தினின்றும் விடுவிக்கவேண்டும் சண்முநாதா!'' என்று எண்ணி வழிபட்டுத் திருநீறு வழங்கினர். பின், பாண்டியர் அங்கிருந்தவர்களை நோக்கி, ''செட்டியாருக்கு உணவு முதலியன அளித்து உபசரித்து வைத்திருங்கள்'' என்று ஆணையிட்டார். அவ்வாறு உபசரிக்கப் பெற்றும், செட்டியார் தம்மனத்தே அச்ச முடையவராய், சண்முகநாதன் திருவடிமலர்களைத் தியானித்து இருந்தார்.

வெகுநாளாகப் பிளவை நோயின் கொடுமையால் உறக்கம் இன்றி வருந்திய மருதுபாண்டியர், அன்றிரவு நன்கு அயர்ந்து உறங்கினர். அதுபோது பாலசந்நியாசி ஒருவர் மயில்தோகை யுடன் வந்து, தம் பிளவையைப் பிதுக்கி ஆணியெடுத்து வாழை யிலையில் வைத்துவிட்டுப் பிளவை வாயில் திருநீறு வைத்ததாகக் கனவு கண்டார்; வெகுண்டு எழுந்து பார்த்தார்; அச்செயல் யாவும் நனவாகவேயிருக்கக்கண்டு மகிழ்ந்து வியந்தார்; உடனே, காடன் செட்டியாரைத் தம் அருகில் வரவழைத்தார்; "அப்பன் நீ, அம்மை நீ; ஐயனும் நீ" என்று செட்டியாரைப் புகழ்ந்தார்; அன்றுமுதல் செட்டியாரை அண்ணன்முறை பாராட்டி பேரன்புடன் அழைத்தார்; தமதுஅருகில் சிலநாளாவது இருக்கும் படி வேண்டிக்கொண்டார்; செட்டியார் மகிழ்ந்து பாண்டியர் அருகில் தங்கி வந்தார். சிலநாட்களில் பாண்டியர் நிறை நலம் பெற்று விட்டார்; காடன்செட்டியாரை நோக்கி" அண்ணு! நமது குலதெய்வமாகிய குமரக்கடவுள் இருக்கும் தலம் எது?" என்று வினவினர். அந்தத்தலம் "குன்றக்குடியென்னும் மயூரகிரி" என்று செட்டியார் கூறினர். உடனே மருதுபாண்டியர், செட்டியாருடன், தம் பரிவாரங்கள் புடைசூழக் குன்றக்குடி நோக்கிப் புறப்பட்டார்; குன்றக்குடி வந்து சண்முகநாதனை வழிபட்டு மகிழ்ந்தார்; பல திருப்பணிகள் செய்வித்தார். அன்று முதல் மருதுபாண்டியர் குன்றக்குடி சண்முகநாதனைக் குலதெய்வமாகக் கொண்டு வழி பட்டு வந்தனர். இவர் செய்த திருப்பணிகளைத் "திருப்பணி" என்ற தலைப்பில் காணலாம்.

> *"நினைத்த மருது மகிபதி நெஞ்சில் நிறைந்து, தொல்லை*
> *வினைத்திரள் மாற்றிய கந்தன் மயில் வரை"*

என்று மயூரகிரிக் கோவை இச்செய்தியைப் பேசுகிறது.

## 2. பாடுவார் முத்தப்பர்: (கி. பி. 1810 . . . . .)

நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்குக் குல தெய்வமாக விளங்குபவர் குன்றக்குடி சண்முகநாதன்; அதனல் 'செட்டி முருகன்' என்னும் சிறப்புப்பெயர் பெற்றவர். சேனபதிசுவாமிகள் என்பவர் சண்முகன் மீது நிறைந்த பத்திமையுடையவராக இருந்தார். சேனபதி சுவாமிகளின் பேரன்பைப் பெற்றவர் பாடுவார் முத்தப்பர். இவர் நாட்டுக்கோட்டை நகரத்தார்மரபினர். சண்முகநாதன் மீது மாருத அன்புபூண்டவர். ஒருமுறை சேனபதி

சுவாமிகள், சண்முகநாதனை வெள்ளிமலை வாகனத்தில் திருவீதி யுலாச் செய்வித்தார். அந்தக் காலத்தில் மழையின்மையால் நாடெல்லாம் வறட்சிநிலவியது. திருவீதியுலாவின்போது சேனுபதி சுவாமிகளுடன், பாடுவார் முத்தப்பரும் உடன் வந்துகொண்டு இருந்தார். அப்போது சேனுபதி சுவாமிகள், முத்தப்பரை நோக்கி, "நாடெல்லாம் மழையில்லாமல் வறட்சியாக இருக்கிறது' ஆண்டவனை மழை வேண்டி ஒரு பாடல் பாடுங்கள் என்று கூறினர். பாடுவாரின் பக்தி வாய் மலர்ந்தது!

பெருமழை பொழிந்தது; ஊர் செழித்தது; தொடர்ந்துமழை! திருவீதியுலா நிகழ்ச்சி தடைப்பட்டது; உடனே முத்தப்பர் மழையை நிறுத்த மற்றொரு பாடல் பாடினர்;

*வந்து மழை பொழியும் வானே! வெஞ் சூர்தடிந்த*
*கந்தர் திருவிழாக் காலத்தில்,- தொந்தரையாய்*
*நீர்த்துளியை ஊற்றிவிடல் நேர்த்தியல! மாற்றிவிடு!*
*கீர்த்திவரும் காட்(டு) என் மொழி கேள்!*

பாடல் நின்றது; மழையும் நின்றது; திருவீதியுலாச் சிறப்பாக நிகழ்ந்தது! மக்கள் மகிழ்ந்தனர்! பாடுவார் முத்தப்பரின் பெருமையும், சண்முகநாதன் அருளும் அனைவரையும் வியப்படையச் செய்தன!

## 3. அருட்டிரு நரசிம்ம பாரதி சுவாமிகள்

இன்றைக்கு ஏறத்தாழ எழுபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் சிருங்கேரி ஜகத்குரு அருட்டிரு. நரசிம்மபாரதி சுவாமிகள் சேது (இராமேச்சுரம்) யாத்திரை சென்றார். வழியில் குன்றக்குடியில் வியாசபூசை செய்வதற்காகத் தங்கினர், அப்போது மழையின்மை யால் திருக்குளங்களில் குளிப்பதற்குப் போதுமான தண்ணீர் இல்லை. சுவாமிகள் மனம் வருந்தியது. சுவாமிகள் சண்முகநாதன் சந்நிதிக்குச் சென்று, பஞ்சாட்சரப் படிப்பக்கம் நின்று ஆறு (சமஸ்கிருதம்) சுலோகங்கள் சொல்லி வழிபட்டார். இரவே நல்ல மழை பெய்தது! குளங்களில் நீர் நிறைந்தது! அந்தச் சுலோகங் கள் இன்னும் எழுத்து வடிவில் உள்ளன.

## 4. மழவைராயனேந்தல் சுப்பிரமணிய பாரதியார்

இவர் அந்தணர்; பெரும் புலமையுள்ளவர்; அக்காலத்துச் சிவகங்கை மன்னர், இராமநாதபுரம் மன்னர் அவைகளில் பாடி,

சிவிகை பெற்ற புகழாளர். புதல்வர்ப் பேறின்றி மனம் மிக வருந்தினர். ஒருநாள் குன்றக்குடிக்கு வந்து சண்முகநாதன் சந்நிதியில் புதல்வர்ப் பேறுவேண்டி ஒருநாள் உண்ணு நோன்பிருந்தார். அன்று ஒரே பகல் பொழுதில் பெருமானுக்கு நூறு திருவிருத்தம் கொண்ட 'மயூரகிரிநாதர் பிள்ளைத் தமிழ்' என்ற நூலினை இயற்றி பெருமானை வழிபட்டார். அதன்பின் இவருக்கு இரண்டு மைந்தர் பிறந்தனர். இவர் வாழ்க்கையும் சிறந்தது.

> *"புத்ரனை வேண்டிப் புனிதமாய் ஓங்கு*
> *மயில்மலை யதனை வலம்சூழ்ந்து ஒருநாள்*
> *உயர்சந் நிதிஉற்று உபவாசம் இருந்து*
> *உள்ளத் துணர்ந்து அன்று ஒருபகல் பொழுதில்*
> *பிள்ளைத் தமிழ்க்கவி ப்ரபந்தம் இஃது இயற்றிக்*
> கந்தர்தம் அருளால் கண்என இரண்டு
> மைந்தரைப் பெற்று வாழ்வில் சிறந்தனன்
> *அகிலம் எங்கும் அதிசயித்து உவக்கும்*
> *மகிமைசேர் சுப்பிர மணிய பாரதியே!"*

என்னும் மயூரகிரிநாதர் பிள்ளைத்தமிழ் சிறப்புப் பாயிரவரிகள் இந்தச் செய்தியைப் புலப்படுத்துகின்றன. இந்த நிகழ்ச்சி 10) ஆண்டுகளுக்கு முற்பட்டது.

## 5. செந்திவேல்

தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் அருகே உள்ள சிற்றூர் கீழப்பரம்பை என்பது. இவ்வூரில் வாழ்ந்து வருபவர் சுந்தரவேலு முதலியார். இவரது மகன் செந்தில்வேல் ஏழு வயது (1973 ஆம் ஆண்டில்) உள்ள சிறுவன். பிறவியிலேயே ஊமை. தங்கள் மகன் ஊமையாக இருக்கிறுனே என்று அவனது தாயும், தந்தையும் வேதனைப்பட்டனர். சிறுவன் உரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவன். எனவே அவன் பிறந்த உரோகிணி நட்சத்திர நாள்தோறும் குன்றக்குடி சண்முகநாதனை வழிபாடு செய்து கொள்ள அவனது தாயார் நீலாயதாட்சி அம்மாளும், தகப்பனுர் சுந்தரவேலு முதலியாரும் நேர்த்திக் கடன் வைத்திருந்தனர்; செந்திவேலுவின் தாத்தா சொக்கலிங்கம் முதலியார் சிறுவனை அழைத்துக்கொண்டு பதினெரு முறை தொடர்ந்து குன்றக்குடி வந்து சண்முகநாதனை வழிபட்டுத் திரும்பினர். பன்னிரண்டாவது

முறை உரோகிணி நாளன்று செந்தில் வேலுவை அழைத்துக் கொண்டு, சொக்கலிங்க முதலியார் குன்றக்குடிக்கு வந்தார். வையாபுரித் திருக்குளத்தில் தாத்தாவும் பேரனும் குளித்துவிட்டு சண்முகநாதன் சந்நிதிக்குப் புறப்பட்டனர். சொக்கலிங்க முதலியார் இருகரங்களையும் சென்னிமேற் குவித்துக்கொண்டு "ஓம் முருகா! ஓம் முருகா!!" என்று கூறிய வண்ணமே மலைமீது ஏறிச்சென்றார், பேரன்செந்தில்வேல் அவரைப்பின் தொடர்ந்தான். சொக்கலிங்கமுதலியார் சண்முகநாதனைவழிபட்டார். அவர்தன்னை மறந்தார், 'ஓம்முருகா!' 'ஓம்முருகா!' என்று அவர்வாய்தொடர்ந்து உச்சரித்துக் கொண்டிருந்தது. பின், தன் பேரனை நோக்கி 'ஓம் முருகா! ஓம் முருகா!' என்று சொல்லும்படி அவர் கூறினார். சிறுவன் தன் தாத்தாவை ஏற இறங்கப் பார்த்தான். அவன் முதுகைத் தட்டிக்கொடுத்து 'ஓம் முருகா!' என்று சொல்லும்படி மீண்டும் கூறினார்! அப்போது ... ... சண்முகநாதன் திருமுன்பில் தீபாராதனை தொடங்கியது! ஆலயமணி ஒலித்தது! சொக்கலிங்க முதலியார் சிறுவனையே கூர்ந்து நோக்கினார்; செந்தில்வேல் நா அசையத்தொடங்கியது! மெதுவாக, இனிமையாக 'ஓம் முருகா' என்ற மந்திர ஒலி செந்தில்வேல் வாயிலிருந்து வெளிப்பட்டது! சொக்கலிங்க முதலியாரின் மகிழ்ச்சிக்கு அளவில்லை; சண்முக நாதனை நெஞ்சுருகி வழிபட்டார். அங்கே இருந்த அருச்சகர்கள் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தனர்! சண்முகநாதன் கருணையே கருணை! அன்று 'ஓம் முருகா' என்று பேசத் தொடங்கிய செந்தில்வேல் இப்போது நன்றாகப் பேசும் ஆற்றல் பெற்றிருக் கிறான். இந்த நிகழ்ச்சி 1973 ஆம் ஆண்டு சூன் திங்கள் 28 ஆம் உரோகிணி நாளன்று நிகழ்ந்தது; கண்கண்ட காட்சி!

*வீர மருது பிள்ளைநோய் தீர்த்த விறல் மருந்தே!*
*சீரலை வாயில் குருபரர் நாவைச் செழிக்கவைத்த*
*பேரருள் போல்இன்று செந்தில்வேல் தன்னையும் பேசுவித்தாய்*
*ஆறு முகஅப்பா! குன்றக் குடியோங்கும் அற்புதமே!*

- குன்றக்குடி ஆறுமுகப்பெருமான் பாமாலை

## 6. 45ஆவது குருமகா சந்நிதானம் திருவருள்திரு தெய்வ சிகாமணி அருணாசலதேசிக பரமாசாரிய சுவாமிகள்

1975–ஆம்ஆண்டு தமிழ்நாடெங்கும் மழையின்றித் தவிக்க நேரிட்டது. அப்பொழுது தமிழ்நாடு தெய்வீகப் பேரவைத் தலைவராக மகா சந்நிதானம் எழுந்தருளியிருந்தார்கள். குன்றக்குடி

விசாகத் திருநாள் அண்மித்துவிட்டது. ஆதீனக் கொலுமண்டபத்தில்–நீராழி மண்டபத்தில் தூயநீர் நிரப்பி, சண்முகநாதனை அங்கு எழுந்தருளச்செய்து அபிடேக, ஆராதனை செய்வது வழக்கம். நீராழி மண்டபத்தில் நிறைப்பதற்கு, திருமடத்துத் தோட்டக் கிணற்றில் தண்ணீர் எடுப்பது வழக்கம். அந்தக் கிணற்றிலும் மழை வறட்சியால் தண்ணீர் இல்லை. விசாகத் திருவிழாவிற்கு இரண்டு நாள்களே இருந்தன. திருமடத்து முகப்பில் விழாவின் பொருட்டு மிகப் பெரிய கீற்றுக்கொட்டகையும் அமைத்தாயிற்று; விழாப்பணிகள் சுறுசுறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. தண்ணீருக்குத்தான் வழியில்லை! அன்று மகா சந்நிதானம் திருமடத்து மாடியில் அலுவலக அறையில் சோர்வாகக் காணப்பட்டார்கள்; திருமுகத்தில் வேதனை நிழலாடியது. "விசாகத்திற்கு வழக்கமாக எடுக்கும் திருமடத்துத் தோட்டக் கிணற்றிலும் தண்ணீர் இல்லையே! வேறு எங்கேயிருந்தும் நல்ல தண்ணீர் கொண்டுவரவும் இயலாத நிலை ஏற்பட்டு விட்டதே! ஊரும் நாடும் தவிக்க நேரிட்டு விட்டதே! அருள்புரியக் கூடாதா சண்முகநாதா!" என்று சொல்லிக் கண்ணீர் சொரிந்தார்கள். அப்போது பிற்பகல் 4-30 மணி. மாலை 6 மணி ஆயிற்று! கருமேகங்கள் எங்கிருந்து வந்தனவோ தெரியவில்லை. பெருமழை பொழிந்தது! குன்றக்குடிப் பகுதியெல்லாம் செழித்தது! மறுநாள் காலையில் திருமடத்துத் தோட்டக் கிணற்றில் தண்ணீர் ஊறத் தொடங்கிற்று. மறுநாளும் மழை! கிணறு நிரம்பியது! வழக்கம் போல் யாவும் நடைபெற்றன! மகா சந்நிதானத்தில் ஒரேமகிழ்ச்சி. அன்பர்கள், பெருமான் திருவருளை நினைந்து மகிழ்ந்தனர்!

## 9. புகழ் நூல்கள்

### 1. திருப்புகழ்

அருணகிரிநாத சுவாமிகளால் (கி. பி. 15–ஆம் நூற்றுண்டு) அருளிச்செய்யப்பெற்ற திருப்புகழ்ப்பாக்களில் எட்டுப்பாடல்கள் குன்றக்குடித் தலத்திற்குரியனவாய் உள்ளன. 'பன்னிருகரகுமர' என்று பெருமானை அழைக்கிருர். சண்முகநாதனின் தோற்றப் பொலிவை இதன் மூலம் அறியலாம்.

*"வகைவகைபு கழ்ந்து வாசவன்*
*அரிபிரமர் சந்த்ர சூரியர்*
*வழிபடுதல் கண்டு வாழ்வருள் பெருமாளே"*

என்று சண்முகநாதன் திருவருட் பெருமையைப் போற்றுகிருர்;

*வானுடு புகழ்நாடு தேனுறு புடைசூழும்*
*மாயூர கிரிமேவு பெருமானே!*

என்று பெருமான் மயூரகிரியாகிய குன்றக்குடி மலையில் அமர்ந்துள்ள நிலையையும் பாடுகின்றார்.

## 2. மயூரகிரி புராணம்

வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை அவர்களால் 200 ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பெற்றது இது. வடமொழியிலுள்ள மயூரகிரி மான்மியத்தின் மொழி பெயர்ப்பு. பதின்மூன்று சருக்கங்களும் 589 திருவிருத்தங்களும் உடையது, சைவசித்தாந்த உண்மைகளைத் தெளிவாகவும் அழுத்தமாகவும்உரைப்பது; சண்முகநாதன் பெருமையை விரித்துரைப்பது. சண்முகநாதனுக்கு உகந்த நோன்புகள் குறித்து முறையாகவும், விளக்கமாகவும் எடுத்து விளக்குவது. சொல்நயமும் பொருள்நயமும் சிறந்தது. இவ்வருமையான நூலுக்கு 95 ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணம் வித்துவ சிரோமணி. ந. ச. பொன்னம்பல பிள்ளை யென்னும் பெரும்புலவர் பொழிப்புரை எழுதியுள்ளார். இதன் முதற்பதிப்பு (கி.பி. 1885) நூன்முகத்தில், "இம்மையில்வேண்டியபயன்களையும், மறுமையில் முத்தியின்பத்தையும் அடைய விரும்புவோர் இதனைச் (மயூரகிரி புராணத்தை) சுப்பிரமணியாலயங்கடோறும் மெய்யன்போடு ஓதல், கேட்டல் செய்வார்களாயின் அவர்கள் அப்பயன்களை ஒரு தடையின்றிப்பெறுவார்களென்பது நிச்சயம்" என்று பொழிப்புரைகாரர் குறிப்பிட்டுள்ளார்.

## 3. மயூரகிரிக் கோவை

இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான் சர்க்கரைப்புலவர் குமாரர் சாந்துப் புலவர் இயற்றியது. மயூரகிரிப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது; 536 கட்டளைக் கலித்துறைகள் உடையது. இப்புலவர் மருதுபாண்டியரின் அவைக்களப் புலவராக விளங்கியவர். மருதுபாண்டியரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்நூல் இயற்றப்பெற்றது.

*"செந்திரு மார்பன் மருதுக ராதியன் செப்புகென*
*மைந்தர்,செல் வத்தொடு, மாஞானம் வேண்டி மயூரகிரிப்*
*பைந்தமிழ்க் கோவையைப் பாடினன் சர்க்கரைப் பாலன்எங்கள்*
*இந்திரன் சாந்து மகிபால வாலக ஈச்சுரனே!*

என்பது மயூரகிரிக்கோவையின் பழைய சிறப்புப்பாயிரச்செய்யுள், இந்த நூல் (கி. பி. 1798) காளயுக்தி ஆண்டு தைத்திங்கள் 27-ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று அரங்கேற்றப் பெற்றது. இந்தக் கோவை பாடிய சாந்துப் புலவருக்கு மருதுபாண்டியர் ஆடையும் பொன்னும் காளையார்கோயிலுக்கு அருகில் உள்ள "புலவன் மருதங்குடி" என்ற கிராமத்தையும் வழங்கியுள்ளனர். இந்நூல் சாந்துப்புலவரின் பெரும்புலமைக்கு முத்திரையாக விளங்குவது. சண்முகநாதன் அருளாற்றலை வியந்து பாராட்டுவது. மருது பாண்டியர்க்கும் குன்றக்குடிக்கும் உள்ள தொடர்பை அறிந்து கொள்ளப் பெருந்துணை புரிவது.

## 4. தினகவிதை

மல்லையூர் அழகிய சிற்றம்பலக்கவிராயர் குமாரர் குழந்தைக் கவிராயர் இயற்றியது. இவர் 18-ஆம் நூற்றுண்டினர் என்று கூறுவர். குன்றக்குடி சண்முகநாதன்மீது நாள்தோறும் ஒவ்வொரு பாடல் இயற்றியதன் தொகுப்புநூல். ஆதலால் 'தின கவிதை' என்று பெயர் பெற்றது. நெஞ்சை உருக்கும் அருமையான சந்தப்பாடல்கள்! மொத்தம் 5117 பாடல்கள் இரண்டுதொகுதிகளாக வெளி வந்துள்ளன. இதனை 1956-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டு தமிழுலகத்திற்கு வழங்கியிருக்கிறது.

## 5. குன்றக்குடிப் பதிகம்

பாடுவார் முத்தப்பர் (கி. பி. 1810 இல் தோன்றியவர்) இயற்றியது. சண்முகநாதனின் அலங்காரத் தோற்றத்தைக் கம்பீரமாக எடுத்துரைப்பது.

## 6. குன்றக்குடி சண்முகநாதப்பெருமான் பிரபந்தத் திரட்டு

மகான், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (கி. பி, 1839-1898) இயற்றியது; சிற்றிலக்கியங்களில் ஒன்றுன கலம்பகம், சந்தயாப்பில் அமைந்த வண்ணப்பாடல்கள், திருப்புகழ்ப்பதிகம், துதிப்பதிகங்கள், வகுப்பு என ஐந்துபிரிவால் அமைந்தது. நம் 45-ஆவது மகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளப்பாங்கின் வண்ணம் குன்றக்குடித்திருக்கோயில் வெளியீடாக 9-12-68 இல் வெளியிடப் பெற்றுள்ளது.

## 7. மயூரகிரிநாதர் பிள்ளைத் தமிழ்

மழவைராயனேந்தல் சுப்பிரமணிய பாரதியார் இயற்றியது. 100 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பெற்றது. நூலாசிரியர் தம் பக்தியுணர்வில் பூத்த பாமலர்கள் இவை. மகப்பேறு வேண்டி ஒருபகல் பொழுதிலே நூறு பாடல்கொண்ட இந்நூலை இயற்றினர் என்பது குறிக்கத் தக்கது.

## 8. மயில்மலைப் பிள்ளைத்தமிழ்

வீர. லெ, சிந்நயச் செட்டியார் (கி. பி. 1855–1900) பாடியது. இதன் முதற்பதிப்பு கி. பி. 1885 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. சண்முகநாதனையும், குன்றக்குடித் திருத்தலத்தையும் போற்றும் சிறந்த நூல்.

## 9. மயூரகிரிக் கலம்பகம்

தருமபுர ஆதீன வித்துவ சிரோமணி அமராவதிபுதூர் வயி. நாக. ராம. அ. இராமநாதன் செட்டியார் (கி. பி. 1855–1944) இயற்றியது. புலமை நயமும் கருத்துச் செறிவும், குன்றக்குடிச் செவ்வேளைப் பாடும் முறையும் போற்றத்தக்கது.

## 10. மயில்மலை முருகன் முறையீடு

இந்த நூலும் முன் குறித்த ஆசிரியர் பாடியது. 150 அடி ஆசிரியப் பாவால் இயன்றது.

## 11. மயூரகிரிக் காதல்

மெய்ஞ்ஞான வேலுக் கவிராயர் இயற்றியது. 80 ஆண்டு களுக்கு முன் தோன்றிய நூல். சிறந்த சொல்லாட்சியும், நிறைந்த பொருள் நயமும் உடையது. சண்முகநாதன் மீது ஆசிரியர் கொண்டிருந்த காதலின் சின்னம் இது.

## 12. மயில்மலைச் சந்த விருத்தம்

காரைக்குடி ராம. கு. இராமநாதன் செட்டியார் குமாரர் சொக்கலிங்கம் செட்டியார் (கி. பி. 1855–1930) இயற்றியது. பிற்காலத்தில் ஸ்ரீமத்சொக்கலிங்க ஐயா என்று புகழ்பெற்ற அருட் பெரியார் இவர். அருணகிரிநாத சுவாமிகளின் திருப்புகழ் போன்ற சிறந்த நூல். இது 80 ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பெற்றது.

## 13. குன்றைச் சிலேடை வெண்பா

இந்த நூலும் மேற்கண்ட (ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா) பெரியார் இயற்றியதே. 100 சிலேடை வெண்பாக் கொண்ட நூல் இது. புலமை ஆற்றலும் பொருட் செறிவுமுடைய அழகிய நூல்; 80 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

## 14. குன்றைக்குடிக் காவடிச் சிந்து

உஞ்சனை வித்துவான் ஆ. முத்தையா பிள்ளை இயற்றியது. 80 ஆண்டுகளுக்குமுன் எழுந்த நூல். சண்முகநாதப்பெருமானின் பாதாதிகேச வருணனை பாடிப்பாடி மகிழத்தக்கது.

## 15. குன்றக்குடி சண்முகநாதர் உலா

சிலேடைப்புலி வேம்பத்தூர் பிச்சுவையர் (கி. பி. 1910க்கு முன்னிருந்தவர்) இயற்றியது. இத்தலத்தில் நடைபெறும் திருவிழா சிறப்புக்களையும் அறம்புரிந்த பெரியோர்களையும், பழைய பழக்க வழக்கங்களையும், சண்முகநாதன் அருளாற்றலையும் தெளிவாக வும் அழகாகவும் நயமாகவும் கூறும் நூல், இதனைக் குன்றக்குடிக் கோயிலின் வரலாற்றுக் காவியம் என்றே கூறலாம்.

## 16. குன்றுக்குடிக் காவடிச் சிந்து

சண்முகநாதபுரம் அருணசலம் செட்டியார் குமாரர் சிதம்பரம் செட்டியார் இயற்றியது. 70 ஆண்டுகளுக்கு முற்பட்டது, பாடப் பாட இனிக்கும் நூல்.

## 17. மயூரகிரி சண்முகப் பிரபந்தம்

மதுரகவி ஆண்டவன் முத்தய்யப் பாவலர் இயற்றியது. இந்தப் பிரபந்தத்தில் (1) மயூரகிரி சண்முகப் பிரபந்தம் (2) திரு விளையாடல் பதிகம் (3) பராக்கிரமப்பதிகம் (4) ஆண்டருள் என வேண்டுதல் (5) மாதப்பதிகம் (6) வாரப்பதிகம் (7) போற்றி மடக்குப்பதிகம் (8) சரணப்பத்து (9) சந்தவருகைப் பதிகம் (10) முருகர் அனுபூதி (11) மயூரகிரி அந்தாதி (12) வெண்பாமாலை (13) அத்துவித பஞ்சரத்தின வெண்பா (14) எக்காலக்கண்ணி (15) மயூரகிரித் திருப்புகழ் (16) நாமாவளி (17) கீர்த்தனைகள் ஆகிய பதினேழு நூல்கள் குன்றக்குடி சண்முகநாதனைப் பற்றிய தாக உள்ளன. இவை அனைத்தும் 60 ஆண்டுக்கு முன் எழுந்தவை.

(1) மயூரகிரி சண்முகப் பிரபந்தத்தில் பதினோர் ஆசிரிய விருத்தங்கள் உள்ளன. இந்த 11 விருத்தங்களும் மெய் யெழுத்தே இல்லாமல் பாடியிருப்பது அரிய யாப்பு முறைமை. எல்லா நூல்களுமே பத்திமையுடையார்க்கு இன்பம் அளிப்பன.

## 18. அ. குன்றுக்குடி தோகையடி விநாயகர் துதிக்கை மாலை

## ஆ. குன்றுக்குடி சண்முகநாதன் சந்தமணி மாலை

## இ. வீரமாகாளியம்மையார் பலபாமாலை

இந்த மூன்று நூல்களும் குன்றுக்குடி எம். கணபதியா பிள்ளையால் இயற்றப் பெற்றவை. இவை, இவரியற்றிய சத்தப் பிரபந்தம் என்ற தொகுப்பு நூலுள் உள்ளன. இதில் சித்திரக் கவிகள் நிறைந்துள்ளன. இறையன்பில் பொங்கித் ததும்பின பாடல்கள் இவை. 50 ஆண்டுகளுக்கு முன் எழுந்த நூல்கள்

## 19. மயூரகிரியுலா

பாலகவி. வே· இராமனுதன் செட்டியார் பாடியது. இஃது இத்தல புராணச் செய்திகளின் பிழிவாகவும், சண்முகநாதன் அருளாற்றல்பொழிவை அழகுபட விரித்துரைப்பதாகவும், யாற் றொழுக்காக அமைந்துள்ளது. சொல்நயமும் பொருள்நயமும் சிறந்திருக்கும் நூல். இந்நூலாசிரியர் (சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்) இற்றைக்கு 45 ஆண்டுகளுக்கு முன்னால் தம் பதினெட்டாம் ஆண்டு நிறைவுக்கு அறிகுறியாகப் பாடியது. பதினெட்டுவயதில் இப்படியொரு நூலைப் படைப்பது அரிய செயல். கருவிலே திருவுடைய பெரியார் இவர் என்பதைச் சொல்லாமற் சொல்லிக் கொண்டிருக்கிறது இந்த நூல்.

## 20. குன்றக்குடிச் சுப்பிரமணியர் தோத்திரப் பதிகம்

பாலகவி. வே. இராமனுதன் செட்டியார் இயற்றியது. 47 ஆண்டுகளுக்கு முன், தம் பதினாறும் ஆண்டு நிறைவின் அறிகுறி யாகப் பாடிய நூல் இது. எளிமையும், இனிமையும் நிறைந்த தோத்திரநூல்.

## 21. சுப்ரஹ்மண்ய பஜநோத்ஸவ பத்ததி

A. S. கணபதி சுப்ரமண்ய தீட்சிதரால் இயற்றப்பெற்றது. அவ்வளவும் நல்ல இசைப் பாடல்கள். 42 ஆண்டுகளுக்கு முற்பட்ட நூல்.

## 22. மயூரகிரிநாதர் ஷட்ரத்நமாலிகை:

குன்றக்குடி சி. இராம பாகவதர் இயற்றியது. 48 ஆண்டு களுக்கு முன் இயற்றப் பெற்றது.

## 23. மயூரகிரிக்கும்மி

குன்றக்குடி சி, இராம பாகவதர் இயற்றியது.

## 24. குமார பஞ்சரத்னம் :

பொன்னம்பலசிவம் பாடியது. அருமையான தோத்திரப் பாடல்கள் அடங்கியுள்ளன.

## 25. அக்கரமாலை

பொன்னம்பலசிவம் பாடியது. சிறந்த நூல்.

## 26. குன்றக்குடி மாலை

திருவண்ணாமலை ஆதீன வித்துவான் புதுவயல் வெ. பெரி. வீர சோமசுந்தரம் செட்டியார் பாடியது. குன்றக்குடிப் பெருமை களை 30 வெண்பாக்களில் மிகச்சிறப்பாகக் கூறும் நூல்.

*"செட்டி குடிகாத்த செட்டிகுடி; சேவடியை*
*எட்டி முடிசேர்ப்போர்க்கு இன்பமெலாம்-இட்டுகுடி*
*பாவலர்கள் காவலர்கள் பாடும் பலசிகரக்*
*கோவிலுறை குன்றக் குடி"*

"செட்டிகுடி காத்த செட்டிகுடி" என்று அழகாகக்குறிப் பிடுவது மிகச் சிறப்பாகவுள்ளது. இந்த நூல் 1951-இல் வெளி வந்துள்ளது.

## 27. (அ) குன்றக்குடித் திருப்பள்ளியெழுச்சி (ஆ) குன்றக் குடிப் போற்றிப் பாமாலை

இவை 'கவிஞர்கோ' வித்துவான் பூ. அமிர்தலிங்கனார் பாடியவை, இப்பாடல்கள் அமுத ஊற்றாகப் பெருக்கெடுத்துள் ளன. அகமுருகிப் பாடுவதற்கு ஏற்றவை.

## 28. திருக்குன்றக்குடிப் பதிகம்

அருட்டிரு பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் (1852–1929)

இத்திருப்பாடல்கள் பாடுவார் நெஞ்சம் கரைப்பவை. எம்பெருமான் சண்முகநாதன் பெரும்புகழை ஊனும், உயிரும் இனிக்க எடுத்து மொழிபவை. இந்தத் திருப்பதிகம் (கி. பி. 1895) மன்மத ஆண்டு, ஆடித் திங்கள் மூன்றும் நாள் புதன்கிழமையன்று சுவாமிகள் இத்தலத்திற்கு வந்து வழிபட்டு அருளியது.

மேலும் குன்றக்குடிக் குறவஞ்சி, மயூரநாதர் வண்ணம், குன்றைத்திரிபந்தாதி, குன்றைக்குடிஆறுமுகப்பெருமான் பாமாலை முதலிய பிரபந்தங்களும், பெரும்புலவர்களும் மெய்யன்பர்களும் பாடிய பலநூல்களும், பதிகங்களும் தமிழ்மொழியிலும் வடமொழியிலும் மிகப்பலவாகவுள்ளன.

## 10. திருப்பணிகள்

### (அ) மலைக்கோயில்

மலையின் மேற்பாலுள்ள ஞானியார் மலைப்பகுதியில் கற்படுக்கைகளும் பிராமிக்கல்வெட்டுகளும்உள்ள அமணபாழியிருக்கிறது இது மிகத் தொன்மையானது. ஆதலால் ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்குமுன்பே குறிப்பிடத்தக்க தலமாகிப்பின் படிமுறையில் வளர்ச்சி பெற்றுள்ளது என்பது புலனாகும்.

### 1. இராமநாதபுரம் சேதுபதிகள்

தமிழகத்தில் பெருங்கோயில்கள் பல எழுப்பியவர்களும் இறையுணர்வில் சிறந்தவர்களும், பெருங்கொடையாளர்களாக விளங்கிப்புகழ்படைத்தவர்களுமாகிய இராமநாதபுரம்சேதுபதிகள் முதலில் திருப்பணி செய்துள்ளனர். மூலவர்கோயில் முகமண்டபமும் (மயில் மண்டபம்) உற்சவமூர்த்தி மண்டபமும் 15-ஆம் நூற்றுண்டு மறவர் சீமை–இராமநாதபுரம் சேதுபதி பணி. இராமநாதபுரம், திருப்புத்தூர், சிவகங்கை, காளையார்கோவில் ஆகிய இடங்களில் உள்ள சிற்பத்தூண்களின் அமைப்பும் போதிகைகளின் மலர்முகப்பும் பிற்காலப் பாண்டியர்கள் வழியில் சேதுபதி கையாண்ட – வளர்த்த சிற்பச்சாயல் பொருந்தியது. மூலவர் சந்நிதியில் கொடிமரம் அமைந்துள்ள பலிபீடம் 12–ஆம்நூற்றுண்டின் மூன்றுவது பிரிவாக அமைந்த சிற்பக்கலை அமைப்புடையதாக இருக்கிறது என்பது தொல் பொருளாய்வாளர் கருத்து. ஆதலால் கி. பி. 12–ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இத்திருக்

கோயில் அமைந்ததாகக் கொள்ள இடமுண்டு. இத்திருக்கோயி லும் இராமநாதபுரம் சமஸ்தானமும் வழிவழித்தொடர்புடையன.

உற்சவமூர்த்தி சந்நிதி முன் மண்டபம் நாகலிங்கம் சேர்வை என்பவரால் கட்டப்பெற்றது.

*"மாச விழாப் பன்னிரண்டின் மன்னிவரு கார்த்திகையில்*
*தேசமகிழ் நாகலிங்கஞ் சேர்வை செய்த-தேசமரும்*
*மண்டபத்தில் தங்கி"*

என்று சண்முகநாதருலா (கண்ணி 195-196) வரிகள் இதனைத் தெரிவிக்கும்.

## 2. சிவகங்கை அமைச்சர் தாண்டவராய பிள்ளை

சிவகங்கை சமஸ்தானத்தில் ஏறத்தாழ 225 ஆண்டுகளுக்கு முன் ராசபுலி முத்துவடுகநாத பெரியுடையான் என்பவரது ஆட்சி நிலவியது. அவர் தம் அமைச்சராக இருந்தவர் முல்லையூர்த் தாண்டவராய பிள்ளை. இவர் கார்காத்த வேளாள மரபினர். நிறைந்த அறிவும் ஆற்றலும் ஒழுக்கமும் பொருந்தியவர்; மாவீரர் 1754-ஆம் ஆண்டில் தளவாய் வெள்ளையன் சேர்வையாரும் இவரும் இணைந்துநின்று, மைசூர் மன்னனின் சார்பாக மதுரையை கைப்பற்றியிருந்த கேப்டன் கோப்பு என்பவனைப் புறங்கண்டனர் என்பது வரலாறு. இவர் குன்றக்குடி சண்முகநாதன்பால் நிறைந்த பத்திமையுடையவர். இவர் இயற்றிய அறங்கள்பல. குன்றக்குடி சண்முகநாதன் திருக்கோயிலைப்புதுப்பித்தார்; வையாபுரி என்னும் தடாகத்தை அமைத்து, அதற்கு அழகிய படித்துறையும் பக்கத்தில் நந்தவனமும் வேதபாடசாலையும் நிறுவினர். மேலும் சண்முக நாதனுக்கு நித்திய கட்டளை, துவாதசிக் கட்டளை, தைப்பூசக் கட்டளை ஆகியன நன்கு நடைபெறச் செய்தார்.

*"கோலமிகு குன்றக் குடியிலே நீடூழி*
*காலமெல்லாம் நிற்கவே கற்கட்டிச்-சூலத்தில்*
*தன்னூற்றுக் காணத் தடாகப்ர திட்டை செய்து*
*சென்னூல் துறையால் சினக்ரமும்-பொன்னால்*
*படித்துறையும் பூந்தருவும் பைந்தருவும் வேதம்*
*படித்து உறையும் மண்டபமும் பாங்காய்-முடித்துவைத்தே*
*போற்றிய வையா புரியென்று பேருமிட்டு*

*காற்றிசையோர் போற்றுவள்ளி காதநக்கே-தோற்றுதினக்*
*கட்டளையும் த்வாதசிக் கட்டளையும் தைப்பூசக்*
*கட்டளையு மே நடத்தும் கங்கைகுலன்"*

(மான்விடுதூது. கண்ணி 145-149)

என்று இவரை மிதிலைப்பட்டிக் குழந்தைக் கவிராயர் போற்றுகிறார்,

மலைக்கோயிலுக்கு வடபாலுள்ள வையாபுரித் திருக்குளமும் அதற்கு மேற்கேயுள்ள நந்தவனமும் இவர் அமைத்தவை என்னும் செய்தியை வேம்பத்தூர் சிலேடைப்புலி பிச்சுவையர் இயற்றிய சண்முகநாதருலாவும் தெரிவிக்கிறது. பிற்காலத்தில் இந்தத் திருக்குளம் நகரத்தார் பொறுப்புக்கு வந்து, சீர்செய்யப்பெற்றுத் திருத்தொண்டு செய்து வருகின்றனர். அறம் செய்வதிலும் அறங் காக்கும் பணி சிறப்புடையதல்லவா?

## 3. மருதுபாண்டியர்

வரலாற்றுப் புகழ் மிக்க விடுதலை வீரர்களான மருதுபாண்டியர், சண்முகநாதனைக் குலதெய்வமாகக் கொண்டனர். அவர்தம் பிளவைநோய் நீக்கி உயிர் வழங்கிய பெருமானல்லவா! மருது பாண்டியர் மிகப்பெரிய அளவில் திருப்பணி செய்து திருக்குட நீராட்டும் செய்வித்துள்ளனர். தம் பிளவைநோய் குணமான சில நாளிலே ("அருளிச் செயல்களில் சில ... ..." என்ற தலைப்பில் காண்க.) மருதுபாண்டியர் தம்மோடு இருந்த காடன் செட்டியாருடனும் தம் பரிவாரங்களுடனும் குன்றக்குடிக்கு வந்தனர்; குன்றக்குடி மலையடிவாரத்தில் அடர்ந்துள்ள காடுகளை வெட்டிச் சீர் செய்தனர்; மலை மீது ஏறி சண்முகநாதனை வழிபட்டனர் பெருமான் மீது ஆராக் காதலுடையவராயினர்; சண்முகநாதன் எழுந்தருளியுள்ள இத்திருத்தலத்தை மேலும் பொலிவுடையதாக்கினர். சண்முகநாதன் எழுந்தருளியிருக்கும் பீடத்தின் கீழ் இடப் பெற்றிருந்த தகட்டைச் செப்பம் செய்வித்துப் பெருமானை எழுந்தருள்வித்தனர். மலைக்கோயிலில் மூலவர் சந்நிதி மயில் மண்டபம், உற்சவ மூர்த்தியுள்ள அலங்காரமண்டபம் தவிர, நூற்றுக்கணக்கான தூண்கள் நிறைந்த சுற்று மண்டபமும், உயர்ந்த சுற்று மதில்களும், இராசகோபுரமும் மருதுபாண்டியர் திருப்பணியாகும்! மலையின் தென்பால் மிகப் பெரிய தடாகத்தை உண்டாக்கி அதற்கு **மருதாபுரி** எனப் பெயரிட்டனர். மருதாபுரியைச் சுற்றிலும் தென்னந்

தோப்பு உண்டாக்கினர்; செம்பொன்மாரிக்கிராமத்தை அளித்த னர்; உற்சவமூர்த்திக்குத் தங்கக் கவசம் செய்து வைத்தனர்; தைப்பூசத்தேர் செய்வித்துப் தைப்பூசவிழாவைப் பெரியஅளவில் நடத்தினர். இத்தலத்தில் தாம் தங்கியிருந்து தொண்டு செய்வதற் காக கீழரதவீதியில் ஓர்அரண்மனை (சவுக்கை)யும் கட்டுவித்தனர். இந்த அரண்மனை சிதைந்து விட்டது. இப்போது பேருந்து நிலையமாக விளங்கும் இடம் மருதுபாண்டியர் அரண்மனை இருந்த இடமாகும். இவ்வாறு மருதுபாண்டியர் குன்றக்குடியில் தங்கி யிருந்த காலத்தில்தான் சாந்துப்புலவரைக் கொண்டு 'மயூரகிரிக் கோவை' என்ற நூலைப் பாடுவித்தனர்.

மேலும்தம் நோய்தீரக் கருவியாக இருந்த காடன் செட்டி யார் சத்திரத்திற்கு ஐந்து கிராமங்களை அளித்தனர்; தோகையடி விநாயகர் திருக்கோயில் சந்நிதியில் உள்ள தெற்குத் தூணில் காடன் செட்டியார் உருவச்சிலையைக் காணலாம். இந்த காடன் செட்டியார் மரபில் தோன்றியவர்கள் அரண்மனைப் பட்டி என்னும் ஆத்தங்குடியிலிருக்கும் செ. கா. வகையினராவர். இவர்களது அன்னச்சத்திரமும், மண்டகப்படியும இன்றும் குறை வின்றி நடைபெற்று வருகிறது.

"*வேண்டிய நல்தம் மயிலார் மயில்வரை மேல்மருது*
*பாண்டியன் பொய்கையும் கீழ்பாற் சவுக்கையும் பைம்புயல்கள்*
*ஈண்டிய காவும் . . . .* (12)

"*மருதுக ராதிபதி சிந்தையிற் செய்த திருக்குளம்*" (61)

"*மருது நராதிபன் தாமரைப் பொய்கையும் மற்றுஅவனே*
*கருதிய ஆயிரத் தூண்மண் டபத்தில் கடம்பணிவேள்*
*வருதிசெய் தோகை மலை*" (82)

"*விரும்பு கவசம் மருது மகீபதி வேண்டியிட*
*அரும்பிய ஓகை மயில்வேலன்*" (153)

"*மைப்பார் புகழும் மருது துரைவேள் மயில்வரைமேல்*
*தைப்பூசத் தேரில் வரச்செய் வது*" (273)

"*தூண்டிய தேரே றினர் மயில் வெற்பர்; துரைமருது*
*பாண்டிய னும்தேர் வடம்தொட் டனன்*" (304)

என்னும் மயூரகிரிக்கோவைப் பாடற்பகுதிகளைக் காண்க.

"....ஞாலமெல்லாம்
ஆண்டமரு தேந்திரமால் ஆற்றிவைத்த தேரினிடை
ஈண்டுலகம் போற்ற எழுந்தருளி"

(சண்முகநாதருலா. கண்ணி 203-204

"சேரும் அக்ர காரப்ர திட்டை, தடா கம்,கனதை
சாரும் அ(ன்)னதானச் சத்திரங்கள் - கார்உலவு
பொன்மண்ட பம்,கோ புர(ம்)ஆ லயம்,இரதம்,
முன்மண்ட பம்செய் முறைமையால்-தன்மம்
புரிமருது பாண்டியன்செய் பொன்னின் முடி, சுந்
தரியம் மிதக வசம்"

(சண்முகநாதருலா கண்ணி. 280-283)

என்று சண்முகநாதருலா, மருதுபாண்டியர் செய்ததிருப்பணிகளைக் குறிக்கும். மருதுபாண்டியர் அக்ரகாரம், அன்னதானச்சத்திரங்கள் அமைத்த செய்திகளையும், சண்முகநாதர் உலா மேலும் விரித்துக் கூறுகிறது.

"மேல் எதிர்தும் ஆயிரம்கட் கோபுரமும் மிகக்கலங்கி விலங்கி மாழ்க
மால்அனைய மருதுபாண் டியர்செய்திருக் கோபுரமும்
மதுர மேன்மைப்
பால்அலைகொள் கடலைவிரு தாபுரியும் படிபடிகள் பண்பின் ஓங்கிச்
சாலும்நெடுக் தடமருதா புரியும்"

(மயூரகிரிக் கலம்பகம்-80)

என்று மயூரகிரிக் கலம்பக ஆசிரியர் மருதுபாண்டியர் செய்த திருக்கோபுரம், மருதாபுரி ஆகிய பணிகளை வியந்து பாராட்டுகின்றார்.

மாவீரராகத் திகழ்ந்த மருதுபாண்டியர், சண்முகநாதனுக்குத் தொழும்பராய் பணிசெய்த பெருமையே பெருமை! இவர் உற்சவ மூர்த்திக்குச் செய்து வைத்துள்ள திருமேனித் தங்கக் கவசத்தில்-திருவடிப்பகுதியில் "குன்றக்குடி சுப்பிரமணிய சுவாமியாருக்கு மருதுபாண்டியன் உபயம்" என்று பொறித்து வைத்திருப்பது இவர்தம் பத்திமைக்கு எடுத்துக் காட்டாகும். இன்றும் இக் கவசத்தைக் கண்டு மகிழலாம். உற்சவமூர்த்தி சந்நிதியில்

வடக்குத் தூணில் பெரிய மருதுவின் உருவச் சிலையும், தெற்குத் தூணில் சின்ன மருதுவின் உருவச் சிலையும் "தொழுது நிற்பதே தொழில்" என்பதைக் காட்டு வண்ணம் கம்பீரமாகக் காட்சி தருவதை இன்றும் காணலாம்.

## 4. சிவகங்கை மன்னர்

வீரபாகு சந்நிதியிலுள்ள துரைராஜு மண்டபம் திருக் கோயிலுக்கு வழிவழித் தொடர்புடைய சிவகங்கை மன்னரால் கட்டப்பெற்றது.

## 5. நகரத்தார்கள்

துரைராஜு மண்டபத்திற்குக் கீழே உள்ள, வல்லப விநாயகர் கோயில், இடும்பன் கோயில், தண்ணீர்ப்பந்தல் மண்ட பம், அதற்கு கீழேயுள்ள மண்டபங்கள் நகரத்தார் பெருமக்களின் திருப்பணிகள்.

## 6. குன்றக்குடி வீ. ராம. அ. அழகுப்பிள்ளை

குன்றக்குடியைச் சேர்ந்த இவரது குடும்பம் திருக்கோயி லோடு வழிவழித் தொடர்புடையதும் உறவுடையதுமாகும். சண்முகநாதன் திருக்கோயில் முகப்புப் பெருவாயில் அலங்கார வளைவு இப்பெருமகனரது திருப்பணியாகும். இந்த வளைவுத் திருப்பணி 9-2-1931 அன்று, தொடங்கப் பெற்றதாக இதன் அடியில் நாட்டப் பெற்றுள்ள கல்வெட்டுச்செய்தி அறிவிக்கிறது.

## 7. கண்டரமாணிக்கம் மெ. கி. பெரி. சோமசுந்தரம் செட்டியார்

சண்முகநாதன் மீது மாறாத அன்பும், வழிவழித் தொடர்பும் உடையவர் இவர். குன்றக்குடி சண்முகநாதனைக் குலதெய்வமாகக் கொண்டிருந்தனர்; திருவண்ணாமலை ஆதீனம் 43-ஆவது மகா சந்நிதானம் திருவருள் திரு. தெய்வசிகாமணி பொன்னம்பலதேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளாட்சிக் காலத்தில், இப்பெருமகனா ரால் திருக்கோயில் சில்லரைப்பழுதுகள் பார்க்கப்பெற்று 1939ஆம் ஆண்டு திருக்குட நீராட்டு விழா நடத்தப் பெற்றது.

## 8. ஆத்தங்குடி அரு. வள்ளியப்பச் செட்டியார்

மலைக்கோயில் மேல்தளத்தில் 14 மீட்டர் உயரத்தில் மெர்க்குரி விளக்கு அமைத்தவர். இந்த விளக்கு குன்றக்குடி

யிலிருந்து 20 கி. மீ. சுற்றளவில் உள்ள எல்லா ஊர்களுக்கும் காட்சி தருவதாக அமைந்துள்ளது. அந்தந்த ஊர்களிலிருந்து மக்கள் இவ்விளக்கினைக்கண்டு சண்முகநாதனை மனத்தில்நிறுத்தி வழிபடவும் நேர்த்திக் கடன் முதலியன வைத்துக் கொள்ளவும் வசதியாக அமைந்துள்ளது. இவர்தம்குடும்பதினர் சண்முகநாதன் மீது நிறைந்த பத்திமையுடையவர்கள்.

## ஆ. கீழக்கோயில்

மலையின் தென்மேற்கு அடிவாரத்தில் உள்ள குடைவரைக் கோயில்கள் பழமையானவை. நடுவிலுள்ள அண்ணுமலையார் குடைவரைக் கோயிலில் உள்ள "மாசிலீச்சுரம்" என்னும் வட்டெழுத்துக் கல்வெட்டால் இந்தக் குடைவரைக் கோயில்கள் எட்டாம் நூற்ருண்டுக் காலத்தவை என்பது புலனுகின்றது. இந்த குடைவரைக் கோயில்களில் முதல் இராசராச சோழன் (கி.பி. 985–1014), முதற் குலோத்துங்க சோழன் (கி. பி. 1070-1120), பாண்டியன் சடையவர்மன் ஸ்ரீ வல்லபதேவன் (கி. பி. 1115–1137) ஸ்ரீ விக்கிரம பாண்டிய தேவர் (கி. பி. 1180–1190), மூன்ரும் குலோத்துங்கன் (கி. பி. 1178–1218) மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி. பி. 1216–1237) ஆகிய வேந்தர்கள் காலக் கல்வெட்டுக்கள் உள்ளன.

தெற்கு வடக்காக வரிசையாக விளங்கும் அழகம்மை கோயில் நடுவிலுள்ள கோயில் (இப்போது மூர்த்தி இல்லை; முஸ்லீம் ஆட்சிக் காலத்தில் தாக்குண்டிருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது) தேனுற்றுநாதர் கோயில் மூன்றும் 12–ஆம் நூற்ருண்டில் பாண்டியர் காலத்தில் எடுக்கப்பட்டவை

## வெங்களப்ப நாயக்கர்

கீழக் கோயிலின் முன் மண்டபம் அழகிய தூண்களால் அமைந்தது. இந்த மண்டபத்தை எழுப்பியவர் சிறுகூடல்பட்டியைச் சேர்ந்த குமாரப்பேட்டையில் ஜமீன்தாராக விளங்கிய வெங்களப்ப நாயக்கர் என்பவர். இவர் தம் உருவச்சிலை அழகம்மை சந்நிதி முன்னுள்ள வடக்குத்தூணில் வடக்குமுகமாக அழகுப் பொலிவுடன் விளங்குகிறது. "மேலே உள்ளது மருதுபாண்டியரால் அமைக்கப்பட்ட சாரம்; கீழேயுள்ள சாரம் வெங்களப்ப நாயக்கர் என்னும் ஒரு ஜமீன்தாரால் அதற்கு முன் கட்டப்பட்டது. அவற்றைக் குறித்து "மேலைச்சாரம் எங்களப்பன்;

கீழைச் சாரம் வெங்களப்பன்'' என்னும் பழமொழி ஒன்று அந்தப் பக்கத்தில் வழங்கி வருகிறது'' ("நான் கண்டதும், கேட்டதும்'' பக்-67) என்று டாக்டர் உ. வே. சா. குறித்துள்ளார்கள். இன்றும் "வெங்களப்ப நாயக்கர்'' என்ற பெயரில் திருக்கோயில் காளாஞ்சி மரியாதை அவர்தம் மரபினர்க்கு வழங்கப் பெற்று வருகிறது. வெங்களப்ப நாயக்கர் புலவர்களைப் போற்றும் புரவலராக விளங்கியவர், இவர் பேரில் "வெங்களப்ப நாயக்கன் குறவஞ்சி'' என்ற நூலை இயற்றிய ஆதி சிற்றம்பலக்கவிராயருக்கு கி. பி. 1647-48 ஆம் ஆண்டில் மிதிலைப்பட்டிக் கிராமத்தை வழங்கியவர். இவர் இயற்பெயர் அச்சுத வெங்களப்ப நாயக்கர் என்றும், இவர் மறைந்து இன்றைக்கு 287 ஆண்டுகளாகின்றன என்றும் இவர்தம் மகள்வழி மரபினரான திரு வா. சௌமியநாராயணன் கூறுகிறார். ஆதலால் இந்த மண்டபம் ஏறத்தாழ 325 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பெற்றது என்பது புலனாகிறது.

## 11. சிற்பங்கள்

கீழக்கோயிலின் ஒருபகுதியாகவுள்ள குடைவரைக்கோயில் சிற்பக் களஞ்சியமாக விளங்குகிறது. மேற்கேயிருந்து கிழக்கே வரிசையாக (1) சுந்தரேசுவரர் கோயில், (2) அண்ணாமலையார் கோயில் (மாசிலீச்சுரம்) (3) மலைக்கொழுந்துநாதர் கோயில் (4) சண்டேசுவரர் கோயில் ஆக நான்கு குடைவரைக்கோயில்கள் உள்ளன. சுந்தரேசுவரர், அண்ணாமலையார், மலைக்கொழுந்து நாதர் ஆகிய மூன்று குடைவரைக்கோயில்களிலும் சிவலிங்கங்கள் மூன்றும், தூண்களும், கருவறைகளும், புடைப்புச் சிற்பங்களும் மலையிலே குடைந்து உருவாக்கப் பெற்றவை. வண்ணவேலைப் பாடுடைய புடைப்புச் சிற்பங்கள் வியக்கத்தக்க கலையழகுடன் மிளிர்கின்றன. மலைக்கொழுந்துநாதர் கோயிலில்மட்டும் மேற்புறம் தெற்குக் கோடியிலிருந்து பாலமுருகன், துவாரபாலகர், திருமால், கருடாழ்வார், நான்முகன், சிவபெருமான், திருமால், கருடாழ்வார், மகிஷாசுரமர்த்தனி, சங்கரநாராயணர், ஆடல் வல்லான், துவாரபாலகர், வலம்புரி விநாயகர் ஆகிய பதின்மூன்றுபுடைப்புச் சிற்பங்கள் உள்ளன. இவற்றுள் துவாரபாலகர்கள், வலம்புரி விநாயகர், திருமால், நான்முகன், சிவபெருமான், மகிஷாசுரமர்த்தனி, சங்கரநாராயணர் ஆகிய ஏழும் சிறப்பானவை. ஆடல் வல்லான் கண்ணையும், கருத்தையும் கவரும் கலையழகுடன் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. நடுவிலுள்ள அண்ணாமலையார்

கோயிலில் துவாரபாலகர், திருமால், வலம்புரி விநாயகர், சிவ லிங்கம் ஆகிய நான்கு புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. ஒவ்வொருவரும் கண்டு மகிழ வேண்டிய கோயில் இது.

# 12. அறச்செல்வர்கள்

## 1. கண்டனூர் லெ. சித. லெ. லெட்சுமணன் செட்டியார்

இப்பெருமகனார் சண்முகநாதன்பால் மாறாத பத்திமை யுடையவர். மூலவர் கோயில் சந்நிதித் திருநிலையையும், திருக் கதவுகளையும் வெள்ளித் தகட்டால் பொலிவுறச் செய்தவர்.

## 2. உ. சிறுவயல் கா. சி. ராம. அழகப்ப செட்டியார்

உற்சவர்கோயில்சந்நிதித் திருநிலையை வெள்ளித்தகட்டால் அழகு படுத்தியவர். இந்த மூர்த்திக்கு வெள்ளியால் தொங்கு விளக்கு ஒன்றும் செய்து வைத்துள்ளார் இப்பெருமகனார்.

## 3. கண்டரமாணிக்கம் சுப. பெரி மு. கரு. கருப்பஞ் செட்டியார்

இடும்பன் கோயிலுக்குக் கீழே உள்ளது தண்ணீர்ப் பந்தல் மண்டபம் இந்த மண்டபத்தில், வழிபாட்டுக்குவரும் மக்களுக்குக் குடி தண்ணீர் வழங்கும் அறம் செய்தவர் இவர். ஆதலால் 'தர்மம் கருப்பஞ் செட்டியார்' என்னும் சிறப்புப்பெயர் பெற்றவர். இவர்தம் வகையினர் இன்றும் இந்த அறத்தைச் செய்து வருகின்றனர்.

## 4. காரைக்குடி அண. சா. இராமசாமி செட்டியார் வகையினர்

மலைக்கோயிலுக்குக் கிழக்கேயுள்ள சண்முகநதித்திருக்குளத் தையும், அதையொட்டிய மண்டபத்தையும் அமைத்த அறச் செல்வர். இவர்தம் முன்னோராகிய வெள்ளச்சி ஆச்சி, பெருமானுக்கு அழகிய தங்க ரதம் செய்து வைத்துள்ளார். இப்பெருமாட்டியார் சண்முகநாதன் மீது கொண்டிருந்த அன்பு வியக்கத்தக்கது.

## 5. குஞ்சான் செட்டியார் வகையினர்

மேற்கேயுள்ள குடிதண்ணீர் ஊருணி இக்குடும்பத்தினரால் அமைக்கப்பெற்றது; இந்த ஊருணியைத் தூய்மையுடன் பேணிப்

பாதுகாத்து அறம் புரிந்து வருவோர் இக்குடும்பத்தினர். இவர்கள் சண்முகநாதன் பணியே பணியெனக் கொண்ட இயல்பினர்.

## 6. தேவகோட்டை சி. க. சு. பழ. குடும்பத்தினர்

இந்தக் குடும்பத்தினர் சண்முகநாதனைக் குலதெய்வமாகப் போற்றுபவர்கள்; தெப்பத்திருநாள் நடைபெறும் வையாபுரித் திருக்குளத்தை அழகுப் பொலிவுடன் பேணி வருபவர்கள்; திருக்கோயிலிலிருந்து தேவையான வெள்ளி பெற்றுத்தம்சொந்தச் செலவில் பெருமானுக்கு வெள்ளி ரதம் செய்து வைத்தவர்கள். இந்த ரதம் மிக அழகாகவும் எடுப்பாகவும் அமைந்துள்ளது.

## 7. இராயவரம் வெ. மு. முரு. சு. ச. சுப்பிரமணியம் செட்டியார்

இப்பெருமகனுர் தைப்பூசத் திருத்தேரினைச் செய்வித்த பெருந்தகையாளர், சண்முகநாதனை வழிபடும் பேறே, பேறெனக் கொண்டவர்; மருதுபாண்டியர் செய்து வைத்த திருத்தேர் பிற் காலத்தில் பழுதுற்று விட்டதால் அந்த அறத்தைத் தொடர்ந்து நிலை நாட்டிய அறச்செல்வர்.

## 8. ஆத்தன்குடி கா. அரு. கா. காடப்ப செட்டியார்

முருகன் என்ருலே மனமுருகும் சான்ருேர் இவர்; குன்றக்குடி சண்முகநாதனைக் குலதெய்வமாகப் போற்றுபவர். 1-2-71 அன்று யானை ஒன்று வாங்கித் திருக்கோயிலுக்கு உரிமையாக்கியுள்ளார், 'சுப்பு' என்பது இந்த யானையின் பெயர்.

## 9. பாதரக்குடி ஆ. சொக்கலிங்கம் பிள்ளை

இவர் சண்முகநாதன்பால் மாருத அன்பு பூண்டவர்; வழி வழி அறம் செய்து வரும் மரபினர். பெருமான் எழுந்தருள்வதற்கு இரத எருதுகள் இரண்டுவாங்கி சண்முகநாதனுக்கு உரிமையாக்கி யுள்ளார்.

## 10. கண்டனூர் மு. நா. சி. நாச்சியப்ப செட்டியார் வகையினர்

திருக்கோயிலில் பாராயணம் செய்தற்கென மேல வேத பாடசாலையைத் தோற்றுவித்து அறம்செய்துவரும் குடும்பத்தினர். இது 120 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பெற்றது. அன்று, முதல் கார்த்திகை தோறும் அன்னதானமும், நாள்தோறும் பிராமண போசனமும் நடைபெற்று வருகிறது. 80 ஆண்டுகளுக்கு முன் யஜுர் வேதம் பயிற்றுவிக்கும் பாடசாலை தொடங்கப்பெற்றுச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## 11. காரைக்குடி நா. க. மெ. வகையார்

கீழ வேத பாடசாலையைத் தோற்றுவித்தவர்கள். சண்முக நாதன் திருவடிக்கு நிறைந்த அன்பினர்.

## 12. கண்டனூர் வயி. அரு.

இவர் உற்சவர் ஆறுமுக நயினர்க்குத் தங்கத்தாலான வேல் செய்து வைத்துள்ளார். ஞான வடிவினனுகிய பெருமான் மீது இவர் கொண்டிருந்த ஈடுபாடு அதிகம்.

## 13. பாஸ்கர சேதுபதிகள்

இந்த மன்னர் உற்சவமூர்த்திக்கு அழகிய தங்கப்பதக்கம் ஒன்று செய்து வைத்து மகிழ்ந்துள்ளார். சேதுபதி மரபினர் பெருமானுக்கு உரிமையும் பத்திமையும் உள்ளவர்கள்.

## 14. குன்றக்குடி அ. சி. பெரியாள்

பெருமானுக்கு வழிவழித் தொழும்புபூண்ட மரபில் தோன் றிய இவர், தம் பக்திப்பெருக்கால் உற்சவருக்குத் தங்கப்பதக்கம் ஒன்று செய்து காணிக்கையாக்கியுள்ளார்.

## 15. 43-ஆவது மகா சந்நிதானம் திருவருள்திரு. பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உற்சவமூர்த்தியின் மயில் வாகனத்திற்குத் தங்கக் கவசமும் உற்சவமூர்த்திக்குத் தங்கப் பதக்கமும் செய்து வைத்துள்ளார்கள். உற்சவமூர்த்தி திருமேனிக்குத் தங்கக் கவசமும், பொன்முடியும் மருதுபாண்டியர் செய்து வைத்துள்ளனர் என்பது இங்கே நினைவு கூரத் தக்கது.

## 16. கோனபட்டு ராம. சோ.

இப்பெரியார் சண்முகநாதன் மீது அளவற்ற ஈடுபாடுடைய வர். இவர் மூலவருக்குத் தங்கத்தால்வேல்செய்து வைத்துள்ளார்.

## 17. கோனபட்டு சு. மு. சு. பழ.

குன்றக்குடி சண்முகநாதன் திருவடிக்கு இணையற்ற அன்பு கொண்டவர் இப்பெருமகனர். மூலவர் திருமேனிக்குத் தங்கக் கவசமும் மூலவர் திருவாசிக்குத் தங்கக் கவசமும் செய்து வைத்து மகிழ்ந்துள்ளார் இந்த அறச்செல்வர்.

## 18. முத்து விஜய ரகுநாத கௌரி வல்லப உடையண துரைசிங்க ராஜா

சிவகங்கைச் சீமையையாண்ட இம்மன்னர், சண்முகநாதன் மீது நிறைந்தஈடுபாடுடையவர். இவர் மகப்பேறின்மையால் மனக் கவலை கொண்டு, குன்றக்குடி சண்முகநாதனுக்குப் பிரார்த்தனை செய்துகொண்டார். சண்முகநாதன் திருவருளால் ஆண்மகவைப் பெற்றார். அதன் நினைவாக மூலவரின் மயில் வாகனத்துக்குத் தங்கக் கவசம் செய்து வைத்துள்ளார். அந்தக் கவசத்தில் "ஸ்ரீராம ஜெயம், குரோதன ஸு ஐப்பசிமீ 14உ சுக்கிரவாரம் சிவகங்கை சமஸ்தானம் மஹாராஜராஜஸ்ரீ முத்து விஜயரகுநாத கௌரி வல்லப உடையண துரைசிங்க மகாராஜா அவர்களால் மயூரகிரி சண்முகநாதருக்கு சொர்ண மயில் கவசம் புத்ரஸம்பவ பிரார்த் தனைக்காகச் செய்து வைக்கப்பட்டிருக்கிற உபயம். உருப்படி 5." என்று பொறிக்கப் பெற்றுள்ளது.

## 19. இராமச்சந்திரபுரம் உ. மு. உ. இராமசாமி செட்டியார்

சண்முகநாதன்பால் நிறைந்த அன்புடைய இப்பெருமகனார் வெள்ளியாலான தொங்கு விளக்கு ஒன்று மூலவருக்குச் செய்து வைத்துள்ளார்.

## 20. காட்டாத்தம்பட்டி கு. மு. மு. மு. வீ.

இவர், பெருமான்பால் தாம் கொண்டிருந்த பத்திமையின் சின்னமாக மூலவருக்கு வெள்ளித் தொங்குவிளக்கு ஒன்று செய்து வைத்துள்ளார்.

## 21. அதங்குடி பி. க. சவரிமுத்து

இவர், மூலவருக்கு வெள்ளியினாலாய அழகிய மயில் தொங்கு விளக்குச்செய்து வைத்துள்ளார். இவர் பெருமான்மீது கொண்டி ருந்த அன்பின் விளக்கமாக இஃது உள்ளது,

## 22. குன்றக்குடி து. சுந்தரக்குருக்கள்

இவர், வழிவழியாக சண்முகநாதன் வழிபாட்டுப்பணி புரிந்துவரும் ஆதிசைவ மரபில் தோன்றிய பெரியார். தமக்கு மகப்பேறு நிலைபெறாமையினால் வருந்தி சண்முகநாதனுக்குப் பிரார்த்தனை செய்துகொண்டார். தமக்கு ஆண்குழந்தை பிறந்த தும் 1101 ரூபாய்எடை அளவில் உற்சவ மூர்த்திக்கு வெள்ளியால்

தொங்கு விளக்குச் செய்து வைத்துள்ளார். அதன்பின் இவருக்கு மகப்பேறு நிலையுடையதாயிற்று. இந்த விளக்கில் தம் பெயரைப் பொறிக்க வேண்டாம் என்று இவர் கூறிவிட்டார் என்பது குறிக்கத்தக்கது.

## 23. உ. சிறுவயல் ராம. சி. சிவராமன் செட்டியார்

சண்முகநாதன் மீது தாம் கொண்டிருந்த ஈடுபாட்டின் அடையாளமாக வழிபாட்டுக் காலங்களில் ஒலிக்கும் மிகப்பெரிய வெண்கலமணி ஒன்று செய்து வைத்துள்ளார். இந்த மணியின் ஒலி பல கிலோ மீட்டர்களுக்கு அப்பாலும் சென்று அன்பர்களின் செவி நிறைத்து மகிழ்வித்துக்கொண்டிருக்கிறது.

## 24. காரைக்குடி ஏ. வி. எம். மெய்யப்ப செட்டியார்

இப்பெருமகனர் திரைப்படத் தொழில் உலகில் பெரும்புகழ் பெற்று விளங்குபவர்: குன்றக்குடி சண்முகநாதன் திருவடிக்கு மாருத அன்பினர். மலைக்கோயில் மேல் தளத்தில் ‘ஆறுமுக அப்பா’ என்றும் மந்திர ஒலி எழுத்துக்களையுடைய ஒளிவிளக்கு இவர்களால் அமைத்து வைக்கப் பெற்றது. இது மெய்யன்பர்களை ஈர்க்கும் வகையில் மிக அழகாக அமைந்துள்ளது.

மேலும், பழனிக்குத் தொடர்புடைய நகரத்தார்களால் திருப்பணி செய்யப்பெற்ற – பழனியாண்டவரின் வேல்வைத்து வழிபடும் தண்டாயுதபாணி கோயிலும் அதையொட்டிய அன்ன தானமடமும், ஆத்தன்குடி காடன் செட்டியார் (செ. கா வகையினர்) அன்ன சத்திரமும், நாள்தோறும் சோறு போடும் சிவா மடமும், கார்த்திகைதோறும் அன்னதானம் வழங்கும் மடங்களும் எப்போதும் தங்குவதற்கும், சோறுவடித்துப் போடுவதற்குமான உ. சிறுவயல், காரைக்குடி, கோட்டையூர், அளகாபுரி, பலவான் குடி, கோனபட்டு, நாச்சியாபுரம், கண்டவராயன்பட்டி, கானடு காத்தான். இராயவரம், கடியாபட்டி, மிதிலைப்பட்டி முதலிய நகரத்தார்களின் மடங்களும் ஊரில்எல்லா வீதிகளிலும், எல்லாப் பகுதிகளிலும் நிறைந்துள்ளன.

மெய்யன்பர்கள் பலர், பெருமானுக்கு மேலும் பல அறங்கள் செய்துள்ளனர். விரிக்கில் பெருகும்.

## 13. நாள் வழிபாடு

நாள்தோறும் குமாரதந்திர ஆகம முறைப்படி சண்முகநாதப் பெருமானுக்கு ஆறு கால பூசை நடைபெறுகின்றது.

வழிவழியாகத் திருக்கோயில் திருப்பணிகளும், அறங்களும் செய்து வருபவர்களும், சண்முகநாதன் திருவடிக்கு நிறைந்த ஈடுபாடுடையவர்களுமாகிய மாட்சிமை தங்கிய புதுக்கோட்டை மன்னர்கள் உச்சிக்கால கட்டளையை நடத்திவருகின்றனர்.

## 14. திருவிழாக்கள்

### சித்திரை :

சித்திரைத் திங்கள் முதல் நாளன்று, சண்முகநாதனுக்குப் பாலாபிஷேகம் நடைபெறுகிறது. இதனைப் "பால்பெருக்கு விழா" என்பர். அன்று காலையில் ஆதீன மடாலயத்தில் காளத்திநாதர் சந்நிதியில் நூற்றுக்கணக்கான பாற்குடங்களை வைத்து வழிபட்டு, திருவருள் திரு மகா சந்நிதானம் அவர்கள் எடுத்துத்தர அன்பர்கள் நூற்றுக் கணக்கானவர்கள் எடுத்துக்கொண்டு மலை வலம் வந்து, சண்முகநாதன் சந்நிதியடைகின்றனர். பின் பெருமானுக்கு அபிஷேகமும் தீபாராதனையும் நடைபெறுகிறது. இந்தச் சிறப்பு வழிபாடு 45–ஆவது மகாசந்நிதானம் அவர்களால் தோற்றுவிக்கப்பெற்றது.

சித்திரைக் கார்த்திகை நாளன்று முத்துக் கந்தர் வெள்ளி மயில் வாகனம் மீது எழுந்தருள்கின்றார். சித்திரை சஷ்டி நாளில் பெருமானுக்கு, மகாபிஷேகம் நடைபெறுகிறது.

### வைகாசி

வைகாசி-விசாக நாளன்று விசாக விழா சிறப்பாக நடைபெறுகின்றது, அன்று காலையில் திருமடத்துக்குச் சண்முகநாதன் எழுந்தருள்கின்றார் திருமடத்து முகப்பில் சீர்வரிசைகளுடன் திருவருள்திரு. மகா சந்நிதானம் பெருமானை வரவேற்கும் காட்சி, மெய்சிலிர்க்க வைக்கும் காட்சியாகும். அதன்பின் பெருமான் கொலுமண்டபத்தில் எழுந்தருள்கின்றார். இந்த மண்டபத்தில் பெருமானுக்கு நடைபெறும் அபிஷேக ஆராதனைக் காட்சி கண்கொள்ளாக்காட்சி. மாலையில் திருமடத்துமுகப்பில் தெற்குரத

வீதியில் சமய இலக்கியவிழா, இன்னிசைக் கச்சேரிகள் சிறப்பாக நடைபெறுகின்றன. இரவு, பெருமான் வெள்ளி ரதத்தில் எழுந்தருள்கின்ருர்.

*"வைகா சியினில் வரும்தன் விசாகமதில்*
*மைகா இரண்டும் மனம் வெட்கக் - கைகாட்டி*
*எண்திசைக்தும் ஈயும் இலங்(கு) அருணை ஆதீனர்*
*மண்டபத்தில் தங்கி மகிழ்முருகன் . . . ."*

(சண்முகநாதருலா-கண்ணி 250-251)

என்று இற்றைக்கு 70 ஆண்டுகளுக்கு முன் இவ்விழா நடைமுறைச் செய்தி குறிக்கப் பெறுகிறது.

வைகாசிக் கார்த்திகையன்று முத்துக்கந்தர் வெள்ளி மயில் வாகனத்தில் திருவீதியுலா வருகின்ருர். வைகாசி சஷ்டி நாளில் மகாபிஷேகம் நடைபெறுகிறது,

## ஆனி:

இத்திங்களில் வரும் கார்த்திகை நாளில் முத்துக்கந்தர் வெள்ளி மயில் வாகனத்தில் பவனி வருகின்ருர். ஆனி சஷ்டி நாளில் மகாபிஷேகம் நடைபெறுகிறது.

## ஆடி:

ஆடிக்கார்த்திகையன்று திருப்படிப்பூசை நடைபெறுகின்றது. இன்று மாலை பஜனைக் கோஷ்டிகள் திருப்புகழ் முதலிய திருப்பாடல்களையும், சண்முகநாதன் நாமாவளியையும் பாடிக்கொண்டு செல்ல ஒவ்வொரு படியிலும் தீபாராதனை நடைபெறுகிறது. பின் சண்முகநாதன் சந்நிதி சென்று சிறப்பு அபிஷேக அலங்கார வழிபாடு நடைபெறுகிறது. இவ்விழா, திருப்படிப்பூசை விழாவாக 45-அவது மகா சந்நிதானம் அவர்களால் நடைமுறைப்படுத்தப் பெற்றது,

இரவு முத்துக்கந்தர், வெள்ளி மயில் வாகனத்தில் எழுந்தருள்கின்ருர் ஆடி சஷ்டி நாளில் மகாபிஷேகம் நடைபெறுகிறது.

## ஆவணி:

ஆவணிமூலம், பிட்டுத்திருநாள். மதுரையில் பெருமான் பிட்டுக்கு மண்சுமந்து உழைப்பின் பெருமையை உலகுக்கு எடுத்துக்

காட்டியருளியநாள். மக்கள் உழைப்பின் பெருமையையுணர்ந்து உழைக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன், இவ்விழா நடைபெறுகின்றது; ஆதலால் குளங்கள், ஏரிகள், அவற்றின் வரத்துக் கால்கள் முதலியவற்றைச் செப்பம்செய்யும் நாளாகக் கொண்டாடப்பெறுகிறது. சோமாஸ் கந்த மூர்த்திக்குப் பூசனை செய்து, அப்பெருமானை மண்வெட்டி, கூடையுடன் திருக்கோலம் செய்வித்து உழைப்புப்பணி தேவைப்படும் இடத்திற்கு அவர் எழுந்தருள்விக்கப் பெறுகிறார். பொதுமக்கள் அனைவரும் மண்வெட்டி, கூடைகளுடன் சென்று குறித்த இடத்தில் உழைப்புப்பணி செய்கின்றனர். இத்திருப்பணியில் பங்குபெறும் மெய்யடியார்களுக்கு நிவேதனப் பிட்டும், மதியம் உணவும் கோயிலிலிருந்து வழங்கப்பெறுகிறது. பணி நிறைவேறியதும் அன்று இரவு, பெருமான் அங்கிருந்து எழுந்தருள்கிறார். இவ்விழாவையும் சமுதாயப் பணி விழாவாகத் தோற்றுவித்து நடத்தி வருகின்றவர்கள் 45 ஆவது குருமகா சந்நிதானம் அவர்களே.

ஆவணி கார்த்திகை நாளன்று முத்துக்கந்தர், வெள்ளிமயில் வாகனத்தில் எழுந்தருள்கின்றார். சஷ்டியன்று மகாபிஷேகம் நிகழ்கிறது.

## புரட்டாசி :

விஜயதசமி நாளன்று, முத்துக்கந்தசுவாமி சாளி தெப்பக் குளக்கரை மண்டபத்திற்கு எழுந்தருளி அம்பு போட்டுத் திரும்புகின்றார்.

புரட்டாசிக் கார்த்திகையன்று முத்துக்கந்தசுவாமி மயில் வாகனத்தில் திருவீதி உலா வருகின்றார். புரட்டாசி சஷ்டியன்று மகாபிஷேகம் நடைபெறுகின்றது.

## ஐப்பசி :

ஐப்பசி வளர்பிறைத் தொடக்கம் ஆறு நாள்களும் கந்தர் சஷ்டி விழா நடைபெறுகின்றது ஆறு நாட்களும் இலட்சார்ச்சனை சிறப்பாக நடக்கிறது. இந்த இலட்சார்ச்சனை வழிபாட்டு நிகழ்ச்சி நம் 45ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாட்சிக் காலத்தில் தொடங்கப் பெற்றது. ஐந்தாம் திருநாளன்றும், ஆறும் திருநாள் கந்தர் சஷ்டியன்றும் சண்முகநாதன் வெள்ளி ரதத்தில் எழுந்தருள்கின்றார். சஷ்டியன்று சூரசங்காரம் நடைபெறுகின்றது. ஏழாம் திருநாளில் மகாபிஷேகம்; தெய்வானையம்மை திருக்கல்யாணம் நடைபெறுகிறது. இரவு தங்கரதத்தில்

பெருமான் எழுந்தருள்கின்றார். எட்டாம் திருநாள் காலை, மஞ்சள் நீராட்டு நடைபெறுகிறது ஐப்பசித் திங்கள் கார்த்திகை நாளில் முத்துக்கந்தர் மயில் வாகனத்தில் பவனி வருகின்றார்.

## கார்த்திகை :

கார்த்திகைத்திங்கள் முதல் சோமவரத்தன்று சண்முகநாதன் எழுந்தருள்கின்றார். கடைசி சோமவாரத்தன்று 1008 சங்காபிஷேகம் நடைபெறுகின்றது. இந்த அபிஷேக நிகழ்ச்சி நம் ஆதீன மண்டகப்படியாகும். மற்ற சோம வாரங்களில் சிறப்போடு பூசனை நடைபெறுகிறது. திருக்கார்த்திகையன்று பெருமான் கீழவீதியில் உள்ள கார்த்திகை மண்டபத்திற்கு எழுந்தருளி மலைத்தீபம் காட்டி, வெள்ளி மயில் வாகனத்தில் திருவீதியுலா எழுந்தருள்கின்றார். திருக்கார்த்திகை மலைத்தீபக் காட்சி, அகத் திருள்நீக்கும் அருமைக்காட்சி. கார்த்திகைத் திங்கள் சஷ்டியன்று, மகாபிஷேகம் நடைபெறுகிறது.

## தை :

தைப்பூசத் திருவிழா நடைபெறுகிறது. தை உத்திரட்டாதி நாளில் கொடியேற்றம் நிகழ்கிறது. பத்து நாட்கள் திருவிழா. முதல்திருநாள் குன்றக்குடித்திருவண்ணாமலை ஆதீனமண்டகப்படி இரண்டாம்நாள், குன்றக்குடி சண்முகநாதனுக்கு வழி வழி அன்பு பூண்டொழுகும் பலவான்குடி பாலைய நாட்டார்களின் மண்டகப் படி நடைபெறுகிறது. அன்று இரவு பெருமான் வெள்ளிக் கேடகத்தில் எழுந்தருள்கின்றார். மூன்றும் திருநாள், நான்காம் திருநாள், ஐந்தாம்திருநாள் ஆகியமூன்று நாட்களிலும் வெள்ளிக் கேடகத்தில் எழுந்தருள்கின்றார்.

ஆறும் திருநாளன்று காரைக்குடி அண. சா. இராமசாமி செட்டியார்வகையினர் மண்டகப்படி. இக்குடும்பத்தினர் சண்முக நாதனுக்கு மாறாத அன்புடையவர்கள். பெருமான் இன்று தங்க ரதத்தில் எழுந்தருள்கின்றார், 1918 சனவரி–தைப்பூசத் தொடக்கம், இக்குடும்பத்தினரால் இந்த மண்டகப்படி நடைபெற்று வருகிறது

ஏழாம் திருநாளில் வெள்ளிக் கேடகத்திலும், எட்டாம் திருநாளில் வெள்ளி ரதத்திலும் பெருமான் எழுந்தருள்கின்றார்.

ஒன்பதாம்திருநாள்: திருத்தேர்விழா நிகழ்கின்றது. சண்முக நாதன் எழுந்தருளியுள்ள தலமாகிய குன்றக்குடி இருப்பது நேம நாடாகும். அதனால் பெருமானுக்கு "நேம நாடுடைய வள்ளல்" என்றபெயர்வந்தது. நேமநாட்டார் வழிவழியாகப் பெருமானுக்குத் தொண்டு செய்துவரும் பெருமையுடையவர்கள். அந்த நேம

நாட்டாரும் வழிவழியன்புடைய கண்டு கொண்ட மாணிக்க நாட்டாரும் அன்று தேர் வடம் ஏறுகின்றனர். மக்கள் வெள்ள மெனத் திரண்டு தேர்வடம் பிடிப்பர். தேர்நிலைக்கு வந்தபின், நேம நாட்டார் பரிவட்ட மரியாதை பெறுகின்றனர். அதன் பின் மருதுபாண்டியர் பிளவைநோய்தீர, சண்முகநாதனின் கருவியாக விளங்கிய காடன் செட்டியார் வகையினர் மண்டகப்படி நடை பெறுகிறது. அருட் செல்வர் காடன் செட்டியார் மரபினராகிய செ. கா. வகையார் இந்த மண்டகப்படியைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர். பெருமான் இன்று வெள்ளிக் கேடகத்தில் எழுந்தருள்கின்றார்.

பத்தாம் திருநாள் காலை, சண்முகநாதனைக் குல தெய்வமாகக் கொண்டொழுகும் காரைக்குடி பொய்சொல்லா மெய்யப்ப செட்டியார் வகையினர் மண்டகப்படி. பெருமான் வெள்ளிக் கேடகத்தில் மேல வையாபுரிக்கரைக்கு எழுந்தருள்கின்றார். அங்குள்ள மண்டபத்தில் தங்கித் தீர்த்தம் வழங்குகின்றார். இதற்கு *மயில் தீர்த்தம்* என்று பெயர்.

அன்று பிற்பகல் அங்கிருந்து எழுந்தருளித் தேனாற்றங் கரைக்குச் சென்று தேனாற்றுத் தீர்த்தம் வழங்கிப் பழனியாயி ஊருணிக் கரைக்கு எழுந்தருள்கின்றார். இது பழனியாயி ஊருணி மண்டகப்படி என்று வழங்கப் பெறுகிறது. இந்த மண்டகப்படியைக் குன்றக்குடி சண்முகநாதனுக்கு மாறாத அன்பு பூண்டொழுகும் பலவான்குடி, வயிரவன் செட்டியார் வகையினர் சிறப்பாகச் செய்துவருகின்றனர்.

தைத் திங்கள் கார்த்திகையன்று, முத்துக் கந்தர் வெள்ளி மயில் வாகனத்தில் எழுந்தருள்கின்றார். சஷ்டியன்று மகாபிஷேகம் நடைபெறுகிறது.

### மாசி :

இந்தத் திங்களில் வரும் கார்த்திகை நாளில் வெள்ளி மயில் வாகனத்தில் முத்துக் கந்தர் எழுந்தருள்கின்றார். சஷ்டி நாளன்று பெருமானுக்கு மகாபிஷேகம் நடைபெறுகிறது.

### பங்குனி :

பங்குனி உத்தரப் பெருவிழா இங்கு மிகச் சிறப்பாக நடை பெறுகிறது. இலட்சக் கணக்கான மக்கள் பெருமான் வழிபாட்

டுக்கும், நேர்த்திக்கடன் செலுத்தவும் வருகின்றனர். பங்குனி உத்தர விழாவுக்குப் பங்குனிக் கார்த்திகை நாளில் கொடியேற்றம் நிகழ்கிறது.

முதல் திருநாள் இரவு, பெருமான் வெள்ளிக் கேடகத்தில் எழுந்தருள்கின்றார். நேம நாட்டார் வழிவழியாக இந்த மண்டகப்படியை ஆற்றிவருகின்றனர்.

*"பங்குனியிற் கார்த்திகையில் பற்றுகொடி ஏற்றமதில்*
*நங்கை திரு வார்நேம நாட்டினர் - மங்கலஞ்சேர்*
*மண்டபத்தில உற்று"*

(சண்முகநாதருலா, கண்ணி 214-215)

என்று சண்முகநாதர் உலா தெரிவிக்கிறது.

இரண்டாம் திருநாள் நகரத்தார் குலத்தோன்றல்களும் வழி வழி அன்னம்பாலிக்கும் அறஞ்செய்துவரும் குடும்பத்தினருமான கண்டனூர் மு. நா. சி. அ. ராம. நாச்சியப்ப செட்டியார் வகையினரின் மண்டகப்படி. இன்று வெள்ளிக் கேடகத்தில் பெருமான் திருவீதியுலா வருகின்றார்.

*" . . . . இரண்டின் மன்னும் அன்ன சத்திரம்செய்*
*திண்திறல்சேர் நாச்சியப்ப செட்டியார்-கண்டபிள்ளை*
*யார் மண்டபத்தருளி . . . . "*

(சண்முகநாதருலா. கண்ணி 215-216)

என்று இச்செய்தியைச் சண்முகநாதர் உலா பாராட்டுகிறது.

மூன்றாம் திருநாள் பன்னிரண்டு ஊர் கன்னார் ஆசாரிகள் மண்டகப்படி. சண்முகநாதன் இன்று வெள்ளிக் கேடகத்தில் எழுந்தருள்கின்றார். இந்தச் சமூகத்தினர் பெருமான்மீது நிறைந்த அன்பு பூண்டுள்ளவர்கள். மிக்க ஆர்வத்தோடு செய்து வருகின்றனர்.

*" ... ... ... ... ... ... ... மூன்றாம் நாள்*
*சீர்சேரும் ஐந்தொழிலிம் செய்துவரும் - ஏர் சேர்ந்த*
*கம்மாளர் மண்டபத்தில் காட்சிதந்து"*

(சண்முகநாதருலா. கண்ணி 216-217)

என்று இந்த மண்டகப்படிச் செய்தி சண்முகநாதர் உலாவில்

பேசப் பெறுகிறது. இதிலிருந்து கம்மாளர் ஐந்து தொழிலினரும் இப்பணி செய்து வந்துள்ளனர் என்று தெரிகிறது. இப்போது. இந்தஅறத்தைக் கன்னர ஆசாரிகள் மட்டும் செய்துவருகின்றனர்.

நான்காம் திருநாள் அறந்தாங்கி வட்டாரப் பொது மக்கள் மண்டகப்படி. குன்றக்குடி சண்முகநாதன் மீது அறந்தாங்கி வட்டாரப் பொதுமக்கள் எல்லையற்ற பத்திமை கொண்டுள்ளனர் தங்களை வாழவைக்கும் கண்கண்ட தெய்வமெனப் போற்று கின்றனர் அறந்தாங்கிப் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான மாட்டு வண்டிகள் அரிசி, காய்கறிகள், பலசரக்குச் சாமான் களைச்சுமந்து கொண்டு இங்குவருகின்றன, பல்லாயிரக்கணக்கான அன்பர்கள்வருவர். குன்றக்குடிப்பங்குனி உத்திரத் திருவிழாவின் போது இந்தப்பகுதி மக்கள் குன்றக்குடி வந்து அன்னம் 'வடித்துப் போடுவது'ம், காவடி எடுத்து வருவதும், திருவிழாவுக்குப் பொலிவூட்டுவதாகும். சண்முகநாதன், அறந்தாங்கிப் பகுதியை நோக்கி அமர்ந்திருக்கிறார். பெருமானின் அருட்கண் பார்வை தம் பகுதியை வாழ்விப்பதாகக் கூறுகின்றனர். இன்று சண்முகநாதன் வெள்ளிக் கேடகத்தில் எழுந்தருள்கின்றார்.

ஐந்தாம் திருநாளில் வள்ளியம்மையார் திருமணம் நடை பெறுகிறது. இந்த நிகழ்ச்சி காரைக்குடி மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கம் செட்டியார் குடும்பத்தினர் உபயமாக நடைபெறு கிறது. இந்தக் குடும்பத்தினர் சண்முகநாதனைத் தம் குடி காக்கும் குலதெய்வமாகக் கொண்டவர்கள்; வழிவழிச் சிறந்த மரபில் தோன்றிய திருவுடையவர்கள்.

இன்று, இரவு அறந்தாங்கி சம்பேர கோபாலய்யர் குமாரர் சுப்பிரமணிய அய்யர் மண்டகப்படி சிறப்பாக நடைபெறுகிறது. இந்தக் குடும்பத்தினர் சண்முகநாதனையன்றி வேறொரு சிந்தை யில்லாதவர்கள்.

இந்த மண்டகப்படிக்கு அடுத்து, அறந்தாங்கி கிழக்கு வட்டகைக் கோனார் பெருமக்களின் உபயமான பூப்பல்லக்கில் பெருமான் எழுந்தருள்கின்றார்; இந்தச் சமூகத்தினர் பூப்போன்ற மனமுடையவர்கள்; மனத்தகத்தே அன்பு மணமும், அறத்தழகு மாய்த் திகழ்பவர்கள்.

ஆறும் திருநாள் காலை பெருமானுக்குப் பச்சை சாத்துப்படி. அன்று இரவு வெள்ளிக் கேடகத்தில் எழுந்தருள்கின்றார். அறம் செய்யும் குணமே குணமாகக்கொண்ட கொத்தமங்கலம்

சி ராம. சு. அழ. அண்ணுமலை செட்டியார் உபயமாக இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது.

ஏழாம் திருநாள் காலை வெட்டிவேர் சாத்துப்படி. இந்தத் திருநாள் கண்டுகொண்டமாணிக்கம் நாட்டார்களின் உபயமாக நடக்கிறது. இந்த நாட்டார் பெருமக்களின் மனம் தங்கம். ஆதலால் பெருமானும் இன்றுஇரவு தங்கரதத்தில் பவனி வருகிறுர்.

*"..................ஏழில் சிறந்ததிருப் பாற்கடல்போல்*
*ஆர்ந்துவளர் செல்வம் அனுதினமும்---சார்ந்து நிற்தும்*
*மண்டுபுகழ் கண்டுகொண்ட மாணிக்க நாட்டார்கள்*
*மண்டபத்தில் தங்கி மகிழ்ந்தருளி........."*

சண்முகநாதருலா கண்ணி 221–222)

என்று இந்த மண்டகப்படிச் சிறப்பை வேம்பத்தூர் சிலேடைப் புலி பிச்சுவையர் பாராட்டுகிறுர்.

எட்டாம் திருநாள் அன்று இரவு பெருமான் வடக்கு வையாபுரியில் தெப்பத்தில் எழுந்தருளி அருட்காட்சி வழங்குகின்றுர். அதன்பின் வெள்ளி ரதத்தில் எழுந்தருள்கின்றுர். அருங்குணச் செல்வர்களாகவும். வழிவழியாகச் சண்முகநாதனை வழிபடும் தெய்வமாகக் கொண்டவர்களுமாகிய தேவகோட்டை சி.க.சு.பழ. வகையினர் உபயமாக இது நடைபெறுகின்றது.

ஒன்பதாம் திருநாள் திருத்தேர் விழா. இது பிற்பகலில் நடைபெறுகிறது. திருவண்ணுமலை ஆதீனம் மகா சந்நிதானம் அவர்கள், தம், பூசை முடித்துக் கொண்டு தேரோட்டத்தைத் தொடங்கி வைக்க நாட்டார்கள் நகரத்தார்கள், பரிவாரங்கள் புடைசூழ எழுந்தருள்கின்றுர்கள். தேரில் எழுந்தருளியுள்ள பெருமானுக்குத் தீபாராதனை முதலியன நடைபெறுகின்றன. அதன்பின் முறைப்படி காளாஞ்சி, விபூதி விளங்கப்படுகிறது. மகா சந்நிதானம் தேர்வடம் தொடுகிறுர்கள் வழிவழிச் சிறந்த கண்டு கொண்ட மாணிக்க நாட்டார்களும் நேம நாட்டாரும் தேர் வடம் ஏறுகின்றனர். மக்கள் திரண்டு தேர் இழுக்கின்றனர். இவ்வாறு தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. இந்தத் திருத்தேர் விழாவில் கண்டுகொண்ட மாணிக்க நாட்டார்கள் பரிவட்டம் மரியாதை பெறுகின்றனர். பெருமான் தேர் விட்டிறங்கி இரவு வெள்ளிக் கேடகத்தில் எழுந்தருள்கின்றுர். இந்த நிகழ்ச்சி

பெருங்குணச் செல்வர்களான அன்னதான மடம் கண்டனூர் சுப. சு. அரு. வகையினரின் உபயமாக நடைபெறுகிறது.

பத்தாம் திருநாள் உத்திரத்திருநாள். இன்று அக்கினிக் காவடிகள், சர்ப்பக்காவடிகள், சேவற்காவடிகள், மச்சக்காவடிகள், பறவைக் காவடிகள் முதலான வியத்தகு காவடிகள் வருகின்றன. அக்கினிக்காவடி நிகழ்ச்சி, பறவைக்காவடி நிகழ்ச்சி முதலியன காண, பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகின்றனர். இது கண்கொள்ளாக் காட்சி!

நண்பகலில் உத்தரத் தீர்த்த விழா நிகழ்கிறது. சண்முகநாதன் திருவடிக்கே நெஞ்சம்வைத்த தேவகோட்டை சி. க. சு. பழ வகையினரின் உபயமாகத் தீர்த்த விழா நடைபெறுகின்றது.

இரவு, பெருமான் மயிலாடும் பாறைக்கு எழுந்தருளுகின்றார். சண்முகநாதப் பெருமானுக்குத் தொழும்பராய்ப் பணிபூண்ட பெருமக்களும், அருணகிரிநாத சுவாமிகளின் மரபினருமான நாக பாசத்தார் மண்டகப்படி இது.

*" ...........துங்கமயி லாடுபா றைக்(கு) எழுந்து*
*பங்கச மின் சேர்நாக பாசத்தார்—துங்கமிதம்*
*செய்யமண்ட கப்படியில் சேர்ந்து மனமகிழ்ந்து*
*வையகத்தோர் போற்ற வரும் முருகன்........."*

(சண்முகநாதருலா கண்ணி 246-247)

என்று இந்நிகழ்ச்சியைச் சண்முகநாதர் உலா பாராட்டுகிறது.

பங்குனியில் வரும் கார்த்திகையன்று வெள்ளி மயில் வாகனத்தில் முத்துக்கந்தர் திருவீதிஉலா வருகின்றார். சஷ்டியன்று மகாபிஷேகம் நடைபெறுகிறது.

திருவிழா, சிறப்புவிழா நாட்களில் பெருமான் திருவீதியுலா வரும்பொழுது திருமுறைப் பாராயணம் பக்க வாத்தியங்களுடன் நடைபெறுகிறது; வேதபாராயணம் நடைபெறுகின்றது.

## 15. விரதங்கள்

சண்முகநாதனுக்கு உகந்த விரதங்கள் கார்த்திகை விரதம், வெள்ளிக்கிழமை விரதம், சஷ்டி விரதம் ஆகியன.

## 1. கார்த்திகை விரதம்

கார்த்திகை நாள்தோறும் வைகறையில் நீராடித் தூய ஆடை உடுத்துத், திருநீறணிந்து கொண்டு சண்முகநாதனை வழி படுதல் வேண்டும், கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் குன்றக்குடிக்குவந்து சண்முகநாதனை வழிபட்டு இந்தவிரதத்தைத் தொடங்குதல் நல்லது; கார்த்திகை தோறும் குன்றக்குடிக்கு வந்து சண்முகநாதனை வழிபடுதல் சிறப்பு. அவரவர் வாய்ப்பு, வசதிக்கு ஏற்ப அனுட்டிக்கலாம். இவ்விரதத்தை முறையாக மேற்கொள் பவர்கள் நோயும் துன்பமும் நீங்கி இன்புற்று வாழ்வர். வாழ்நாள் முழுதும் அல்லது ஆறுஆண்டுகள், மூன்று ஆண்டுகள், ஓராண்டு என்ற முறையில் தொடர்ச்சியாக அனுட்டிக்க வேண்டும்.

## 2. வெள்ளிக்கிழமை விரதம்

ஏதேனும்ஒரு திங்களில் வளர்பிறை வெள்ளிக்கிழமையன்று குன்றக்குடிக்குவர்து நீராடித்தூயஆடை உடுத்தித் திருநீறணிந்து கொண்டு சண்முகநாதனை வழிபட்டு இவ்விரதத்தைத் தொடங்க வேண்டும். இவ்விரதத்தை முறையாகத் தொடர்ந்து அனுட்டிப் பவர்கள் இமை, மறுமைப் பயன்களை எய்துவர்.

## 3. சட்டிவிரதம்

ஐப்பசி, கார்த்திகை, தை, பங்குனி, சித்திரை, வைகாசி ஆகிய ஆறு திங்களில் ஏதேனும் ஒரு திங்களில்வரும் வளர்பிறைச் சட்டி நாளில் குன்றக்குடி வந்து நீராடித், தூய ஆடை உடுத்தித், திருநீறு அணிந்து கொண்டு பெருமானைச் சிந்தையில் நிறுத்தி வழிபட்டுத் துவங்க வேண்டும். தொடர்ந்து வளர்பிறைச் சட்டி நாள் தோறும் அனுட்டிக்கப் பெறுதல் வேண்டும். முறையாக இந்தவிரதத்தை அனுட்டிப்பவர்கள் இந்த உலக இன்பங்களையும் கந்தன் திருவடிப் பேற்றையும் பெறுவர்.

ஐப்பசித் திங்கள் வளர்பிறைப் பிரதமை முதல் சட்டி நாள்வரை ஆறுநாள்கள் உண்ணு நோன்பிருந்து சண்முகநாதனை வழிபடுவது மிகவும் நல்லது. இதனால் பிணிகள் நீங்கிப் பெரு வாழ்வுறுதல் திண்ணம்.

# 16. வேண்டுதல்கள்

குன்றக்குடி சண்முகநாதன், வேண்டுவார் வேண்டுவதே ஈயும் கண்கண்ட தெய்வமாக எழுந்தருளியிருக்கிறான். நோய்

நீக்கம், துன்ப நீக்கம், பிள்ளைப்பேறு, நீடிய வாழ்நாள், கல்வி அறிவு, செல்வம் முதலியனவழங்குவதில் தலைசிறந்த திருத்தலமாக இது விளங்குகிறது. ஆதலால் தமிழ்நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் அன்பர்கள் பல்வேறு வகையான வேண்டுதல்கள் நிறைவேறவும், நிறைவேற்றவும் இங்கு வருகின்றனர்,

'குன்றக்குடிக்காவடி' என்பது புகழ்பெற்றது. 'குன்றக்குடிக்குக் காவடியெடுத்தாலும் நடக்காது' என்றபழமொழி தமிழகத்தில் பரவியுள்ளது. இப்பழமொழியால் 'குன்றக்குடிக்குக் காவடியெடுத்தால் நினைத்தவைகைகூடியேதீரும், என்பதுஎதிர்மறையாக வலியுறுத்தப்பெறுகிறது. ஆதலால் இங்குப்பல்லாயிரக்கணக்கான மக்கள் காவடிகளும் பால்குடங்களும் எடுத்து வருகின்றனர். உடற்பிணிகள் நீங்குதற்பொருட்டு ஆண்கள் திருவீதியில் அங்கப்பிரதட்சணமும், பெண்கள் கும்பிடு தண்டமும், அடிப்பிரதட்சணமும் நிறைவேற்றுகின்றனர். குழந்தைப்பேறு நிலை பெற பிள்ளைப் மாற்றுதல் (சண்முகநாதனிடம்குழந்தையைக் காணிக்கையாக்கித் திரும்பப் பெறுதல்) பாதம், கை, முழங்கை, முழங்கால், முதலிய உடற் பிணிகள் தீர வெள்ளியாலான அந்தந்த உறுப்பு வடிவங்களை இக்கோயிலில் காணிக்கை செலுத்துகின்றனர்; அக்கினிக் காவடி, பறவைக் காவடி, சர்ப்பக்காவடி, சேவற் காவடி, மச்சக்காவடி, வேல்காவடி முதலியன (இந்தக் காவடிகள் அருள்தரு சண்முகநாதன் உத்தரவு கிடைத்தபின் ஒரு மண்டல விரதமிருந்து) எடுத்து வருகின்றனர். தோல் வியாதிகள், சொரி படை நீங்க சரவணப் பொய்கையிலும் இடும்பன் சந்நிதியிலும் உப்பும் மிளகும் போடுகின்றனர். தானியங்கள் நிறைவிளைச்சல் பெற இடும்பன் சந்நிதியில் தானியங்களைக் காணிக்கையாக்குகின்றனர். தம்வேண்டுதல்கள் நிறைவேற அரிசி கொண்டுவந்து மலைப் படிகளில் தூவுகின்றனர்; குழந்தைகளைக் கரும்புத் தொட்டிலில் படுக்க வைத்து, மலையைச் சுற்றி வருகிறார்கள், பல ஊர்களிலிருந்தும் மாட்டு வண்டிகளில் அரிசி மூட்டைகள், தேவையான காய்கறிகள் கொண்டுவந்து சோறு வடித்துப் போடுகின்றனர். இவ்வாறு விழாக்காலங்களில் சோறு வடித்துப்போட ஆயிரக் கணக்கான வண்டிகள் வருகின்றன. வீட்டுப்பிராணிகள் பல்கவும், நோய்தீரவும்; கோழி, ஆடு, மாடு முதலியன உபயம் செய்கின்றனர். மேலும் அவரவர் வேண்டுதலுக்கு ஏற்றவாறு பொருள்கள் உபயம் செய்கின்றனர். எத்தனையோ வகையான வேண்டுதல்கள் நிறைவேறி வருகின்றன உடலுறுப்புநோய் – வாதம் முதலியன தீர நியாச அருச்சனை செய்கினறனர். மேலும் சண்முகார்ச்சனை, சண்முக வேள்வி முதலியன செய்கின்றனர்.

நகரத்தார்கள், ஆச்சிமார்கள் நடந்துவந்தே வழிபாடு செய்கின்றனர். வாரந்தோறும், கார்த்திகை தோறும் விழாக்கள் தோறும் வருகின்றனர்; பிராத்தனை செய்து கொண்டு பதினொருநாள் தங்கி வழிபாடு செய்கின்றனர்; தைப்பூச விழாநாட்களிலும் பங்குனிஉத்தர விழாநாட்களிலும் காவடிகளும், பால்குடங்களும் எடுத்துவருவது கண்கொள்ளாக்காட்சி.

அறந்தாங்கிப்பகுதியில் வாழும் மக்கள் பெருமான்மீது நிறைந்த ஈடுபாடு உடையவர்கள்; அவர்கள் நிறைவேற்றும் வேண்டுதல்கள் பல.

சண்முகநாதன் அனைவருக்கும் அருள்சுரந்து, கருணைக் கடலாக விளங்கிக் கொண்டிருக்கிறார்.

# 17. சமயப்பணிகள்

1 விசாக விழா, பங்குனி உத்தரவிழா முதலிய விழாக்களிலும் சிறப்பு நாட்களிலும் சமயச் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன.

2. திருவிழாக் காலங்களில் திருப்புகழ், திருமுறைப்பாராயணம், வேதபாராயணம் ஆகியன நிகழ்கின்றன.

3. மலைக்கோயிலில் நாள்தோறும் காலை, மாலை இருவேளைகளிலும் தக்க இசைக் கருவிகளுடன் பயிற்சி பெற்ற ஓதுவா மூர்த்திகள் திருப்புகழ், திருமுறைப்பாடல்கள் பாராயணம் செய்து வருகின்றனர்.

4. குன்றக்குடி தெய்வசிகாமணி அருள் நெறித் தொடக்கப் பள்ளியிலும் தருமைக் கயிலைக் குருமணி உயர்நிலைப்பள்ளியிலும் திருமுறை வகுப்பு ஏற்படுத்தித், தகுதியான ஓதுவார்களால் பள்ளி மாணவர் மாணவியர்க்குத் திருமுறைப் பாடல்கள் கற்பிக்கப் பெற்று வருகின்றன.

5. வெள்ளிக்கிழமை தோறும் மலைக்கோயிலில் வார வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது.

6. திங்கள் தோறும் கடைசி வெள்ளிக்கிழமையன்று சமயத் துறை அறிஞர்களைக் கொண்டு, மலைகோயிலில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவிக்கப் பெறுகிறது.

7. திருக்கோயில் தலவரலாறு, சண்முகநாதப் பெருமான் பிரபந்தத்திரட்டு. சண்முகநாதன் தோத்திரத்திரட்டு, வழிபாட்டுப்

பாமாலை முதலிய நூல்கள் அச்சிடுவித்து அடக்கவிலைக்கு வழங்கப் பெறுகின்றன.

8. குன்றக்குடி இசைஞானியார் மாதர்சங்க மூலம், மார்கழித் திங்களில் பாவை நோன்பு நடத்துவித்து,இந்த நோன்பில் கலந்து கொண்ட மகளிர்க்குப் புத்தாடைகள் வழங்கி ஊக்குவிக்கப்பெறுகிறது.

9. அறுபான் மும்மை நாயனமார்கள் செய்த திருத்தொண்டுகள், காலத்துக்கும், இயல்பிற்கும், தேவைக்கும் ஏற்றவாறு எளிமைப்படுத்திச் செய்யப்பெறுகின்றன. இப்பணிக்கென 1972- ஆம் ஆண்டு, 45 ஆவது மகாசந்நிதானம் திருவருள் திரு. அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் எழுதப் பெற்ற "நாயன்மார்களின் அடிச்சுவட்டில்" என்ற 28பக்கங்கள் கொண்ட செயற்பணிக்கையேடு புத்தகம் வெளியிடப்பெற்றுள்ளது. அந்தப்புத்தகத்தில் கண்டுள்ளவாறு இப்பணி நடைபெறுகிறது. நாயன்மார் திருத்தொண்டுகள் அனைத்தையும் விரிவஞ்சி இங்கே குறிப்பிடவில்லை. உதாரணமாகச் சில தொண்டுகள் மட்டும் குறிக்கப் பெறுகின்றன.

## 1. திருநாவுக்கரசு சுவாமிகள் சித்திரை-சதயம்:

1) திருக்கோயில் உழவாரத் தொண்டு செய்யப்பெறுகிறது.
2) திருவலகு, திருமெழுக்கு இடும் முறையைக் கவனித்துச் சீரமைக்கப்பெறுகிறது.
3) மேற்கண்ட தொண்டு புரிவோர்களுடன் கலந்துரையாடி அவர்கள் நலனுக்கு உகந்தன செய்யப் பெறுகின்றன.

## 2. திருக்குறிப்புத் தொண்டர்; சித்திரை-சுவாதி:

1) திருக்கோயிலில் பரிவட்டங்கள் தூய்மை செய்யப் பெறுகின்றன. பரிவட்டம் தூய்மை செய்யும் தொண்டு செய்வோர்களுடன் கலந்துரையாடி அவர்கள் நலனுக்கு கந்தன செய்யப்பெறுகின்றன.

## 3. திருஞான சம்பந்தர்; வைகாசி-மூலம்:

1) தேவாலயம் நடத்திவரும் சுகாதார நிலைய நடைமுறை பற்றி ஆய்வு செய்யப் பெறுகிறது.
2) உடல் நலக்குறைவு காரணமாக இளைத்த பெண்களுக்கு-மாணவியர்களுக்குச் சத்துணவு வழங்கப்பெறுகிறது.

### 4. சுந்தரமூர்த்தி நாயனர்; ஆடி-சுவாதி:

1) சிவாசாரியர்களின் தகுதி, நிலை முதலியன குறித்து ஆய்வு செய்யப் பெறுகிறது.

2) சிவசாரியர்களுடன் கலந்துரையாடல் செய்து அவர்கள் நலனுக்குரியன செய்யப்பெறுகின்றன.

### 5. திருநாளைப்போவார்நாயனர்; புரட்டாசி-உ ரோகிணி:

1) தீண்டாமை விலக்குப் பணிகள் செய்யப் பெறுகின்றன.

2) தேவாலய நிலங்களில் உழவடை செய்பவர்கள், ஊழியம் செய்பவர்கள் முதலிய தாழ்த்தப்பட்ட மக்களுடன் திருக்கோயில் சிறப்பு வழிபாடு செய்யப்பெறுகிறது.

### 6. மானக்கஞ்சாற நாயனர்; மார்கழி-சுவாதி.

1) திருக்கோயில் முடியெடுக்கும் இடங்கள் சீர்செய்யப் பெறுகின்றன.

2) முடியெடுக்கும் பணியாளர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் நலம் பேணப்பெறுகிறது.

### 7. கண்ணப்ப நாயனர் திருநாள்; தை-மிருகசீரிடம்:

1) திருக்கோயில் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கண் ஆய்வு செய்யப்படுகிறது.

2) தேவையானல் கண்மருத்துவம் செய்யப்படுகிறது; தேவைக்குக் கண்ணடி வாங்கித்தரப்படுகிறது.

## 18. பொதுப்பணிகள்

### 1. வானெலி நிலையம் :

பொதுமக்களின் நலங்கருதி, சண்முகநாதன் மீது மாருத பேரன்பு பூண்டிருந்த மருதுபாண்டியர் நினைவாகக் கீழரத வீதியில் "வீரமருதுசகோதரர்பூங்கா" அமைத்து 1950 இந்தியக்குடியரசு நாளன்று திறந்து அங்கு வானெலி நிலையம் அமைக்கப்பெற்றுள்ளது. மேலரத வீதியில் ஒரு வானெலி நிலையமும் அமைக்கப் பெற்றுள்ளது. இவற்ருல் ஊர்ப்பொது மக்கள், உலகச் செய்திகள் கேட்டுப் பயனடைகின்றனர்.

## 2. நூலகம், படிப்பகம் :

மேலரத வீதியில் திருக்கோயில் நூலகமும், படிப்பகமும் அமைக்கப் பெற்றுள்ளன. படிப்பகத்திற்குநாள் இதழ்கள், வார இதழ்கள், திங்களிதழ்கள் பல தருவிக்கப் பெறுகின்றன. இங்குப் பொதுமக்கள் வந்து படித்துப் பயனடைகின்றனர்.

## 3. தண்ணீர் வசதி :

ஞானியார் மலைமேல் ஏறத்தாழ ரூ. 3500/- செலவில் மேல் நிலைத் தண்ணீர்த் தொட்டி அமைத்து, 3-8-1957 இல் திறந்து மேல வையாபுரிக் குளக் கரையிலுள்ள பாதுகாக்கப்பட்ட கிணற்றிலிருந்து தண்ணீரைஏற்றி அங்கிருந்து மோட்டார் செட் உதவியால் நான்கு வீதிகளுக்கும், மற்றுமுள்ள பகுதிகளுக்கும் குழாய்கள் வழி இவ்வூர்ப் பொது மக்களுக்குக் குடி தண்ணீர் வசதிசெய்து தரப் பெற்றுள்ளது.

## 4. மருத்துவ வசதி :

தெற்கு ரத வீதியில் சிறு சுகாதார மையம் (Mini Health Centre) அமைக்கப் பெற்றுள்ளது. இதில் முழுநேர மருத்துவ அதிகாரி, மருத்துவ உதவியாளர், மகப்பேறு உதவியாளர் ஆக மூவர் பணிசெய்து வருகின்றனர். இந்த மூவருக்கும் உரிய ஊதியமும் இந்த மையத்துக்குத் தேவையான மருந்துச் செலவும் பராமரிப்புச் செலவுகளும் வழங்கப் பெறுகின்றன. இவ்வூர் மக்களும், சுற்றுக் கிராம மக்களும் இதனால் பயனடைந்து வருகின்றனர்.

## 5. விளக்கு வசதி :

திருக்கோயில் செலவில் இவ்வூர்த் தெருக்களில் 64 மின் விளக்குகள் அமைக்கப் பெற்றுள்ளன. அவற்றுக்குரிய பராமரிப்பும், மின்கட்டணச் செலவும் இத்திருக்கோயில் மேற்கொள்கிறது.

## 6. சுகாதார வசதி :

இவ்வூர்த் தெருக்களைத் தூய்மை செய்யும் பணியாளர்கள் மூவரை ஊதியம் பெறும் ஊழியர்களாக நியமித்து,, எல்லாத் தெருக்களையும் தூய்மையுடன் விளங்கச் செய்து வருகிறது.

## 7. மாணவர்க்கு உதவி :

குன்றக்குடி ஸ்ரீ தெய்வசிகாமணி அருள்நெறித் தொடக்கப் பள்ளி, தருமைக் கயிலைக்குருமணி உயர்நிலைப்பள்ளி ஆகிய

பள்ளிகளில் பயிலும், உதவி தேவைப்படும் மாணவர்களுக்கும் மாணவியர்களுக்கும் பள்ளிஆண்டுத் தொடக்கத்தில் சீருடைகள், பாடப்புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள் ஆகியன ஆண்டுதோறும் திருக்கோயில் நிதியிலிருந்து வாங்கி வழங்கப் பெறுகின்றன.

## மருதாபுரி சீரமைப்புப்பணி:

மருதுபாண்டியரால் உண்டாக்கப் பெற்ற வற்றுத மருதாபுரித் திருக்குளம் 1973–ஆம் ஆண்டில் வற்றிவிட்டது. இத்திருக்குளத்தின் கட்டுமானம்–வரிக்கற்கள் நாலாபுறமும் இடிந்தும் சரிந்தும் கிடந்தன. 'அறம் செய்வதிலும் அறங்காப்பது மேல்' என்பது ஆன்றோர் வாக்கல்லவா? மகாசந்நிதானம் இத்திருக்குளத்தைச் சீர் செய்யத் திருவுள்ளம் பற்றினர்கள். நூற்றுக்கணக்கான மக்கள் நாள்தோறும் சேறு அள்ளும் பணி செய்தனர். சேறு முழுவதும் அள்ளித் துப்புரவு செய்யப் பெற்றது. திருக்குளச் சுற்றுக் கட்டுமானம் செப்பனிடப்பெற்றது. மக்கள் குளிப்பதற்கு வசதியாக வடக்குப்பக்கம் கிழக்கேயிருந்து இரண்டாவது படித்துறையும் புதிதாகக் கட்டுவிக்கப் பெற்றது, இந்தத் திருக்குளப் பணி, ஏறத்தாழ நாற்பதாயிரம் ரூபாய் செலவில் நிறைவேற்றப் பெற்றது. நாள்தோறும் நூற்றுக்கணக்கான பணியாளர்களுக்கு மதிய உணவும் வழங்கப்பெற்றது. இத்திருப்பணி 1973ஆம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்களில் தொடங்கப்பெற்று செப்டம்பரில் நிறைவெய்தியது.

# 19. நிர்வாகம்

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் அருளாட்சிக் குட்பட்ட பிரான்மலை வகை ஐந்து கோவில்களில் ஒன்றாக விளங்குவது குன்றக்குடி அருள்மிகு, சண்முகநாதப் பெருமான் திருக்கோவில்.

இந்த ஆதீனத்தின் குருமுதல்வர் திருவருள் திரு. தெய்வ சிகாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆதிசைவ மரபில் இற்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர். அருணந்தி சிவத்தின் நாற்பத்தெட்டுச் சீடர்களுள் ஒருவர்; காளத்தியப்பரை ஆன்மார்த்த மூர்த்தியாகப் பெற்ற அருளாளர்; அற்புதங்கள் பல

நிகழ்த்தியவர். இப்பேரருளாளரின் வாழ்க்கை வியக்கத்தக்க மாட்சிமையுடையது. இவர் தம் அருள் வாழ்க்கை வரலாற்றைச் சிலைவடிவக்காட்சிகளாக இன்றும் திருவண்ணாமலையிற் காணலாம். தம் அருமைச் சீடர்களுக்குச் சிவஞான போதத்தை உபதேசித்துத் திருவண்ணாமலைப்பதியிலேயே கோயில் கொண்டுள்ளார்.

இந்த அருளாளர் மரபில் குருமூர்த்திகள் பலர் ஞானபீடம் எழுந்தருளினர். அவர்களில் 17-ஆவது குருமூர்த்தியாக எழுந்தருளியவர்கள் திருவருள்திரு. நாகலிங்க தேசிக பரமாசாரிய சுவாமிகள். இவர்கள் ஒருமுறை திருத்தலப்பயணம் மேற்கொண்டு பலதிருத்தலங்கள் சென்று வழிபட்டுக்கொண்டு திருச்சுழியலுக்கு, எழுந்தருளினார்கள். இச்செய்தியறிந்த இராமநாதபுரம் சேதுபதி மகிழ்ச்சியடைந்தார்; திருச்சுழியலுக்கு வந்து சுவாமிகளை வணங்கினார்; இராமேச்சுரத்துக்கு எழுந்தருளுமாறு வேண்டிக் கொண்டார். சுவாமிகளும் அவ்வாறே இராமேச்சுரத்துக்கு எழுந்தருளி வழிபட்டுத் திரும்பினார்கள். அதுபோழ்து இராமநாதபுரம் மன்னர் சுவாமிகளை வணங்கி, இராமநாதபுரம் மாவட்டத்திலேயே தங்கி அருளாட்சிபுரிய வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். சுவாமிகள் தம் சீடருள் ஒருவரை குருபீடத்தில் அமர்த்திவிட்டுத் தாம் திருவண்ணாமலைக்கு எழுந்தருளினார்கள். குரு பீடத்தில் அமர்த்தப் பெற்ற குருமூர்த்திகள் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பிரான்மலையில் தங்கி, தம் அருளாட்சியைத் தொடங்கினார்கள். இந்த, மரபு தொடர்ந்து பிரான்மலையில் ஆட்சிபுரிந்து வந்தது. பின்பு இவ்வாதீன குருமூர்த்திகள் குன்றக்குடிக்கு வந்து அருளாட்சி செய்யத் தொடங்கினர். காளத்தியப்பரைத் திருமடாலயத்தில் எழுந்தருளச் செய்தனர். அன்றுமுதல் திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடியில் திகழ்ந்து வருகிறது.

இந்த ஆதீனத்தின் 45-வது மகாசந்நிதானமாக இப்போது எழுந்தருளியிருப்பவர்கள் ; திருவருள் திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு. குன்றக்குடி அடிகளார்) அவர்கள். இந்த ஆதீனம் மக்களுக்கும் சமயத்திற்கும், தமிழுக்கும் ஆற்றிவரும் தொண்டுகள் பல. தமிழ்நாடெங்கும் உள்ள ஆதீனத்துக்குச் சொந்தமான பழைய கட்டடங்கள் புதுப்பிக்கப்பெற்றும், மனைகளில் புதுக்கட்டடங்களை எழுப்பியும், நிலங்களில் மரங்கள் அபிவிருத்தி செய்தும் திட்டமிட்டு வருவாய் உயர்த்தப் பெற்றுள்ளது. தீண்டாமை ஒழிப்பு, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் முன்னேற்றம் முதலிய சமுதாயப் பணிகளைச் செய்து வருகிறது. ஆதீனக் கோயில்களில் தீண்டாமை இல்லை.

அரிசனங்களுக்குக் குடியிருப்பு வசதி அமைத்துக் தருதல்வேலை வாய்ப்புப் பெற்றுத் தருதல் முதலிய பணிகளை அரசின் துணை கொண்டு செய்து வருகிறது. பல கல்வி நிறுவனங்களைத் தோற்று வித்து நிர்வாகம் செய்து வருகிறது. தமிழ் நாட்டில் நெல்லை, மதுரை, இராமநாதபுரம், தஞ்சை மாவட்டங்களில், பரவலாக மூன்று புண்ணிய விடுதிகளும், இரண்டு பாலர் பள்ளிகள், இரண்டு தொடக்கப்பள்ளிகள், ஆறு இடைநிலைப் பள்ளிகள், ஆறு உயர் நிலைப் பள்ளிகள், ஒரு கலைக்கல்லூரி (திருவள்ளுவர் கல்லூரி பாவநாசம், நெல்லை மாவட்டம்) ஆகிய 17 கல்வி நிறுவனங்களும் நடைபெற்று வருகின்றன,

குன்றக்குடியில் உள்ள மக்கள் பொருளாதாரத்தில் முன் னேற்றம் பெறக் கூட்டுறவுத்தொழில் நிறுவனங்கள் பலதோன்றத் துணை செய்துள்ளது. குன்றக்குடிக் கிராம ஒருங்கிணைப்புத்திட்டத் தை உருவாக்கி, காரைக்குடி மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சி நிலையத்தினரின் அறிவையும்,பாரதஸ்டேட்.வங்கியின் (திருப்பத்தூர் கிளை) நிதியும் உதவியைகொண்டு குன்றக்குடிக் கிராமத்தைத் தன் னிறைவுக்கிராமமாக்கும் முயற்சிகளில்ஈடுபட்டுள்ளது. 'கோயிலைத் தழுவிய குடிகளும்; குடிகளைத் தழுவிய கோயிலும்" உருவாக் வேண்டும் என்பது இந்த ஆதீனத்தின் இதய ஒலியாகும். அவ் வகையில் இயன்ற முயற்சிகள் செய்து வருகின்றது. வெள்ளம், தீ விபத்துக்களால் பாதிக்கப்படும்மக்களுக்கு அவ்வப்போது ஆடை களும்; உணவும் அளித்து வருகிறது. மேலும்பல அறப் பணிகளைச் செய்து வருகிறது; திருநெறிய தமிழ்பரவவும் ,செந்தமிழ் வழக்கு அயல் வழக்கின் துறை வெல்லவும், சமயஇலக்கியப் பெருவிழாக்கள் எடுத்தும், பணி செய்து வருகிறது.

குன்றக்குடித் திருவண்ணமலை ஆதீன கர்த்தரவர்கள், குன்ற க்குடி அருள்மிகு. சண்முகநாதப் பெருமான் திருக்கோயிலின் பரம் பரை அறங்காவலர் ஆவார்கள். இப்போது இந்தஆதீனகர்த்தரவர் களாக எழுந்தருளியிருக்கும் 45-ஆவது மகாசந்நிதானம் திருவருள் திரு தெய்வசிகாமணி அருணசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு. குன்றக்குடி அடிகளார்) 16-6-1952 அன்று அருளாட்சி க்கு வந்தார்கள். அன்று முதல் இத்திருக்கோலியில் பரம்பரை அறங்காவலராக அமர்ந்து திருக்கோயிலில் நிர்வாகம் செய்து வருகிருர்கள். திருக்கோயில் நன்கு பேணப்பெற்று எப்போதும் தூய்மைப் பொலிவுடன் விளங்கிக்கொண்டிருக்கிறது வழிபாட் டுக்குவரும் அன்பர்களுக்குத் திருவிழாக் காலங்களிலும், மற்ற நாள்களிலும் ஏற்ற வசதிகள் செய்துதரப் பெறுகின்றன. அறப் பணிகள் பல செய்யப் பெறுகின்றன.

# 20. சொத்துக்களும், வருமானமும்.

45-ஆவது மகாசந்நிதானம் திருவருள் திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளாட்சி ஏற்குமுன் (சின்னப்பட்டமாக இருந்தபோது) 54 கிராமங்களும், அவற்றில் ஒன்றேகால் இலட்சத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களும் இருந்தன அப்போது இத்திருக்கோயிலின் மொத்த வருமானம் ரூ. 1,39,000/–. ஜமீன் இனும் ஒழிப்புக் காலத்திற்குப்பின் இத்திருக் கோயிலுக்கு பலவான்குடி, உ. சிறுவயல், நேமம், குன்றக்குடி, அரிபுரம், கே. ஆத்தங்குடி, சாலி ஆகிய கிராமங்களில் நன்செய் ஏக்கர் 57 சென்ட் 86ம்,புன்செய் ஏக்கர் 209 சென்ட் 58ம் எஞ்சி யிருக்கின்றன. இந்தச் சொத்துப் பொறுப்புக்களுடன் 45-ஆவது மகா சந்நிதானம் அருளாட்சிக்கு வந்தார்கள். வருவாய்த்துறையில் கடுமையான முயற்சிகள் செய்யப்பெற்றுள்ளன. பயன் மரங்கள் அபிவிருத்தி, அவற்றில் குறிப்பிடத்தக்கது. திருக்கோயில் வருவாய் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது, 1387ம் பசலி (1978) மொத்த வருமானம் ரூ 5,26,437/- ஆகும்.

| | | |
|---|---|---|
| நில வருவாய் | ரூ | 1,33929—00 |
| கட்டட வருவாய் | ரூ | 8128--00 |
| தஸ்திக் அலவன்ஸ் | ரூ | 96512 00 |
| உண்டியல் வருவாய் | ரூ | 70863 – 00 |
| அருச்சனை வகைவருவாய் | ரூ | 2,17005—00 |
| மொத்தம். | | 5,26437 – 00 |

மேலும் வருவாய்ப் பெருக்கத்திற்குரிய வழிமுறைகளும் முயற்சி களும் மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

# 21. கல்வெட்டுச் செய்திகள்

கீழக்கோயிலின் பல கல்வெட்டுக்கள் உள்ளன. 45–ஆவது மகா சந்நிதானம் திருவருள்திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திருவுள்ளப் பாங்கின் வண்ணம், 1978 ஆம் ஆண்டில் கரந்தைத் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் திருமிகு. சி. கோவிந்தராசனர் இக்கல் வெட்டுக்களை நேர்படியெடுத்துள்ளார். சில கல் வெட்டுக்கள் சிதைந்துவிட்ட

தால் அந்தக் கல்வெட்டுச் செய்திகள் அறியமுடியாது போய் விட்டன. படி எடுக்கப்பெற்ற கல்வெட்டுச் செய்திகள் பின் வருமாறு:

**1.** *இடம்:* நடுவிலுள்ள குடைவரைக்கோயில்– அண்ணுமலேயார் கோயில், மூக மண்டபம் இடப்புறத்தூணின் முன்பக்கம் மேற் சதுரப்பரப்பு

இங்கு ''மாசிலீச்சுரம்'' என்னும் வட்டெழுத்துக் கல்வெட்டு உள்ளது. இஃது எட்டாம் நூற்ருண்டைச் சேர்ந்தது. அதனுல் இங்குஎழுந்தருளியுள்ளவர் 'மாசிலீச்சுவரர்' என்பதும், கோயிலின் பெயர் 'மாசிலீச்சுரம்' என்பதும் புலனுகும். இக்கல்வெட்டு மூலம் இக்கோயில் 1200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது தெளிவா கிறது.

## 2. முதல் இராசராச சோழன்

*(கி. பி 985–1014)* காலக் கல்வெட்டு:

*இடம்:* மலேக்கொழுந்துநாதர் கோயில் முக மண்டபம் இடப்புறச் சுவர்த் தூண் முகப்பில் உள்ளது.

*காலம்:* கி. பி. 1008.

*செய்தி:* பாண்டிநாட்டு, இராஜ ராஜ வளநாட்டுத் தேனுற்றுப் போக்கில் உள்ள ஊர்களேத் தனக்குரிய ஜீவிதமாகப் பெற்றவனு கிய, இராஜ ராஜ தேவர் பெருந்தரத்து மூகுந்தனூர் உடையான் காடன் ஸ்ரீ ஆரூர் தேவன் என்பவன், திருக்குன்றக்குடி பரமஸ்வாமிக்குத் தேனுற்றுப் போக்கில் நிவந்தம் செய்துள்ளான். இக்கல்வெட்டு இராஜ ராஜ சோழனின் மெய்க்கீர்த்தியாக விளங்குகிறது.

## 3. முதற் குலோத்துங்கன்

*(கி. பி. 1070–1120)* காலக் கல் வெட்டுக்கள்.

*(அ) இடம்:* சுந்தரேசுவரர் கோயில் முக மண்டபம், வலதுபுறக் சுவர்த்தூண், முகப்பு

*காலம்:* கி. பி. 1092.

*செய்தி:* குன்றக்குடியான தென்புகல்லூர்ஊரார், குன்றக்குடி மகா

தேவர்க்கு, திருவிழாப்புறமாகக் கூனன் குளத்துப் புறக்கரையில் பத்து மாநிலம் எல்லைக்கல் நாட்டி நிவந்தமாகத் தந்துள்ளனர்.

(ஆ) இடம்: சுந்தரேசுவரர் கோயில் முகமண்டபம் வலப்புறத் தூண், கிழக்கு முகப்பு, கீழ்ப்பகுதி.

காலம்: கி. பி. 1092.

செய்தி: இநாவை மூவூர் நாராயணகேசவநாததேவன் குன்றக்குடி திருமலையுடைய நாயனுர்க்கு ஆடி அந்தத்தில் குடம்நீர் அபிஷேக மாடியருள வெட்டி குரவயலில் உமை நங்கை வயக்கல் அரைமா நிலம் நிவந்தம் செய்துள்ளான்.

(இ) இடம்: சுந்தரேசுவரர் கோயில் முகமண்டபம், வலதுபுறச் சுவர்.

காலம்: கி. பி. 1110.

செய்தி: தேனுற்றுப்போக்கு இடைக்குடியான இரவிகுலமாணிக்க நல்லூர், செங்கணி பலகையான்குடி, வெழுவூர், காஞ்சிரங்குடி, வேட்டங்குடி, ஆர்க்காடு, சிறுகுடி, சிறுவயல், தாயக்குடி ஆகிய ஒன்பது ஊரார்கள் சேர்ந்து நிவந்தம் செய்துள்ளனர்.

(ஈ) இடம்: சுந்தரேசுவரர் கோயில் முகமண்டபம் இடப்புறச் சுவர்த்தூண்.

காலம்: கி. பி. 1110.

செய்தி: பாண்டி நாட்டு அதளையூர் நாடாழ்வானுன ஐந்நூற்றுவன் உய்யவந்தான் என்னும் நாடு காவலதிகாரி, தனக்குரிய ஜீவித வருவாயாக இருந்த ஊர்கள், செங்கணி, பலவான்குடி, பூரவு வர நல்லூர், சிறுவெட்டி வயல், மணியாத்திறல், பாலைவாயில் மற்றும் உரிமையுடைய ஊர்களில் தேவதானமாயுள்ள நிலங்களுக்கு இறைநீக்கி நிவந்தம் செய்து கல்வெட்டிக் கொடுத்துள்ளான்.

(உ) இடம்: நடுவிலுள்ள அண்ணமலையார் கோயில் முகமண்டபம் சுவர் புடைப்புத்தூண்.

காலம்: கி. பி. 1110

செய்தி: முதற் குலோத்துங்கனுடைய ஆட்சியில் வீரசேகரனுன விருதராஜ பயங்கர அதளையூர் நாடாழ்வான் எனும் அரசியல

திகாரி, தேனூற்றுப் போக்கில் தன் சீவனத்துக்குரிய வருவாயாக அமைந்த திருக்குன்றக்குடி, காஞ்சிரங்குடி, வெழுவூர், படைக் காணி, வேட்டகுடி, சாழி, பாதிரிக்குடி, பாரிச்சுரமங்கலம், மேற் கண்ணமங்கலம் ஆகிய ஊர்களில் தேவதானமாய் அமைந்த நிலங்களையெல்லாம் இறைதவிர்த்துக் குன்றக்குடி மகாதேவர்க்குக் கொடுத்துள்ளான்.

(குறிப்பு: பாரிச்சுரமங்கலம், என்பது பிரான்மலைக் கல்வெட்டுக் களிலும் குறிக்கப்படும் ஊர்.)

(ஊ) இடம்: சுந்தரேசுவரர் கோயில் முகமண்டபம் வலப்புறத் தூண் முன் முகப்பு மேலிருந்து கீழ் வரை.

காலம்: கி. பி. 1118

செய்தி: அகரல் கிராம விஸ்வப் பிராமணர்க்கு, விற்கிலாமயல் குளத்தில் நன்னீர் எடுக்கவும், சுத்த அறமலிக் குளத்தில் குளிக்கவும் பிரமாணம் செய்தளிக்கப் பெற்றது.

(எ) இடம்: சுந்தரேசுவரர் கோயில் முகமண்டபம், இடப்புற விளிம்புச்சுவர் உட்பார்வை.

காலம்: கி. பி. 1119.

செய்தி: குன்றக்குடி திருமலையுடைய மகா தேவர்க்கு அதளையூர் நாடாழ்வான் வீரசேகரன் என்னும் நாட்டதிகாரி குன்றக்குடிக்குக் கிழக்கேயுள்ள கீழக்கண்ணமங்கலத்தில் தனக்கு உரிமையுடைய வரிவருவாய்களை திருவமுதுக்குரிய் நிவந்தமாகச் செய்துள்ளான்.

## 4. சடையவர்மன் ஸ்ரீ பல்லவ தேவன்
(கி. பி. 1115-1137) காலக்கல் வெட்டுக்கள்.

(அ) இடம்: சுந்தரேசுவரர் கோயில் கருவறையில் இடப்புறம்.

காலம்: கி, பி, 1119,

குன்றக்குடி மலையில் மூலஸ்தானமுடைய சுவாமிக்கு, அதளையூர் நாடாழ்வான் மும்முடிச் சோழன் வீரசேகரன் திருக் கண்ணமங்கலத்தில் தனக்கு உரிமையான இறை, குடிமை, கடமை' புகவிறை, அந்தராயம் ஆகிய வரி வருமானங்களை நிவந்தம் செய்துள்ளான்.

(இறை: அரசுக்குச் செலுத்தும்வரி, குடிமை: குடியிருப்பு வரி, (தலைக்கட்டுவரி) கடமை: வருமானத்தில் ஆறில் ஒருபங்கு அரசுக்கு அளிப்பது, புகவிறை: புதிய குடியிருப்புக்குரிய வரி (Residential - Tax), அந்தராயம்: புதிதாக அமைந்த வருமான- சிறுவரி.)

குறிப்பு: சடையவர்மன் ஸ்ரீ வல்லப பாண்டியன் பாண்டியர் மரபில் வந்தவனாயினும், முதற்குலோத்துங்க சோழன் ஆட்சியில் பாண்டிய நாடு அடங்கியிருப்பதால், அவனுக்கு அடங்கிய குறுநில மன்னனாக இருந்துள்ளான்.

(ஆ) இடம்: சுந்தரேசுவரர் கோயில் முகமண்டபம் இடப்புறத் தூண், மேற்கு முகப்பு மேலிருந்து.

காலம்: கி. பி. 1119

செய்தி: கேரள சிங்க வளநாட்டு அதளையூர் நாடாழ்வான், வெள்ளானை விடங்கன் அபையனூரான், குன்றக்குடித் திருமலையில் மூலத்தான சுவாமிக்கு மேற்கண்ண மங்கலத்தில் தனக்கு உரிமையாக இருந்த இறையிலி நிலத்தைத் தேவதானமாக அளித்துள்ளான்.

(இ) இடம்: சுந்தரேசுவரர் கோயில் கருவறை வாயிலுக்கு இடப் புறச் சுவரில் உள்ளது.

காலம்: கி. பி. 1119

செய்தி: அதளையூர் நாடாழ்வான் மும்முடிச் சோழன் வீரசேகரன், மேற்கண்ண மங்கலத்தில் தனக்கு உரிமையான வரி, இறை, அந்தராயம் முதலிய வருமானங்களை குன்றக்குடித் திருமலை மூலத்தானமுடைய நாயனார்க்கு நிவந்தம் செய்துள்ளான்.

(ஈ) இடம்: நடுவிலுள்ள அண்ணாமலையார் கோயில் முக மண்டபம் இடப் புறத்தூண் முன்முகப்பு:

காலம்: கி. பி. 1123.

செய்தி: திருக்குன்றக்குடிக் கட்டி அரசன் என்பவன், தேனாற்று நாயகருக்கு, திருநந்த வனத்துக்குரிய நிலமாக (1) அவிச்சுனை யின் கீழ்கரையிலும்' (2) திருக்குன்றக்குடி குளத்துள் புற கரையிலும் (3) மேற்கண்ண மங்கலத்தில் தடம் இரண்டும்

ஆக நிலம் ஒருமா கொடுத்துள்ளதோடு, பிள்ளையார்க்கு மாறன் சாத்தானல் வடகீழ்க்குடிக் கட்டின நிலத்தில் காணி நிலமும் கொடுத்துள்ளான்.

*(உ) இடம்:* மலைக்கொழுந்துநாதர்கோயில் முகப்பு, அடைப்புச் சுவர் மேற்குப் புறச்சுவர்.

*காலம்: கி. பி. 1137*

*செய்தி:* குன்றக்குடித் திருமலை உடையார் தேனாற்று நாயகர் கோயில் ஸ்ரீ கார்யம் செய்யும் மஹேஸ்வரர், மீகாமப் பல்லவ தரையர்க்கு, கோயிலுக்குரிய தரிசு நிலங்களைச் சீர்திருத்தித்தர உரிமையளித்துள்ளார்கள்.

## 5. ஸ்ரீ விக்கிரமபாண்டிய தேவர்

*காலம்: (கி. பி. 1180- 1190)* காலக் கல் வெட்டுக்கள்.

*(அ) இடம்:* சுந்தரேசுவரர் கோயில் முக மண்டபம், இடப்புறத் தூண், கிழக்கு, முகப்பு மேலிருந்து கீழ்:

*காலம்: கி, பி. 1186.*

*செய்தி:* அதளையூர் நாடாழ்வான் வீரசேகரன் என்னும் நாட்டதிகாரி, குன்றக்குடித் திருமலை சுவாமிக்குரிய நிவேதன அமுதுகட்குத் தனக்கு உரிமை வருவாய் ஊர்களாகிய திருக் குன்றக்குடி வயலிலும், மணியாத்திறல் நல்லூர் வயலிலும் ஏழுமா அளவில் நிலங்களைத் தேவதான இறையிலியாக கொடுத் துள்ளான்.

*(ஆ) இடம்:* சுந்தரேசுவரர் கோயில் முகமண்டபம், இடப்புறத் தூண், மேற்கு முகப்பு.

*காலம்: கி. பி. 1186.*

*செய்தி:* குன்றக்குடித் திருமலை உடையார் தேனாற்று நாயகருக்கு உய்யவந்தான் கண்டனான காங்கேயன் தியாக மீகாமன் என்போன், சுவாமிக்குரிய நிவேதன அமுதுக்கு, குன்றக்குடி வயல் முதலாகப் பலவூர்களில் அமைந்த நன்செய்களில் இறையிலி தேவதானமாக மிகுதிக் குறை ஏழுமாவும் சின்னமுமாக நிலமளித்துள்ளான்.

## 6. மூன்றும் குலோத்துங்கன்

(*கி. பி, 1178 – 1218*) காலக் கல்வெட்டு.

(*அ*) *இடம்:* அண்ணுமலையார் கோவில் முக மண்டபத்தைச் சார்ந்து முன்புறம் அமைக்கப்பட்டுள்ள கல் மண்டபத்தின் உள் சுவர்ப்பகுதி, மேற்குப் புறமுள்ளது.

*காலம்: கி. பி. 1194*

*செய்தி:* திருக்குன்றக்குடி, தேனுற்று நாயகர்க்கு, அமுதுபடிக் குரிய நிவந்தமாக ஸ்ரீ செயதரனுன காங்கேயன் என்னும் அரசியல் அதிகாரி வெழுவூர் வயலில் தமக்குரிய நிலப்பகுதியைத் தேவதானமாகக் கொடுத்துள்ளான்.

## 7. மாறவர்மன் சுந்தர பாண்டியன்

(*கி. பி. 1216 – 1238*) காலக் கல்வெட்டுக்கள்.

(*அ*) *இடம்:* அண்ணுமலையார் கோயில் முக மண்டபம், வலது புறத்தூண், கிழக்கு முகப்பு:

*காலம்: கி. பி. 1224*

*செய்தி:* நியமத்துக்கண்டன்ஆளுடையானுன கல்வாயில் நாடாழ்வான் என்பான் திருக் குன்றக்குடி தேனுற்று நாயகர் கோயிலில், சாக்களூர் பொற்பதி பரியனுர் செழிய சிங்க பந்மன் எழுந்தருளுவித்த க்ஷேத்ரபால பிள்ளையாற்கு திருவமுது உள்ளிட்ட நித்த வழிபாட்டு நிமந்தங்களுக்கு, குன்றக்குடி வயலில் அரியாம வயக்கலான வடுகன் வயக்கல் நிலத்திலும் மாத்திறல் நல்லூர் வயலிலும் நில நிவந்தம் செய்துள்ளான்.

*குறிப்பு:* இக்குடைவரைக் கோயிலின் வலப்புறம் முன்னேக்கி அமைந்துள்ள பாறையின் முகப்பில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப் பெற்றுள்ள விநாயகரே "க்ஷேத்ரபாலபிள்ளையார்" ஆவார் என்பதும், நடுவிற் கோயில் எனப்படும் இக்குடைவரைக் குரிய இறைவனே "தேனுற்று நாயகர்" என்ற பழைய பெயருக்கு உரியவர் என்பதும் கோயில் "மாசிலீச்சுரம் என்று பெயர் பெறும் என்பதும் தெரிகிறது.

ஆ) *இடம்:* அண்ணுமலையார் கோயில் முக மண்டபம் (வலப்புறம் சுவர்த் தூண் முகப்பிலுள்ளது.

*காலம்:* கி.பி. 1224

*செய்தி:* கோயிலில் எழுந்தருளியுள்ள க்ஷேத்திரபால பிள்ளையார்க்கு அதளையூர் நாடாழ்வான் அமுதுபடி உள்ளிட்ட நித்திய வழிபாட்டிற்கு திருக் குன்றக்குடி வயலில் நிலம் அளித்துள்ளான்.

(இ) இடம் மலைக் கொழுந்து நாதர் முக மண்டபம் வலது புறத் தூண், வலது பக்கம்.

*காலம்:* கி. பி. 1224

*செய்தி:* அதளையூர் நாட்டுத் தேனாற்றுப் போக்கிலுள்ள சிற்றூர்கள் அளக்கப்பட்டு, அதன் வருவாயாக நெல் தேவதானமாக அளிக்கப்பட்டது.

(ஈ) இடம்: நடுவிலுள்ள அண்ணாமலையார் கோயில் முக மண்டபம் இடப்புறத்தூண் உள் முகப்பிலிருந்து தொடரும் கல்வெட்டு.

*காலம்:* கி. பி. 1225

*செய்தி:* மாறவர்மன் சுந்தரபாண்டியன், மூன்றும் இராச ராசன் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1219) சோணாட்டின்மீது படையெடுத்துச் சென்று உறையூர், தஞ்சை, பழையாறை ஆகிய சோழரின் தலை நகரங்களை அழித்துத் தரைமட்டமாக்கிய செய்திகளுடன் பாண்டியன் பொன்னமராபதியில் தங்கியிருந்தபோது தன்பால் அடைக்கலமாகப் பணிந்த சோழனுக்கு மீண்டும் நாட்டை வழங்கி, "சோணாடு வழிங்கியருளிய சுந்தர பாண்டியத் தேவர்" என்னும் சிறப்புப் பெயார் பெற்றதனையும் விளக்கமாகக் கூறும் வரலாற்றுச் சிறப்பமைந்த மெய்க்கீர்த்தி.

## 8. சடையவர்மன் சுந்தரபாண்டியன்

(*கி. பி. 1251–1271*) காலக் கல்வெட்டு

(அ) இடம்: அண்ணாமலையார் (தேனாற்றுநாதர்) குடைவரைக் கோயில் வலப்புறம் வளர்ந்துள்ள சரிவுப்பாறைமுகப்பில் அமைக்கப்பட்டுள்ள க்ஷேத்திர பால பிள்ளையார்க்கு இடப்புறச் சுவர்.

*காலம்:* கி. பி. 1260.

*செய்தி:* தேனுற்று நாயகர் மடத்துக்குப் பிக்ஷமடாபத்யமாக நாட்டவர் மடப்புறமாக இறையிலி நிலம் அளித்துள்ளனர்.

9. *இடம்:* சுந்தரேசுவரர் கோயில் வலதுபுறச் சுவரின் கீழ்ப்பகுதி

*காலம்:* இற்றைக்கு 225 ஆண்டுகளுக்குமுன் (ஆங்கிரச ஆண்டு).

*செய்தி:* குன்றக்குடிக்கோயில் சுப்பிரமணிய சுவாமிக்கு அர்த்த சாம வழிபாட்டுக்கு நிவந்தமாக நடுவுக்கோட்டை ஊரார் குடிக்கு ஒரு பணம் தருமம் கொடுத்துள்ளனர்.

## இக்கல்வெட்டுக்களால் அறியப்பெறும் குறிப்பிடத் தக்க செய்திகள்:

1. இங்குள்ள வட்டெழுத்துக் கல்வெட்டால் கீழக்கோயில் 'மாசிலீச்சுரம்' என்று வழங்கப்பெற்றது.
2. இத்திருத்தலம் 'திருக்குன்றக்குடி' 'குன்றக்குடி' என்று பழங்காலம் முதலே வழங்கப்பெற்று வருகிறது.
3. இத்தலம் எட்டாம் நூற்றுண்டிலிருந்து தொடர்ந்து புகழ் பெற்று விளங்கி வருகிறது.
4. க்ஷேத்திர பாலவிநாயகரை எழுந்தருளிவித்தவன் சாக்களூர் பொற்பதி பரியனுர் செழிய சிங்கபந்மனன்.
5. கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டில் பாண்டிய நாட்டில் மரக்கலப்படை இருந்தது; மரக்கல வாணிபம் நடை பெற்றது;
6. முதலாம் இராசராச சோழனின் மிகப்பெரிய வெற்றிச்செய்தி உறுதிப்படுகிறது.
7. மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோணுட்டின் மீது படை யெடுத்துச் சென்று வெற்றி பெற்றது உறுதிப்படுகிறது.

★

அருணகிரிநாத சுவாமிகள் அருளிய

# குன்றக்குடித் திருப்புகழ்

★

அழகெ றிந்த சந்த்ர முகவ டங்க லந்த
அமுத புஞ்ச இன்சொல் மொழியாலே
அடிது வண்ட தண்டை கலிலெ னுஞ்சி லம்பொ
டணிச தங்கை கொஞ்சு நடையாலே
சுழியெ றிந்து நெஞ்சு சுழல நஞ்ச ணைந்து
தொடுமி ரண்டு கண்க ளதனாலே
துணைநெ ருங்கு கொங்கை மருவு கின்ற பெண்கள்
துயரை யென்றொ ழிந்து விடுவேனோ

எழுது கும்ப கன்பின் இளைய தம்பி நம்பி
எதிர டைந்தி றைஞ்சல் புரிபோதே
இதம கிழ்ந்தி லங்கை அசுர ரந்த ரங்கம்
ஒழிய வென்ற கொண்டல் மருகோனே
மழுவு கந்த செங்கை அரனு கந்தி றைஞ்ச
மனுவி யம்பி நின்ற குருநாதா
வளமி குந்த குன்ற நகர்பு ரந்து துங்க
மலைவி ளங்க வந்த பெருமாளே. (1)

ககுபநிலை குலையஇகல் மிகுபகடின் வலியுடைய
தந்தத்தி னைத்தடிவ சொந்தத் திரத்தையுள
அகிலமறை புகழ்பரமர் நெகிழிகல கலகலெனும்
அம்பொற் பதத்தர்தனு வம்பொற் பொருப்படர்வ
களபபரி மளமெழுகும் எழிலில் முழு குவமுளரி
அஞ்சப் புடைத்தெழுவ வஞ்சக் கருத்துமத னபிஷேகம்

கடிவபடு கொலையிடுவ கொடியமுக படமணிவ
இன்பச் சுடர்க்கனக கும்பத் தரச்செருவ
பிருதிபுள கிதசுகமு மிருதுளமும் வளரிளைஞர்
புந்திக் கிடர்தருவ பந்தித் தகச்சடர்வ
கயல்மகர நிகரமிக வியன்மருவு நதியில்முதிர்
சங்கிப்பி முத்தணிவ பொங்கிக் கனத்தெளிர்வ முலைமாதர்

வகுளமலர் குவளைஇதழ் தருமணமு மிருகமத
 மொன்றிக்க ருத்துமுகில் வென்றிட்டு நெய்த்தகுழல்
அசையருசி அமுர்தக்ருத வசியமொழி மயில்குயிலெ
 னும்புட் குரற்பகர வம்புற்ற மற்புரிய
வருமறலி யரணமொடு முடுகுசமர் விழியிணைகள்
 கன்றிச் சிவக்கமகிழ் நன்றிச் சமத்துநக நுதிரேகை

வகைவகைமெ யுறவளைகள் கழலஇடை துவளஇதழ்
 உண்டுட்ப்ர மிக்கநசை கொண்டுற் றணைச்தவதி
செங்கலவி வலையிலென தறிவுடைய கலைபடுதல்
 உந்திப் பிறப்பறநி னைந்திட்ட முற்றுனடி
வயலிநகர் முருகசெரு முயல்பனிரு கரகுமர
 துன்றட்ட சிட்டகுண குன்றச்கு டிக்கதிப அருளாதோ
தகுகுதகு தகுதகுகு திகுகுதிகு திகுதிகுகு
 தங்குத் தகுத்தககு திங்குத் திகுத்திகிகு
சகணசக சகசகண செகணசெக செகசெகண
 சங்கச் சகசகண செங்கச்செ கச்செகண
தனனதன தனதனன தெனனதென தெனதெனன
 தந்தத்த னத்தனன தெந்தத்தெ னத்தெனன தனனுனு

தகுததகு தகுதகுதி திகுதிதிகு திகுதிகுகுதி
 தங்குத் தகுத்தகுகு திங்குத் திகுத்திகுகு
டணணட டணடணண டிணிணிடிணி டிணடிணிணி
 டண்டட்ட டட்டடண டிண்டிட்டி டிட்டிடிணி
தரரதர தரதரர திரிரிதிரி திரிதிரிரி
 தன்றத் தரத்தரர தின்றித் திரித்திரிரி எனதாளம்

தொகுதிவெகு முரசுகர டிகைதமரு முழவுதவில்
 தம்பட்ட மத்தளம்இ னம்பட் டடக்கைபறை
பதலைபல திமிலைமுத லதிரவுதிர் பெரியதலை
 மண்டைத் திரட்பருகு சண்டைத் திரட்கழுகு
துடர்நிபிட கருடனடத் தரகரட மொகுமொகென
 வந்துற்றி டக்குடர்நி ணந்துற்றி சைத்ததிர முதுபேய்கள்

சுனகனரி நெறுநெறென வினிதினிது தினவினைசெய்
 வெங்குக் குடத்தகொடி துங்குக் குகுக்குகென
வடனமிடு திசைபரவி நடனமிட அடலிரவி
 திங்கட்ப்ர பைங்கதிர்கள் மங்கப்ப்ர சித்தகுல
துரககஜ ரதகடக முரணரண நிருதர்விறல்
 மிண்டைக் குலைத்தமர்செய்து அண்டர்க் குரத்தையருள்
 பெருமாளே. (2)

கடினதட கும்ப நேரென வள நமிகு கொங்கை மேல்விழு
 கலவிதரு கின்ற பாதரொ டுறவாடிக்
கன அளக பந்தி யாகிய நிழல்தனிலி ருந்து தேனுமிழ்
 கனிஇதழை மென்று தாடனை செயலாலே
துடியிடைநு டங்க வாள்விழி குழைபொரநி ரம்ப மூடிய
 துகில்நெகிழ வண்டு கோகில மயில்காடை
தொனியெழவி ழைந்துகூரிய கொடுநகமி சைந்துதோள்மிசை
 துயிலவச இன்ப மேவுதல் ஒழிவேனே

இடிமுரச றைந்து பூசல்செய் அசுரர்கள்மு றிந்து தூளெழ
 எழுகடல்ப யந்து கோவென அதிகோப
எமபடரும் என்செய் வோமென நடுநடுந டுங்க வேல்விடு
 இரணமுக சண்ட மாருத மயிலோனே
வடிவுடைய அம்பி காபதி கணபதிசி றந்து வாழ்தட
 வயலி நகர் குன்ற மாநகர் உறைவோனே
வகைவகைபு கழ்ந்து வாசவன் அரிபிரமர் சந்த்ர சூரியர்
 வழிபடுதல் கண்டு வாழ்வருள் பெருமாளே. (3)

நேசா சாரா டம்பர மட்டைகள்
 பேசா தேயே சுங்கள மட்டைகள்
 நீசா ளோடே யும்பழ கிக்கவர் பொருளாலே
நீயே நானே யென்றொரு சத்தியம்
 வாய்கூ சாதோ துங்கப டத்திகள்
 நேரா லேதான் நின்று பிலுக்கிகள் எவர்மேலும்
ஆசா பாசா தொந்தரை யிட்டவர்
 மேல்வீழ் வார்பால் சண்டிகள் கட்டழ
 காயே மீதோ லெங்கு மினுக்கிகள் வெகுமோகம்
ஆகா தாவே சந்தரு திப்பொழு
 தோகோ வாவா என்று பகட்டிகள்
 ஆகா மோகா வம்பிகள் கிட்டிலும் உறவாமோ
பேசா தேபோய் நின்றுறி யில்தயிர்
 வாயா வாவா என்று குடித்தருள்
 பேரா லேநீள் கஞ்சன் விடுத்தெதிர் வருதூது

பேழ்வாய் வேதா ளம்பக டைப்பகு
வாய்நீள் மாநு ளுஞ்சர ளத்தொடு
பேயா னுள்போர் வென்றெதி ரிட்டவன் மருகோனே
மாதூ டாடா டும்பகை யைப்பகை
சூரா ளோடே வன்செரு வைச்செறு
மாதூ ராபா ரெங்கும் அருட்பொலி முருகோனே
வானு டேழ்நா டும்புகழ் பெற்றிடு
தேனு றேசூழ் தூங்க மலைப்பதி
மாயூ ராவாழ் குன்றை தழைத்தருள் பெருமானே (4)

பிறர்புக ழின்சொல் பயிலுமி ளந்தைப்
பருவ மதன்கைச் சிலையாலே
பிறவித ருஞ்சிக் கதுபெரு கும்பொய்ப்
பெருவ ழி சென்றக் குணமேவிச்
சிறுமைபொ ருந்திப் பெரு மைமுடங்கிச்
செயலு மழிந்தற் பமதான
தெரிவையர் தம்கட் கயலைவி ரும்பிச்
சிலசில பங்கப் படலாமோ
கெறுவித வஞ்சக் கபடமொ டெண்டிக்
கிலுமெதிர் சண்டைக் கெழுசூரன்
கிளையுடன் மங்கத் தலைமுடி சிந்தக்
கிழிபட துன்றிப் பொருதோனே
குறுமுனி இன்பப் பொருள்பெற அன்றுற்
பனமனு வுஞ்சொற் குருநாதா
குலகிரி துங்கக் கிரியுயர் குன்றக்
குடிவளர் கந்தப் பெருமாளே (5)

தவள மதியம் எறிக்கும் தணலாலே
சரச மதனன் விடுக்கும் கணையாலே
கவன மிகவும் உரைக்கும் குயிலாலே
கருதி மிகவும் மயக்கம் படவோ நான்
பவள நிகரும் இதழ்ப்பைங் குறமானின்

பரிய வரையை நிகர்க்கும் தனமேவும்
திவளு மணிகள் கிடக்கும் திருமார்பா
திகழுமயிலின் மலைக்கண் பெருமாளே (6)

நாமேவு குயிலாலு மாமாரன் அயிலாலு
நாடோறு மதிகாயும் வெயிலாலும்
நார்மாதர் வசையாலும் வேய்ஊதும் இசையாலும்
நாடாசை தருமோக வலையூடே
ஏமாறி முழுநாளு மாலாகி விருதாவி
லேவாரும் விழிமாதர் துயரூடே
ஏகாமல் அழியாத மேலான பதமீதில்
ஏகீயுன் உடன்மேவ அருள்தாராய்
தாமோக முடன்ஊறு பால்தேடி உரலூடு
தானேறி விளையாடும் ஒரு போதில்
தாயாக வருசோதை காணது களவாடு
தாமோத ரன்முராரி மருகோனே
மாமாது வனமாது கார்மேவு சிலைமாது
மாலாகி விளையாடு புயவீரா
வானுடு புகழ்நாடு தேனூறு புடைசூழு
மாயூர கிரிமேவு பெருமானே (7)

ஃ ஊனே தானு ஓயா நோயால்
ஊசாடு ஊசற் குடில்பேணு
ஓதா மோதா வாதா காதே
லோகா சாரத்து உளம்வேருய்
நானே நீயாய் நீயே நானுய்
நானு வேதப் பொருளாலும்
நாடா வீடா யீடே ருதே
நாயேன் மாயக் கடவேனு
வானே சாலே தீயே நீரே
பாரே பாருக்கு உரியோனே
மாயா மானே கோனே மானுர்
வாழ்வே கோழிக் கொடியோனே
தேனே தேனீள் கானு ருய்வீழி
தேசார் சாரல் கிரியோனே
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் பெருமாளே, (8)

---

ஃ *இப்பாடலைப் பொதுப்பகுதியில் இணைத்துள்ளனர். ஆயினும் இது குன்றக்குடிக்குரிய தென்பது தணிகைமணி. இராவ்பகதூர் செங்கல் வராயபிள்ளை அவர்களின் கருத்து*

அருட்டிரு. பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருளிய

# திருக்குன்றக்குடிப்பதிகம்

(பண்: காந்தாரம்)

பூமுடி விண்ணவர் வாழ்வும் பூதல மன்னவர் வாழ்வும்
தூமுடி நாகர்கள் வாழ்வும் சுந்தர, நின்னடி யார்கள்
தாமுறு வாழ்வினுக் கேஒர் சற்றும்நேர் ஆகுமோ! நாகர்
கோமுனி வோர்தொழும் கோவே குன்றக் குடியுறை தேவே! (1)

ஆறுசு மயங்கள் எங்கும் ஆனந்த மாய்விளை யாடி
ஈறு முதல்நடு வேதும் இலா(து)அவிர் உன்னடி நேடி
நீறணி தொண்டர்கள் வாழ்வே நித்தியம் என்றொரு வாய்மை
கூறு மறைபுகழ் கோவே! குன்றக் குடியுறை தேவே! (2)

நாசமில் லாஉயி ரெல்லாம் நற்கதி சேரஎன் றேஒர்
மாசில் உருக்கொண்(டு) அங்கங்கு மன்னுதிருக்கோவில் கொண்டு
தேசிக னுய்அவிர் அன்பைச் சிந்தையில் வைத்துள்ள என்றன்
கூசல் அறுத்தருள் கோவே! குன்றக் குடியுறை தேவே! (3)

ஆதிய னுதியும் நீயாய் அண்டகோடி எங்கும் நீயாய்த்
தீதில் உயிர்க்குயிர் நீயாய்த் திகழ்ஒரு பூரணம் தன்னை
மேதினி மீ(து)உள்கு வோரே விஞ்(சு)அறி(வு) ஆக்கம் உள்ளோர்
[கள்
கோதில் வெயில்அயிற் கோவே! குன்றக்குடியுறை தேவே (4)

மாவலர்க் கொந்தள வள்ளி மையலிற் சிக்கிய மாயக்
காவல! உன்னடி யாரைக் கண்டவர்க்கும் துயர் தீரும்
தாவில் அகங்குளிர் கொள்ளும் சத்திய கேவலம் விள்ளும்
கூவியழுங் கும்என் கோவே! குன்றக் குடியுறை தேவே. (5)

எட்டுருத் தெய்வமும் நீயே எட்டுக்(கு) அதீதமு மாயே
தட்டுப் படாத அதீத சாமியும் நீயென ஓர்வார்
முட்டுப் படாமல்வந்(து)என்றும் முற்றுச்செயும் அருட்பொன்னைக்
கொட்டிக் கொடுக்கின்ற கோவே! குன்றக் குடியுறை தேவே! (6)

பாட்டின் உனைப்புகழ்ந் தேமண் பாட்டை ஒழித்துள்ள அன்பர்
நாட்டில் இருக்கினும் காட்டை நண்ணி இருக்கினும் அன்றே
கேட்டதெல் லாம்அளித் தென்றும் கேடில்அரும் பொருள் தன்னைக்
கூட்டிக் கொடுத்திடும் கோவே! குன்றக் குடியுறை தேவே (7)

ஈடில் இணைமலர்த் தாள்கள் எண்ணுவ தும் கழல் அன்பர்
தேடொரு ஞானமும் நல்லோர் சேர்க்கை யுமேநிலை யாம்என்(று)
ஓ(டு)இழி சிந்தையை வாங்கி உன்னும் மகாசிவ யோகிற்
கூடிய ளாவொரு கோவே! குன்றக் குடியுறை தேவே! (8)

சுக்கில ஆக்கையி னுள்ளே சூழுமல இருளுள்ளே
பக்குவம் இன்றிஎந் நாளும் பந்தப்பட் டேயுள்ள என்னைச்
சிக்கென வேபற்ற வந்து திருத்திய உன்பதம் ஈதி!
குக்குட கேதனக் கோவே! குன்றக் குடியுறை தேவே! (9)

நற்றமிழ் பாடுநக் கீரன் ஞான வெளி அனு பூதி
சொற்றவ னேத்தரு ளோனே! தோகை மயிற்பரி யானே!
இற்றை எனக் கருள் வோனே! எங்கள் சிவபெரு மானே!
குற்ற மி லாமறைக் கோவே! குன்றக்குடியுறை தேவே! 10

மதுரகவி ஆண்டவன் என்னும்
முத்தய்யப் பாவலர் பாடிய

# மா த ப் ப தி க ம்

## சித்திரை

சித்தியைப் பெற்றுச் சிவானந்தம் என்னும் திறமறிந்து
பத்தியும் பெற்றுப் பதம்மேவி முத்திப் பலனடைந்து
நித்தியம் தன்னில் நிறைந்திடும் சோதி நெறியிலுறச்
சித்திரை மாதம் வருவாய் சிகிமலைச் சேவகனே! 1

## வைகாசி

மைகார் எனச்செறி கூந்தலில் புட்ப மதை முடித்துக்
கைகாலை ஆட்டிக் கடைக்கண்ணை வீசிக் கனதனத்தில்
வைகா(சு) எனச்சொலும் மங்கையர் காதல் மறுப்பதற்கு
வைகாசி மாதம் வருவாய் சிகிமலை மாணிக்கமே! 2

## ஆனி

வானிலை ஆதிப் புனல்வாரி யோடு மதிஇரவி
மேனிலை யாவும் நினைத்துப் புரந்திடு வேலவ! நின்
பானிலை யான மதிதனை நெஞ்சினிற் பற்றுதற்கே
ஆனிநன் மாதம் வருவாய் சிகிமலை ஆண்டவனே! 3

## ஆடி

வாடிப் பதம்தரு மார்க்கம் உருது மதிமயங்கித்
தேடிப் பலதிசை சென்றுசென்றே எங்கும் திரிந்தலைந்தேன்
நாடித் திரிந்திடு ஞானத்தை நேரில் நவில்வதற்கே
ஆடிக்(கு) எழுந்து வருவாய் சிகிமலை ஆண்டவனே! (4)

## ஆவணி

பூவணி யானதைச் சாற்றிடில் வாடும்; புதுமையுள்ள
பாவணி என்பதைச் சூட்டிஉன் தோளில், பதம்பணிந்தேன்!
மாவணி தோண மயிலேறி நல்ல வரமளிக்க
ஆவணி மாதம் வருவாய் சிகிமலை ஆண்டவனே! (5)

## புரட்டாசி

துரட்டான பந்தத் தினில்மூழ்கி யான்இந்தத் தொல்லுலகில்
திரட்டான பாவச் சுமைதனைத் தூக்கித் திரிந்தலைந்தேன்
மிரட்டாது காலன் வெகுண்டோடச் செய்ய விரைவில் இங்(கு)ப்
புரட்டாசி மாதம் வருவாய் சிகிமலைப் புண்ணியனே! (6)

## ஐப்பசி

பற்பல வாகிய செய்கையை நாடிப் பலதினமும்
கற்பனை யானதுர்க் கர்மங்கள் செய்து கருத் தொழிந்தேன்
சிற்பர! உன்றனைச் சேவித்து நானும் செழிப்பதற்கே
அற்பசி மாதம் வருவாய் சிகிமலை ஆண்டவனே! (7)

## கார்த்திகை

ஆர்த்திடும் சூரை அயிலைவிட்(டு ஏவி அரைக்கணத்தில்)
ஈர்த்ததைப் பாதி மயிலாக ஏறிப்பின் எஞ்சியதைத்
தேர்க்கொடி யாக்கித் தினம்பணி கொண்டிடும் சேவகனே!
கார்த்திகை மாதம் வருவாய் சிகிமலைக் கந்தப்பனே! (8)

## மார்கழி

ஆர்கலி வாரணத் தான்தந்த யானையை அன்று மணந்
தீர்! முனி யானவன் சொல்லிய தேவியைச் சிந்தையுன்னி
நேர்சென்று சூட்சியி னற்கொண்ட நின்மல! நீ இரங்கி
மார்கழி மாதம் வருவாய் சிகிமலை மாணிக்கமே! (9)

### தை

பையர(வு) ஆறு மதிசூடும் ஈசன் பரிந்தளித்த
ஐயெனக்(கு) ஆரும் உறவில்லை என்ப(து) அறிந்திருப்பாய்
மையென்ப யாவையும் நீக்கிநன் னீதியில் வைப்பதற்குத்
தையென்னும் மாதம் வருவாய் சிகிமலைச் சண்முகனே! (10)

### மாசி

ஊசியில் ஏறிச் செய்யும்தவம் தன்னில் உறுதியுண்டோ?
நாசியின் வாயுவைக் கண்டுணர்ந்(து) ஆதி நடுவறிந்து
வாசியைப் பற்றி அமுதூறல் உண்டு மகிழ்வதற்கு
மாசிநன் மாதம் வருவாய் சிகிமலை மாணிக்கமே! (11)

### பங்குனி

எங்குநிற் பாய்என எந்நாளும் ஏங்கி இளைத்து விட்டேன்
செங்கையில் வேலைப் பிடித்(து) அன்னை மாரொடு செந்திலனே!
இங்குன்னைக் காண மயில்மீதில் ஏறி எழுந்தருளிப்
பங்குனி மாதம் வருவாய் மயூரப் பரம்பரனே! (12)

# வாரப்பதிகம்

### ஞாயிற்றுக்கிழமை.

வாதிக்கும் ஐங்கணை வல்லபம் மாற்றிஅம் மன்மதனை
நீதிக்(கு) உடன்படப் பாசப் பிணிப்பை நெகிழ்த்துவிடச்
சோதிக்(கு) ஒருகுரு வாய்வந்த கந்த நின் தோகையின் மேல்
ஆதித்த வாரம் வருவாய் சிகிமலை ஆண்டவனே! (1)

### திங்கட்கிழமை

பங்கப் படுந்துய பஞ்சினை யொத்துப் பரதவித்துச்
சிங்கத்(து) இறைகையிற் சிக்கிடு மாவெனச் சீர்நிறைந்த
மங்கைப் படுவலை (யுற்று) உழ லாது மதிதரவே
திங்கட் கிழமை வருவாய் சிகிமலைச் சேவகனே! (2)

## செவ்வாய்க் கிழமை

அவ்வைக் கெதிரில்வெந் நாவலில் நின்ற அறுமுக! நின்
கவ்வைத் தினந்தொறும் கண்டுசு கானந்தக் காட்சியுறும்
உவ்வைப் பெறும்படி நீயுன்னி மஞ்ஞை தனில்உவந்து
செவ்வாய்க் கிழமை வருவாய் சிகிமலைச் சேவகனே! (3)

## புதன்கிழமை

மதனைப் பழிக்கின்ற ரூபமும் கையில் மணிஅயிலும்
சுதனுக்(கு) அளிக்கும் திருநீறும் கொண்டு தொழுதிடும்என்
விதனத்தை மாற்றித் திருவடி தன்னை விரைந்தளிக்க
புதனுக் கெழுந்து வருவாய் சிகிமலைப் புண்ணியனே! (4)

## வியாழக்கிழமை

தயாள குணத்தை அணியாய் அணிந்திடும் சண்முக! நின்
செயாளுக்(கு) அருங்கனி யாகிய தேவிதெய் வானையெனும்
துயாளைத் தடம்புயம் சேர்த்துநற் ரேகை சுமக்கஇங்கு
வியாழக் கிழமை வருவாய் சிகிமலை வேலவனே! (5)

## வெள்ளிக்கிழமை

சுள்ளித் தருவென நின்றிடும் சூரைத் துளைக்குமைந்த!
புள்ளிக் கலப மிசையேறி என்னிற் புகுந்தவினை,
துள்ளித் தொலைந்திட நல்வரம் ஈந்து சுகப்படுத்த
வெள்ளிக் கிழமை வருவாய் சிகிமலை வேலவனே! (6)

## சனிக்கிழமை

இனிக்கின்ற புத்தமு தானதை உண்(டு)அங்(கு) இடைநடுவில்
தொனிக்கின்ற தோற்றத்தைக் கேட்(டு)இன்ப முற்றுச்சுகமதனில்
உனிக்கொள்ளும் தன்மை உதவிஉன் பாதம் உவந்தளிக்கச்
சனிக்கொரு போது வருவாய் சிகிமலைச் சண்முகனே! (7)

★

---

*அன்பர்கள், அந்தந்த மாதத்துக்குரிய மாதப் பாடலையும், அந்தந்த நாளுக்குரிய கிழமைப் பாடலையும் முறையாகப் பாராயணம் செய்தால் இருமைநலங்களும் எய்துவர்*

# 1978- 1979 திருப்பணி

அருள்வடிவாயிலங்கும் அருள் தரு. சண்முகநாதன் திருக்கோவில், மன்னர்களாலும், பெருமக்கள் பலராலும் திருப் பணிகள் செய்யப் பெற்றது என்பதை அறிவோம்.

முப்பத்தொன்பது ஆண்டுகளுக்குமுன் சில்லரைப் பழுது கள் பார்க்கப் பெற்று 24-6-1940 இல் திருக்குட நன்னீராட்டு விழா நடை பெற்றது. இத்திருக் கோயிலைப் புதுப்பித்துத் திருக்குட நன்னீராட்டு விழா நிகழ்த்த வேண்டுமென 45- ஆவது மகா சந்நிதானம் திருவருள் திரு. தெய்வ சிகாமணி அருணுசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு. குன்றக்குடி அடிகளார்) அவர்கள் திருவுள்ளம் பற்றினுர்கள். சண்முகநாதன்பால் மிக்க பேரன்புடைய பெருமக்கள் பலர் உள்ளிட்ட திருப்பணி-திருக்குட நன்னீராட்டு விழாக்குழு 1978 ஆண்டில் அமைக்கப்-பெற்றது. இக்குழுவின் செயலாளர்களாகக் காரைக்குடி திரு. மெ. நா. சித. சிதம்பரம் செட்டியார் அவர்களும், திரு. மெ. நா. சித. முத்துராமன் செட்டியார் அவர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அவர்கள் இருவரும் திருப்பணியில் மிக்க ஆர்வத் துடன் ஈடுபட்டுத் தொண்டு புரிந்தனர்.

திருவருள் திரு. மகா சந்நிதானம் அவர்கள் திருவுள்ளப் பாங்கின் வண்ணம் அடியிற் கண்ட திருப்பணிகள் நடை பெற்றுள்ளன.

(1) கீழராத வீதி முகப்புப் பெருவாயில் அலங்கார வளைவு புதுப்பித்து வண்ண்ம் தீட்டப் பெற்றுள்ளது. (2) முகப்புப் பெரு வாயில் பெரிய தகரக் கொட்டகை வண்ணம் பூசப் பெற்றுள்ளது. (3)அருள்மிகு. தோகையடி விநாயகர் கோயில் புதுப்பிக்கப் பெற்று விமானத்திற்கு வண்ணம் தீட்டப் பெற்றுள்ளது. (4)திட்டி சுற்றி மண்டபம் புதுப்பிக்கப் பெற்றுள்ளது. (5) மலை நுழை வாயில் மண்டபம் புதுப்பித்து, அதன் முகப்பில் இருந்த சுதை வடிவங்கள் சீர் செய்து வண்ணம் தீட்டப் பெற்றுள்ளன. (6)கார்த்திகைப்பிள்ளையார் மண்டபம் புதுப்பிக்கப் பெற்றுள்ளது. (7)கார்த்திகைப் பிள்ளையார் கோயில் புதுப்பிக்கப் பெற்று, அதன் விமானம் வண்ணந் தீட்டப் பெற்றுள்ளது. (8) மலை நுழை வாயில் மூன்ருவது மண்டபம் புதுப்பிக்கப் பெற்றுள்ளது. (9)நுழை

வாயில் மூன்ருவதுமண்டபத்துக்கும், அதற்கு மேலேயுள்ள தண்ணீர்ப்பந்தல் மண்டபத்துக்கும் இடையில் மலையிலிருந்து கிழக்கு முகமாக செ. கா அன்னசத்திரத்துக்கு வடபால் கீழரத வீதியை இணைத்து மற்ருெரு புதியபாதை அமைக்கப் பெற்றுள்ளது. இந்தப் பாதைக்குப்புதியபடிகள் அமைக்கப்பெற்றுள்ளன. இந்தப்பாதை உருவாகும்போது, பாதைவழியிலிருக்கும் பெரியகிணறுதடையாக இருந்தது. அதனுல் இந்தக்கிணற்றின் மேல்வாயிலின் மேல்பலகைகற்கள் பரப்பிமிகவும் சுருக்கி அமைத்து அதற்குக்கைப்பிடிச்சுவர் கட்டப்பெற்றுள்ளது. இந்த கிணற்றுக்குப்பக்கத்தில் குடி தண்ணீருக்கு இறைவை இயந்திரம் அமைத்து அதற்குத்தனி அறையும் கட்டப்பெற்றுள்ளது, இந்தப் புதியபாதை அமைப்பில் தண்ணீர்ப் பந்தல் மண்டபத்திற்கும், புதிய பாதை தொடங்கும் இடத்திற்கும் இடையே ஏற்பட்ட தொய்வை நிறைத்துப் புதிய படிக்கட்டு அமைக்கப் பெற்றுள்ளது. (10) தண்ணீர்ப்பந்தல் மண்டபத்தில் உட்பகுதியிலிருந்த மேடையை நீக்கி-மக்கள் போக்குவரத்துக்கு வசதிக்காக மற்றுமொரு பாதை அமைக்கப்பெற்றுள்ளது. இதன் படிகள் புதிதாக உருவாக்கப் பெற்றவை. (11) தண்ணீர்ப்பந்தல் மண்டபம் புதிப்பிக்கப் பெற்றுள்ளது. (12) தண்ணீர்ப் பந்தல் மண்டபத்தை யொட்டி மேலே பிரசாத விற்பனைக் கூடமும், பரிவட்ட அறையும் புதிதாகக் கட்டப் பெற்றுள்ளன. தண்ணீர்ப் பந்தல் மண்டபத்திற்கு மேலே, சண்முகநாதர் சுதை வடிவமுகப்புடன் விளங்கும் வெளிப்புற வாயிலுக்குக் கீழே, மணிமண்டபத்திற்குக் கிழக்கே உள்ள படிக்கட்டு கிழக்குப் பகுதியில் செம்பாதி அகலப்படுத்தப்பெற்றுள்ளது, (13) இடும்பன் கோயில் மண்டபம் புதுப்பிக்கப் பெற்றுள்ளது; இடும்பன் கோயில் முன்ருலிருந்த மேடை அகற்றப் பெற்றுப் படிக்கட்டுக்கள் விரிவாக்கப்பெற்றுள்ளன. (14) வல்லப கணபதி கோயில் புதுப்பிக்கப் பெற்று அதன் விமானம் வண்ணம் தீட்டப்பெற்றுள்ளது. (15) துரைராஜு மண்டபம் புதுப்பிக்கப் பெற்றுள்ளது. (17) வீரபாகு சந்நிதிக்குத் தெற்கேயுள்ளசுவரில் சேவல், மயில், ஓம்வடிவங்கள் அமைந்த 'கிரில்' அமைக்கப்பெற்றுள்ளது (18) வீரபாகு சந்நிதிக்குத் தென்பால் அருணகிரிநாத சுவாமிகள் திருவுருவம் புதிதாக எழுந்தருள்விக்கப் பெற்றுள்ளது. (19) வீரபாகு சந்நிதிக்கு வடபால் நால்வர்கோயில் புதிதாக அமைத்து நால்வர் திருவுருவங்கள் எழுந்தருள்விக்கப் பெற்றுள்ளன. (20)வீரபாகு கோயில் புதுப்பிக்கப் பெற்று, அதன் முகப்புச்சுவரில் மொசைக் போடப்பட்டுள்ளது (21) இராச கோபுர வாயிலில் இரு பக்கமும் துவார பாலகர்கள் சுதைகள் அமைக்கப் பெற்று வண்ணம்

தீட்டப் பெற்றுள்ளன. (22) சொர்ண கணபதி கோயில் புதுப்பிக்கப் பெற்றுள்ளது. இக் கோயிலுக்குப் புதிதாக விமானம் அமைத்து, அது வண்ணம் தீட்டப் பெற்றுள்ளது. (23) இராச கோபுரம் நடை வாயில் நேர் வடக்கேயுள்ள படிக்கட்டில் மேலும் ஒருபடி அமைக்கப் பெற்றுள்ளது. (24) மலைக் கோயில் திருச் சுற்று புதுப்பிக்கப் பெற்றுள்ளது. (25) குழந்தை வடிவேலர் சந்நிதி முகப்புச் சுவர் மொசைக் போடப் பெற்றுள்ளது. (26) நிர்மாலியப் பொருள்களை வெளி யேற்றுவதற்கு வடக்குத் திருச்சுற்று வடக்குச் சுவரில் புதிய வாயில் ஒன்று திறக்கப் பெற்று இரும்புக் கதவு அமைக்கப் பெற்றுள்ளது. (27) மூலவர் கோயில் மயில் மண்டபத்திற்கு வடக்கிலும் தெற்கிலும் காற்றோட்ட வசதிக்காக இரண்டு பெரிய எடுத்துக் கட்டி மண்டபங்கள் புதிதாக எழுப்பப் பெற்றுள்ளன. (28) மூலவர் கோயில் தெற்குத் திருச்சுற்று ஏற்படுத்தி, மூலவர் கோயில் தனித் திருச்சுற்றுடையதாக அமைக்கப் பெற்றுள்ளது. (59) நடராசர் கோயில் உட்புறம் பூசப் பெற்று, அதன் சந்நிதி முகப்புச் சுவர் 'மொசைக்' போடப் பெற்றுள்ளது. (30) பைரவர் கோயில் புதுப்பிக்கப் பெற்றுள்ளது. (31) பைரவர் கோயிலுக்குக் கிழக்கே காற்றோட்ட வசதிக்காக வடக்குச் சுவரில் புதிதாகக் 'கிரில்' அமைக்கப் பெற்றுள்ளது. (32) பைரவர் கோயிலுக்குப் பக்கத்தில் இருந்த நவக்கிரகங்கள் திருக்கோயில் மகாமண்டபம் வடக்கு மூலைக்கு நகர்த்தப் பெற்றுக், கொடி மரத்துக்கு அப்பால் பதிட்டை செய்யப் பெற்றுள்ளன. (33) மலைக் கோயிலின் கிழக்குச் சுவரில் மூன்று பெரிய அழகிய 'கிரில்'கள் புதிதாக அமைக்கப்பெற்றுள்ளன. (34) முன்பு ஐந்தாமிடத்திலிருந்த கொடிமரத்தை எடுத்து, கொடி மரம் புதுப்பிக்கப் பெற்று ஏழாமிடத்திற்கு நகர்த்தி அமைக்கப் பெற்றுள்ளது. (35) ஏறத்தாழ 4 அடி உயரமுள்ள, மயில் மண்டபத்தின் தெற்குவடக்கு அகலத்தில் கிழக்குத் திருச்சுற்று வரை நீண்டு மயில் மண்டபம், மகா மண்டபம் முழுதும் பரவியிருந்த மிகப் பெரிய மேடை அகற்றப்பெற்று; வழிபடுவோர்க்குப் பெருமான் திருக்காட்சி சிறப்பாகவும், எளிதாகவும் கிடைக்கும்படி செய்யப் பெற்றுள்ளது. (36) மூலவர் சந்நிதி மகா மண்டபம் கீழ்த்தளப் பரப்பு முழுவதற்கும் புதிதாகத் தளக்கல் பரப்பப் பெற்றுள்ளது. (37) மூலவர் சந்நிதி மயில் மண்டபத்திற்குச் சுற்று மேடை அமைக்கப்பெற்றுள்ளது. (38) மூலவர் சந்நிதிக்கு நேரே, கொடி மரத்துக்கு அப்பால் வரை ஒரு அங்கணம் முழுவதும் கிழக்கு மேற்காக மொசைக் போடப்பெற்றுள்ளது. இதில் வழிபடுவோர் வசதி குறித்து நீண்ட கைப்பிடிக் கம்பி அமைக்கப் பெற்றுள்ளது. (39) சோமாஸ்கந்தர் மண்டபம் உற்சவமூர்த்தி மண்டபத்திற்குத் தெற்கே அமைக்கப் பெற்றுள்ளது. (40) விசுவநாதர் கோவிலுக்குள் விசாலாட்சியம்மையை எழுந்தருளச் செய்வித்துள்ளது (41) மேல் தளத்துக்குச் செல்லும்

வாயிற்படிக்கு மேல்புறம் வில்வஅறை ஒன்று புதிதாக அமைக்கப் பெற்றுள்ளது. (42) உற்சவ மூர்த்தி முன்மண்டபம் மேல் தளம் கல் உத்திரங்கள் பலதெறித்து விட்டதால் மேல் தளம் முழுவதை யும் பிரித்துப் புதிதாகக்கல் உத்திரங்கள் பரப்பிப் புதுப்பிக்கப் பெற்றுள்ளது. (43) மலைக்கோயில் மேல்தளம் முழுவதும் கனம் குறைத்துத் தட்டோடுகள் பரப்பப் பெற்றுள்ளன. (44) மலையின் மேல்தளத்தில் வடபுறம், கீழ்புறம் கைபிடிச்சுவர்கள் உயர்த்தப் பெற்றுத், தென்புறம், மேல்புறம் சுவர்களும் பூசப்பெற்றுள்ளன. (45) மேல்தளம் கைப்பிடிச் சுற்றுச் சுவரைச் சுற்றிலும் ஒவ்வொரு மூலையிலும் ஐந்து பூதங்கள் சுதையால் அமைக்கப்பெற்றுள்ளன. (46) மேல் தளத்தில் இருந்த கார்த்திகை தீப மேடையை அகற்றி விட்டு தேவையான காலத்தில் மட்டும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் உருளைகள் பொருத்தப்பெற்றுக் கார்த்திகைத் தீப மேடை புதிதாகச் செய்யப் பெற்றுள்ளது. மேல் தளம் கனம்குறைப்பதற்காக இவ்வாறு செய்யப்பெற்றுள்ளது. (47 இராஜ கோபுரமும், மற்றுமுள்ள எல்லா விமானங்களும் சுதைகள் பழுது பார்க்கப்பெற்று, வண்ணம் தீட்டப்பெற்றுள்ளன. (48) மலைமீது குடிதண்ணீர் வசதிக்காக மேல் நிலைத் தொட்டி அமைக்கப்பெற்று உள்ளது. (49) மலைமீது பூங்கா அமைப்பதற்கு மலைக்கோயிலுக்கு வடக்கேஇரண்டு மேல்நிலைதொட்டிகள் அமைக்கப்பெற்றுள்ளன அவற்றிற்கு நீர்இறைவைஇயந்திரங்களும் வைக்கப்பெற்றுள்ளன (50) அடிவாரத்திலிருந்து மலைக்கோயில் வரை ஏற்கனவேயிருந்த மின் இணைப்புக்கள் முழுவதையும் அகற்றிவிட்டுப் புதிய மின் இணைப்புச் செய்யப் பெற்றுள்ளது. (51) சண்முகநதி மயில் மண்டபம் புதுப்பித்து வண்ணம் பூசப்பெற்றுள்ளது, (52) மூலவர் அர்த்த மண்டபம் முகப்புச்சுவர் மொசைக்போடப்பெற்றுள்ளது (53) அர்த்தமண்டபம் கீழ்த்தளம் புதிதாகப் போடப் பெற்றுள் ளது. (54) கோயிலின் எல்லாச் சுவர்களும் பழுது பார்க்கப் பெற்றுச் சிமெண்டுப் பூச்சுப் பூசப்பெற்றுள்ளது. (55) கோயில் மண்டபங்களின் ஆங்காங்கே தெறித்துப் போயிருந்த கல் உத்தி ரங்கள் பலவற்றை எடுத்துவிட்டுப் புதிய கல் உத்திரங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. (56) மலையின் கிழக்குப் பகுதியில் மலையோடு சேர்ந்துள்ள கட்டுமலைக்கு ஆறு இடங்களில் மிகப்பெரிய உதகுகள் கட்டிப் பாதுகாக்கப் பட்டுள்ளது; கட்டுமலையில் ஏற்பட்டுருந்த பழுதுகள் சீர்செய்யப் பெற்றுள்ளன மேலும் கோயிலில் பயன்படு பொருள்கள்பல பழுது பார்த்துச் சீர் செய்யப்பெற்றுள்ளன. இவ்வாறு திருத்த முறைத் திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. இத்திருப்பணிக்கு வழக்கம்

போல் நகரத்தார் பெருமக்களில் பெரும்பாலோர் நிதிவழங்கியுள் ளனர். மற்றும் ஆர்வலர்கள் பலர் நிதிவழங்கியுள்ளனர். அறிவுக் கொடையும், உழைப்புக் கொடையும் வழங்கிய பெருமக்கள் பலர். அவர்கள் அனைவரும் தனித்தனியே பாராட்டுதலுக்குரிய வர்கள்; எம்பெருமான் அறுமுகச் செவ்வேளின் திருவருளுக்குப் பாத்திரமானவர்கள்!

மேலும் கீழக்கோயிலில் உள்ள அழகம்மை கோயில், தேனாற்றுநாதர் கோயில் விமானங்கள் தமிழ்நாடு தொல்பொருள் பாதுகாப்புத்துறையினரால் புதுப்பிக்கப் பெற்றுள்ளன. இவ்விழா வையொட்டி தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறையும் கல்லல் ஊராட்சி ஒன்றியமும், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு. சா. சுப்பிரமணியம் அவர்களின் பெருமுயற்சி முதலியவற்றால் வடக்குரதவீதி, தெற்குரதவீதி ஆகிய வீதிகளில் தார்ச்சாலை அமைக்கப் பெற்றுள்ளது. இவ்விழாவை யொட்டி ஆதீனத் திருமடத்துக் கட்டடங்கள், ஆதீனச் செலவில் பழுது பார்க்கப் பெற்றுப், புதுப்பிக்கப் பெற்றுள்ளன.

இத்திருப்பணிகள் நிறைவெய்தி 29-4-1979 இல் திருக்குட நன்னீராட்டு விழா தொடங்கியுள்ளது. மிகப்பெரிய யாகசாலை அமைக்கப்பெற்றுள்ளது. 33 குண்டங்கள் அமைத்து, சிறப்பாக யாகபூசை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மூன்று நாட்கள் 1-5-79 முதல் 2-5-79 வரை சமய, இலக்கிய, இசைவிழா. இவ் விழாவில் தமிழ்நாட்டின் தலைசிறந்த அறிஞர் பெருமக்களும், கலைஞர் பெருமக்களும் பங்கு பெறுகின்றனர். எம்பெருமானின் அருளமுதப்பேராறு பொங்கித் ததும்பி எங்கும் பரவுகிறது. அவனருள் வெள்ளத்தில் திளைத்து, இருமை நலனும் எய்திடச் சேரவாரும் செகத்தீரே!

## தொகுப்புரை:

குன்றக்குடித் திருத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூவகை யாலும் சிறந்து விளங்குகிறது; குன்றுதோறாடலில் முந்தியது, முருகன் திருத்தலங்களில் அழகிய தோற்ற முடையது; அருளிச் செயல்களில் புகழ்பெற்றது; புகழ் நூல்கள் பல பெற்றது; கலைச் சிறப்புடையது; அன்பர்களை யெல்லாம் தன்பால் ஈர்த்து நிற்பது; அருள் கொழிப்பது. இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள அருள்தரு. சண்முக நாதப் பெருமான் அருளை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார். பெருமானை வழிபட்டு அவனருள் பெறுவோமாக.

**வேலும் மயிலும் துணை.**

## சேர்க்கையும் திருத்தமும்.

**பக்கம். 30 எண் 7:**

*24-6-1940* இல் திருக்குட நீராட்டு விழா நடைபெ
என்று திருத்திக் கொள்க.

**பக்கம். 34 எண் 7:**

தைப்பூசத்தேர் இராயவரம் வெ. மு. முரு. சுப்பிரமண
செட்டியார் அவர்களால் *22—1—1918* இல் தொ
*18-3-1918* முகூர்த்தம் செய்து, ரூ. 16000/- செ
வேலை நிறைவேற்றி *14-1-1919* இல் வெள்ளோ
நடைபெற்றது.

**பக்கம். 41**

மார்கழி: கார்த்திகை நாளில் முத்துக்கந்தர் வெள்ளிமயில்
திருவீதியுலாவும், சஷ்டியன்று மகாபிஷேகமும் நி
திருவாதிரை பத்து நாள்களும் உள்ளூர் இசை ஞான
மாதர் சங்க உறுப்பினர்கள் விடியற்காலையில் ப
நோன்பு நோற்கின்றனர்.

தூய்மையான இடமே இறைவன்
கோயில் கொள்ளும் இடம்

திருக் கோயில் வழிபாட்டுக்கு வருவோர்
கடைப் பிடிக்க வேண்டியன.

★ இறைவனையே எண்ணுதல்
★ உடல் தூய்மை, உடைத் தூய்மை
★ வரிசை முறைமையைப் பின் பற்றுதல்
★ அனுமதிச் சீட்டு இருப்பின் அது பெறுதல்
★ திருக்கோயில் இடங்களில் தூய்மை பேணுதல்
★ குப்பைகளை உரிய தொட்டிகளில் இடுதல்
★ மூர்த்திகளுக்குரிய வழிபாட்டுப் பாடல்களைச் சொல்லி வழிபடுதல்
★ விநாயகப் பெருமானை முதலில் வழிபடுதல்
★ மும்முறை வலம் வருதல்
★ சண்டேசுவரரை இறுதியில் வழிபடுதல்
★ நிருமாலியப் பொருள்கள் கீழே கிடப்பின் உரிய இடத்தில் சேர்த்தல்
★ பிரசாதங்களை வரிசையாக நின்று பெறுதல்
★ திருநீறு, குங்குமம் பிரசாதங்களைக் கீழே சிந்தாமல் தத்தம் உடம்பில் பூசிக் கொள்ளுதல்'
★ படையல் பெற்ற கைகளைத் தூணில் துடைக்காமல் தூய்மை பேணுதல்.
★ பெருமான் பெருமையன்றிப் பிறவார்த்தை பேசாமை.

ஸ்ரீ சண்முகநாதன் பிரிண்டர்ஸ், குன்றக்குடி